www.alhasanath.lk

ஜூன் 2012 ரஜப் 1433
மலர்: 38 இதழ்: 06

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية




## அனைத்து இலங்கையரதும் உறைவிடமாகும் பொது சிந்தனை

நேர்வழி பெற்ற மனிதன்...
நேர்வழி செல்லும் இயக்கம்...
நேர்வழிப்படுத்தப்பட்ட சமூகம்...

எகிப்திய ஜனாதிபதித் தேர்தல்: இரண்டாம் சுற்றுக்குக் காத்திருப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணாக்கரே...!

**உங்கள் அறிவுக்கு விருந்தளிக்கும்**
**சிறுவர் கலைக்களஞ்சியம்**
**வெளிவந்துவிட்டது.**

# ஆஃபாக்

## சிறுவர் கலைக்களஞ்சியம்

அரபு, ஆங்கிலம், உருது, ஜேர்மன், நோர்வே ஆகிய மொழிகளில் சர்வதேசத்தில் பிரபலம் பெற்ற ஆஃபாக் சிறுவர் கலைக்களஞ்சியம் இப்போது தமிழில்...

***சர்வதேச தரத்தில் உலகம் தழுவிய தகவல்களை உங்கள் கைகளிலும் சிந்தனையிலும் தவழச் செய்ய இன்றே வாசியுங்கள்...***

**AFAQ**
சிறுவர் கலைக்களஞ்சியம்

- ஒவ்வோர் இதழிலும் ஒவ்வொரு தனித் தலைப்பு
- முழுமையான தகவல்கள்...
- தரமான தாளில்... 8 பக்கங்களில்...
- தரமான அச்சுப் பதிப்பு...
- எளிய தமிழ்...
- பல்வர்ண சித்திரங்கள்...




விலை ரூபா
**50.00**
மட்டுமே

கிடைக்குமிடங்கள்:—

**ISLAMIC BOOK HOUSE**
77, Dematagoda Road,
Colombo - 09

**JMF**
77, Dematagoda Road,
Colombo 09, Tel: 011 2698771, 0777412561

மேலதிக தொடர்புகளுக்கு: **T. Musthaq - 0777 396 306**

INSIGHT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

"(அந்த) மனிதர்களின் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் அல்லாஹ்வை நினைவுகூருவதை விட்டும் தொழுகையை நிலைநாட்டுவது மற்றும் ஸகாத் கொடுப்பதை விட்டும் அவர்களைப் பராமுகமாக்கிவிடாது. உள்ளங்களும் பார்வைகளும் தடுமாறிவிடக்கூடிய நாளைப் பற்றி அவர்கள் அஞ்சிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றை விட அழகான கூலியை அல்லாஹ் அவர்களுக்குக் கொடுப்பான். தன் அருளைக் கொண்டு மென்மேலும் அவர்களுக்கு அதிகமாகவே கொடுப்பான். அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு கணக்கின்றியே கொடுப்பான்."
(அந்நூர்: 37-38)

மலர்: 38 இதழ்: 06

ஜூன் 2012 ரஜப்-1433

ISSN : 1391 - 460X

**விலை விபரம்:**

**உள்நாடு**

தனிப் பிரதி: ரூபா 50.00
வருட சந்தா: ரூபா 800.00
ஆறு மாதம்: ரூபா 400.00

**வெளிநாடு**

இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர்: 2250.00
மலேசியா: 2300.00
மத்திய கிழக்கு நாடுகள்: 2350.00
அவுஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா: 3000.00
இங்கிலாந்து, நியூசிலாந்து: 3700.00
ஐக்கிய அமெரிக்கா, கனடா: 4300.00

• • •

**வெளியீடு:**
**இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி**

**தொடர்புகளுக்கு:**
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி, கொழும்பு-09, இலங்கை
தொலைபேசி :(011) 2689324, தொலைநகல் :(011) 2686030
மின்னஞ்சல்: alhasanath@gmail.com
இணையதளம்: www.alhasanath.lk

அல்குர்ஆன் விளக்கம்
14-5
இறை சிந்தனையில் ஒன்றித்துப்போன
**வியாபார சமூகம்**
மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர்

அல்ஹதீஸ் விளக்கம்
16-8
உரிமைக் குரல் எழுப்புவோர்
**மதிக்கப்படல் வேண்டும்**
அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

த'வா களம்
09-11
**நேர்வழி பெற்ற மனிதன்...**
உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

12-13 **எகிப்திய தேர்தல்**
14-16 **வரலாறு கண்ட இஜ்திமா**
19-20 **சமுதாயச் சீரமைப்பில் மாணவியர் பங்கு**
32-34 **இறை பணியைத் தொடர...**
47-49 **நபிகளாரின் ஸீராவிலிருந்து...**
54-56 **சிறுகதை**

## அல்ஹஸனாத் விலை அதிகரிப்பு

**மதிப்புக்குரிய வாசகர்களே!**

உங்கள் அபிமான சஞ்சிகை அல்ஹஸனாத்தின் விலை இந்த இதழிலிருந்து ரூபா 50/= ஆகவும் உள்நாட்டுக்கான ஒரு வருட சந்தா ரூபா 800/= ஆகவும் அதிகரிக்கிறது.

அச்சுத்தாள், மின் கட்டணம், ஊழியர் சம்பளம், போக்குவரத்துச் செலவு ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பாரிய விலை அதிகரிப்புக் காரணமாக அல்ஹஸனாத் பிரதி யொன்றின் விலையை இவ்வாறு அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

எனவே, வாசகர்கள் மற்றும் விற்பனை முகவர்களாகிய நீங்கள் இயல்பாக எழக்கூடிய இச்சூழ்நிலையைப் புரிந்து கொண்டு உங்கள் அபிமான குடும்ப சஞ்சிகையின் விலை உயர்வை ஏற்றுக் கொண்டு தொடர்ந்தும் எமக்கு ஆதரவு அளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

-முகாமைத்துவம்-

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் குறிப்பிட்ட தொகைக்கு ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AFTER O/L

# GOLDEN COLLEGE

## CITY CAMPUS

**A/L செய்வதற்குரிய தகைமையை பெற்றிருக்கின்றீர்களா?**

**குறுகிய காலத்தில் Young Professional ஆக**

**உங்களை மாற்றிக் கொள்ளுங்கள்!**

ENGLISH MEDIUM

2014

# A/L COMMERCE with AAT

**முற்றிலும் இலவசம்**

- Accounting Packages
- IT Courses
- Soft Skills Training
- Career Guidance

**இப்பாடநெறி முடிவில்**

- பல்கலைக்கழகம் ஒன்றில் உங்களது பட்டப்படிப்புக்களை தொடர்தல்,
- பகுதிநேர வேலை வாய்ப்புக்களுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் உயர்கல்வியினை தொடர்தல்,
- Management மற்றும் Accounting துறைகளில் உடனடியாக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளல்,
- மத்திய கிழக்கு நாடுகளில் சிறந்த தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளல்,
- விலக்களிப்புக்களுடன் CIMA, ICASL, CIM, ACCA போன்ற தொழில்சார் கற்கைநெறிகளை தொடர்தல்,
- இலங்கை பல்கலைக்கழகங்களில் வெளிவாரிக் கற்கைநெறிகள் மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கை நெறிகளை தொடர்தல் போன்ற இன்னோரன்ன வாய்ப்புக்களை மாணவர்கள் பெறுகின்றனர்.

**சிறந்த பெறுபேற்றினை கொண்ட மாணவர்களுக்கு விசேட அனுமதிக்கட்டண கழிவு**

சிறந்த விரிவுரையாளர் குழாம்,
நவீன கற்கை வசதிகள்,
மாணவர்களுக்கு பொருத்தமான கற்கை சூழல்,
சாதாரன கட்டணம்
என்பவற்றையும் கொண்டிருப்பது சிறப்பம்சமாகும்.

**HOTLINE 0777 222 529**

**தூர பிரதேச மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்**

**மேலதிக தகவல்களுக்கும் அனுமதிக்கும்**

Golden College
Learning for Success

**No.548, Peradeniya Rd, Kandy**

**Tel: 0812 20 55 44, Mobile: 0777 91 25 97 / 0718 03 29 67**

Registered with Tertiary & Vocational Education Commission - Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சமாதானத்துக்கான நடைமுறை மார்க்கம் இஸ்லாம்

ரஜப் மாதம் பிறந்தவுடன் முஸ்லிம்களின் உள்ளங்களில் ஓர் ஆதங்கம் எழ வேண்டும். போராட்டங்கள் தடைசெய்யப்பட்ட அமைதி மாதமாக அது மலர வேண்டும்.

இன்று உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் யுத்த அவலம் தொடரும் நிலையில், யுத்தமற்ற ஒரு மாதமாக ரஜப் மாதத்தை அல்லாஹுத் தஆலா ஏற்படுத்தியிருப்பது பகிரங்கமாகப் பிரகடனம் செய்யப்படல் வேண்டும். இம்மாதத்தில் முஸ்லிம்கள் தமக்குள் மாத்திரமல்ல, ஏனைய இன, மதத்தவர்களுடனும் சமாதான சகவாழ்வுக்கான சகல முயற்சிகளையும் முன்னெடுக்க வேண்டும்.

இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் "இஸ்லாம் என்பது உலக சமாதானத்திற்கான உலகப் பொது மார்க்கம்" எனும் நற்செய்தி சென்றடைய வேண்டும். இதற்காக ஊடகங்கள், குறிப்பாக சிங்கள ஊடகங்களில் இது குறித்த பல நிகழ்ச்சிகள் அரங்கேற வேண்டும். ஷஃபான் மாதத்தையும் இணைத்ததாக நிகழ்ச்சிகள் பரவலாக்கப்பட வேண்டும்.


அடுத்து வர இருக்கும் ரமழான்- அது அல்குர்ஆனின் மாதம் என்பதால் அல்குர்ஆனை, அதன் தூதை அனைத்து மக்களுக்கும் விஷேடமாக, இந்நாட்டு சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக்கும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும். அல்குர்ஆனின் சீரிய கருத்துக்களை இருள் மண்டிய உள்ளங்களில் மோதவிட்டு, ஓர் அமைதிப் புரட்சியை உருவாக்கும் காலமாக ரமழானை நாம் பயன்படுத்த வேண்டும். ஏனைய மதங்களிலும் விரதம், நோன்பு என்பன போதிக்கப்பட்டிருந்தாலும், இஸ்லாம் அதனை நடைமுறைச் சாத்தியமான ஒன்றாக, சிறுவர் முதல் முதியோர் வரை ஒரு மாத காலம் முழுவதும் நோன்பு நோற்கக்கூடிய மனப்பாங்கையும் மனோ திடத்தையும் வழங்கி மக்களை மனிதப் புனிதர்களாக மாற்றம் பெற வழிவகுத்துள்ளது. இச் செய்தியை அந்நிய சகோதர மக்கள் மத்தியில் ஆச்சரியத்துடன் பேசப்படும் செய்தியாக உலவ விடவேண்டும்.

ரமழானைத் தொடர்ந்து வரக்கூடிய துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய மூன்று மாதங்களும் யுத்தம் புரிவதற்கு தடைசெய்யப்பட்ட மாதங்களாக இறைவன் வகுத்தளித்திருப்பது, மனித குலத்திற்கு அவன் செய்த மாபெரும் அருளாகும். மனித இனம் ஒரு தாய் பெற்ற மக்கள் எனும் உண்மையை உலகுக்குப் பறைசாற்றும் ஹஜ் கடமை உலக ஒற்றுமைக்கு ஒரு நடைமுறைச் சான்றாகும். அதன் முந்திய, பிந்திய மாதங்களிலும் போர் நிறுத்த அமைதிப் பிரகடனம் செய்திருப்பது, அம்மாதத்தின் முக்கியத்துவத்தை, ஹஜ் நிகழ்வின் முக்கியத்துவத்தை, உலக சகோதரத்துவத்தின் மேன்மையை உலகறியச் செய்துள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக ஏழு மாதங்கள் முஸ்லிம்களை சுறுசுறுப்புடன் செயற்பட வைக்கும் நிகழ்ச்சி நிரலை நாம் கைக்கொள்வோமானால், இந்நாட்டின் கணிசமான அளவு மக்கள் இஸ்லாத்தின் தூதை விளங்கிக் கொள்ள வழிபிறக்கும். சாரைசாரையாக மக்கள் இஸ்லாத்தை நோக்கித் திரும்பும் காலம் பிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறை சிந்தனையில் ஒன்றித்துப்போன
# வியாபார சமூகம்

மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர் அதிபர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

"(அந்த) மனிதர்களின் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் அல்லாஹ்வை நினைவுகூருவதை விட்டும் தொழுகையை நிலைநாட்டுவது மற்றும் ஸகாத் கொடுப்பதை விட்டும் அவர்களைப் பராமுகமாக்கி விடாது. உள்ளங்களும் பார்வைகளும் தடுமாறிவிடக்கூடிய நாளைப் பற்றி அவர்கள் அஞ்சிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றை விட அழகான கூலியை அல்லாஹ் அவர்களுக்குக் கொடுப்பான். தன் அருளைக் கொண்டு மென்மேலும் அவர்களுக்கு அதிகமாகவே கொடுப்பான். அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு கணக்கின்றியே கொடுப்பான்."

(அந்நூர்: 37-38)

ஸூரா அந்நூரின் 37-38ஆம் வசனங்கள் வரலாறு நெடுகிலும் மனித இனத்தின் தவிர்க்க முடியாத பாத்திரங்களாக, ஆட்சி மாற்றங்களினதும் சமூக இருப்புக்களினதும் நாகரிகங்களினதும் முதுகெலும்பாகிய வணிக சமூகம் அல்குர்ஆனால் பட்டைதீட்டப்பட்டபோது எத்தகைய உத்தமத்துவத்தை அடைந்தார்கள் என்பதனை எடுத்தோதுகிறது.

அல்குர்ஆன் அரபு பொருளாதாரத்தின் மத்திய சந்தையிலும் அப்போதைய வணிக உலகத்தின் கைதேர்ந்த, நிபுணத்துவ வணிகர்களுக்கு மத்தியிலும் இறங்கியது. அப்போது அவர்கள் வாழ்வின் யதார்த்தம் புரியாது, உயர்ந்த இலக்குகள் இன்றி மனித சமூகத்தின் பரஸ்பர பெறுமானங்கள் தெரியாது வெறும் பொருளாதாரப் பிராணிகளாக மாத்திரமே வாழ்ந்தனர். பொருளாதார இயந்திரத்தின் பிரதான இயக்குநர்கள் அப்போதைய இராட்சத வியாபாரிகளே. அல்குர்ஆன் சமூகத்தின் சகல தரப்பினருக்கும் வழிகாட்டி வாழ்வொழுங்குக்குள் கொண்டு வந்ததுபோல் வியாபார சமூகமும் அதன் அழைப்புக்கு பதில் கூறியபோது உத்தமத்துவப் பாதையில் பயணித்தார்கள்.

வியாபாரம் வாழ்வியக்கத்தின் உச்சி. அது உற்பத்தியாளனினதும் விவசாயியினதும் உற்பத்திப் பொருட்களுக்கான சாதனம். இது வாங்கல்- விற்றல் என்பதனை வேண்டி நிற்கும் ஒரு நடத்தைக் கோலம். மனித இன வரலாற்றின் ஆரம்பம் முதல் அல்குர்ஆனின் வருகை வரை பல பரிமாணங்களைப் பெற்று மக்காவிலும் அதன் சூழவுள்ள பிரதேசங்களிலும் ஒரு பொதுத் தன்மையுடன் நிலைகொண்டிருந்தது.

வியாபார சமூகத்தினர் அல்குர்ஆனினால் தூய்மைப் படுத்தப்பட்டு இலட்சியவாத சமூகத்தின் கீர்த்திமிக்க மனிதர்களாய் மிளிர்ந்தபோது அவர்களை அல்குர்ஆன் சிலாகித்துப் பேச ஆரம்பித்தது. அவர்களது பண்பொழுக்கங்கள் பற்றிக் கூற முன் மனித ஆளுமையின் முழுமைத்துவத்தை சுட்டிக்காட்டும் குர்ஆனிய பிரயோகமாகிய 'ரிஜாலுன்' என்ற சொல்லோடு ஆரம்பிக்கிறது. அல்குர்ஆன் மனிதன், மனிதர்கள் என ஒருமையாக அல்லது பன்மையாகக் கையாளும்போது முறையே இன்ஸான், நாஸ் எனவும் சிலபோது பஷர் எனவும் கையாண்டுள்ளது. அவை அவ்விடங்களில் மனிதத்துவக் கட்டங்களை, நிலைகளை நுட்பமாக சொல்லாடியுள்ளது. 'ரிஜாலுன்' என கையாளப்பட்ட இடங்கள் பூரணத்துவ நிலையைக் காட்டுவதனை அவதானிக்க முடியும்.

அல்குர்ஆனின் முழுக் கண்ணோட்டத்துடன் இச்சொல்லாளுகையை அவதானிக்கும்போது கருத்து மயக்கங்கள், பிழையான, தவறான எண்ணங்கள் அற்ற சிந்தனைத் தெளிவுமிக்க, கோணலான நடத்தைகள் அற்ற, சீரான நடத்தைகளை உடைய, பண்பாட்டு முதிர்ச்சியும் பின்வாங்கல்கள், இயலாமைகள், குறைவிருத்திகள் அற்ற செயல்திறன் நிறைந்த ஆளுமைகளையே அல்குர்ஆன் ரிஜால் என அடைமொழிப்படுத்தியுள்ளது என பொருள் விரிக்க முடியும்.

இந்த ஆளுமை மிக்க வியாபார சமூகத்தின் இஸ்லாமியம் மூன்று அடித்தளங்கள் மீதும் மறுமைக் கோட்பாடு என்ற பின்புலத்தின் மீதும் கட்டியெழுப்பப் பட்டுள்ளது. இதயங்கள் நிலைகுலைந்து பார்வைகள் நிலைகுத்தி விடக்கூடிய அந்த மாபெரும் நாள் குறித்த அச்சத்தினால் இறைவனை நினைவுகூருவதிலும் தொழுகையை நிலைநாட்டி ஸகாத் கொடுப்பதிலும் நிலைத்திருக்கிறார்கள்.

வணிக ஈடுபாடு என்பது இலாப எதிர்பார்ப்புக்களுடன் பொருட்கள், பணப் பறிமாற்றம் என்பதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தொழுகையின் மூலம் ஆத்மிக இன்பம் பெற்று தம்மை ரப்பானிகளாக்கிக் கொள்ளும் வணிகர் சமூகம் தமது பணத்திற்கும் தங்கக் குவியல்களுக்கும் வியாபாரச் சரக்குகளுக்கும் அறுவடைகளுக்கும் எதிர்பாராத திடீர் வருவாய்களுக்கும் கணக்குப் பார்த்து ஸகாத்தை நிறை வேற்றிக் கொண்டிருப்பார்கள். ஸகாத் அவர்களது மூலங் களை சுத்தமாக்கி அவர்களது உள்ளங்களைத் தூய்மைப் படுத்தி விடுகிறது. அவர்கள் தமது நுகர்வுச் சமூகத்தின் வறுமையை, ஏழ்மையை, கடனை, நோயை, அறியாமை யைப் போக்கி பொருளாதாரத் தன்னிறைவை நோக்கிய பயணத்தின் முன்வரிசை ஊழியர்களாக மிளிருவார்கள்.*

தாண்டி விரிவாக நோக்கப்படும் அம்சமாகும். உணவு, உடை, வீடு, போக்குவரத்து, தொடர்பாடல், கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு சேவைகளை வழங்குதலில் ஈடுபாடுள்ள செயற்பாடே வணிகம் என விரிந்து செல்கிறது. இவ்வனைத்துக் கருமங்களும் அல்லாஹ்வை நினைவுகூருவதிலிருந்தும் அவர்களை பராக்காக்கி விடுவதில்லை. வணிகச் செயற்பாட்டையே அவர்கள் 'திக்ருல்லாஹ்'வாக ஆக்கிக் கொள்வார்கள். அனைத் துவித இலாப அடைவுகளை விடவும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடைவதே மேலோங்கிக் காணப் படும்.

நுகர்வோருக்கு எவ்வகையான மோசடிகளும் அற்ற, அநீதம் இழைக்கப்படாத சமூக நீதமும் மானுடநேயமும் பேணப்பட்ட அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் சட்ட வரையறைக்குள் நின்று சம்பாத்தியத்தில் ஈடுபட்டிருப்பார்கள். உற்பத்தி, பங்கீடு, சந்தைப்படுத்தல் முதலான விடயங்களில் இஸ்லாத்தின் அடிப்படை விதிகள் முழுமையாகப் பின்பற்றப்படும். ஆதி, நவீன முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வியாபார அமைப்புக்களிலிருந்து தம்மை முழுமையாக விடுவித்துக் கொண்டிருப்பார்கள். வணிக சமூகம் தமக்கிடையே எவ்வித அச்சமும் குரோதமும் அநீதி விளைவித்தல்களும் மெகாக்களின் ஆக்கிரமிப்புக்களும் அற்ற சகோதரத்துவ சமூகமாகக் காணப்படுவர்.

அவர்களது சம்பாத்திய முயற்சிகள் அல்லாஹ்வை நினைவுகூர்வதை விட்டும் பராக்காக்கி விடாது. இறை சிந்தனையில் தனியான இன்பத்தையும் மனவெழுச்சியையும் சிந்தனை விருத்தியையும் ஏற்படுத்துவதுபோல் தொழுகைக்கு அதான் கூறி அழைக்கப்படும்போதெல்லாம், "திக்ருல்லாஹி அக்பர்" என்ற தொழுகையை நிலைநாட்டட தமது முழு நடவடிக்கைகளையும் நிறுத்தி விட்டு இறை இல்லங்களை நோக்கி விரைவார்கள். தொழுகைக்கான இடைநிறுத்தல், தமக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிடும் என்றோ தமது நிகழ்ச்சி ஒழுங்கில் குளறுபடிகளை ஏற்படுத்திவிடும் என்றோ அஞ்சுவதில்லை. உரிய நேரத்துக்கு தொழுகைக்கு ஆஜராகி உள்ளச்சத்துடன் தொழுகையை நிலைநாட்டி தமது இரட்சகனுடன் முனாஜாத் (உரையாடுதல்) இல் தணியாத பேரார்வம் கொள்வார்கள். தொழுகையால் புத்தூக்கம் பெற்றவர்களாகவும் தமது தவறுகளுக்காக பாவ மன்னிப்புக் கோருபவர்களாகவும் மீண்டும் தமது தொழில் துரவுகளை நோக்கிச் செல்வார்கள்.

தொழுகையின் மூலம் ஆத்மிக இன்பம் பெற்று தம்மை ரப்பானிகளாக்கிக் கொள்ளும் வணிகர் சமூகம் தமது பணத்திற்கும் தங்கக் குவியல்களுக்கும் வியாபாரச் சரக்குகளுக்கும் அறுவடைகளுக்கும் எதிர்பாராத திடீர் வருவாய்களுக்கும் கணக்குப் பார்த்து ஸகாத்தை நிறை வேற்றிக் கொண்டிருப்பார்கள். ஸகாத் அவர்களது மூலங் களை சுத்தமாக்கி அவர்களது உள்ளங்களைத் தூய்மைப் படுத்தி விடுகிறது. அவர்கள் தமது நுகர்வுச் சமூகத்தின் வறுமையை, ஏழ்மையை, கடனை, நோயை, அறியாமை யைப் போக்கி பொருளாதாரத் தன்னிறைவை நோக்கிய பயணத்தின் முன்வரிசை ஊழியர்களாக மிளிருவார்கள்.

**"அவர்கள் செய்து கொண்டிருந்ததை விட அழகான கூலியை அல்லாஹ் அவர்களுக்குக் கொடுப்பான். தன் அருளைக் கொண்டு மென்மேலும் அவர்களுக்கு அதிகமாகவே கொடுப்பான். அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு கணக்கின்றியே கொடுக்கின்றான்"**

என்ற அடுத்து வரும் 38ஆம் வசனம் முஃமினான வணிகர் சமூகத்தின் உள்ளத்தில் விசாலமான பார்வையையும் மனவெழுச்சியையும் தமது மறுமை வாழ்வு பற்றிய ஆழ்ந்த நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது. அவர்கள் நிலையான உயர்ந்த இலக்குகளுக்காக தொழில்துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். உலகாயதவாதிகள் தமது உலகத்தைச் செய்யவே சம்பாதிக்கிறார்கள். முஃமின்கள் அல்லாஹ்வுடன் இணைந்து நஷ்டமே அடையாத வியாபாரத்தை மேற்கொள்கின்றனர். அவர்கள் தமக்காக மறுமையையும் உலகத்தையும் செய்கிறார்கள்.

**உசாத்துணை:**

- தப்ஹீமுல் குர்ஆன்
- ததப்பருல் குர்ஆன்
- பீ ழிலாலில் குர்ஆன்
- தப்ஸீர் ஷஃராவி
- அழ்வாஉல் பயான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக் குரல் எழுப்புவோர் மதிக்கப்படல் வேண்டும்

◆◆ அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு மனிதர் தான் கொடுத்த கடனை மீளப் பெறுவதற்காக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து முறை தவறி கடுமையாக நடந்து கொண்டார். அப்போது ஸஹாபிகள் அவரைத் தண்டிக்க நாடினர். அவ் வேளையில் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "அவரை விட்டு விடுங்கள். உரிமையைப் பெறுவதற்கு உரித்துடையவருக்கு பேச்சுரிமை உண்டு" எனக் கூறிவிட்டு "(நான் அவரிடம் இருந்து பெற்றுக் கொண்ட) சம வயது ஒட்டகம் ஒன்றை அவருக்குக் கொடுத்து விடுங்கள்" எனக் கட்டளையிட்டார்கள். அப்போது ஸஹாபாக்கள் "அல்லாஹ்வின் தூதரே! அந்த ஒட்டகத்தை விட வயதில் மூத்த ஒன்றை மட்டுமே எம்மால் பெற முடிந்தது" எனக் கூறினர். "அதனையே அவருக்குக் கொடுத்து விடுங்கள். ஏனென்றால், கடனை அழகிய முறையில் மீள ஒப்படைப்பவர் உங்களில் சிறந்தவர்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

மதீனா என்னும் தூய தேசத்தில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவை வாழ்வாங்கு வாழ்ந்த பான்மையை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட நபி. அவர்களது சபைக்கு சராசரி மனிதர் ஒருவர் வருகின்றார். அவர் பாவம் செய்யும் இயல்பு உள்ளவர். அவருக்கே உரிய உணர்ச்சிக் கொந்தளிப்பு வேகத்துடன் தனது உரிமை தொடர்பில் பேசத் துவங்குகின்றார். அந்தப் பேச்சில் வன்மம் இழையோடி இருக்கிறது. உரிமையை இழந்தவன் அதனை மீளப் பெறத் துடிப்பது மனித இயல்பு. அந்த இயல்பை மதித்து மௌனம் சாதிக்கின்றார்கள் நபிகளார். ஆனாலும், ஸஹாபாக்கள் வெகுண்டெழுகின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களை ஆற்றுப்படுத்துகின்றார்கள்.

இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பல்லின மக்கள் வாழ்ந்த மதீனத்து மண்ணில் மனித உரிமையை உத்தவராதப்படுத்துவதன் மூலம் சமாதானத்திற்கும் சௌகர்யமான வாழ்வுக்கும் வித்திட்டார்கள். அவர்கள் நீதியின் சிகரமாக, அதன் மறு உருவமாக வாழ்ந்தார்கள். மனித உரிமைக் காப்பகமாக திகழ்ந்தார்கள். நீதி மற்றும் மனித உரிமை தொடர்பில் கருத்துக்களையும் வழிகாட்டல்களையும் சாசனங்களையும் அதனை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான முன்மொழிவுகளையும் அண்ணலார் சமர்ப்பித்தார்கள்.

ஒரு முறை நீதியின் துலாக்கோலை அசைத்துப் பார்த்திட எடுக்கப்பட்ட முயற்சியை நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள். 'மக்ஸூம்' கோத்திரத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி திருடி விட்டார். அது அக்கோத்திரத்தாருக்கு இழுக்காக அமைந்து விட்டது. உடனடியாக அவர்கள் உஸாமா இப்னு ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அணுகி திருட்டுக் குற்றத்திற்கான தண்டனையைத் தளர்த்தி அண்ணலாரிடத்தில் அவளுக்கு மன்னிப்பைப் பெற்றுத் தருமாறு வேண்டிக் கொண்டனர். இந்தக் கோரிக்கையை உஸாமா (ரழி யல்லாஹு அன்ஹு) அவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் முன்வைத்து பரிந்துரைத்தார்கள். அப்போது கடும் கோபாவே கத்துடன் "அல்லாஹ்வின் குற்றவியல் தண்டனை தொடர்பில் பரிந்துரைக்கின்றீரா?" எனக் கேள்வி எழுப்பிய ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மதின் மகள் பாத்திமா திருடினால் கூட அவளது கரத்தை தறித்து விடுவேன்" என ஆணித்தரமாக எடுத்துரைத்தார்கள்.

இச்சம்பவம் நீதி மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பில் நபியவர்கள் நெகிழ்ச்சிப் போக்கை கையாளாமல் தீர்க்கமான முடிவுக்கு வந்துள் ளதை தெளிவுபடுத்துகிறது. மேலும் நீதியின் முன் எல்லோரும் சமம் என்ற கோட்பாட்டை நபியவர்கள் இவ்விடத்தில் பிரகடனம் செய்துள்ளார்கள். இந்தக் கோட்பாடு அமுலுக்கு வந்த பான்மையை நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸ் உணர்த்தி நிற்கின்றது.

நபியவர்களது அவையிலே எழுப்பப்பட்ட உரிமைக் குரல் நசுக்கப்படவில்லை. கடன் கொடுத்தவர் அதனைக் கேட்டுப் பெற குரல் எழுப்புவது அவரது உரிமை மட்டு மல்ல; அது மனித இயல்பும் கூட. அதன்போது வார்த்தைப் பிரயோகங்கள் வன்மையாகவும் காட்டமாகவும் அமைவது கூட மனித இயல்பேயாகும். ஆனாலும், நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அந்த மனிதனது உணர்வலைகளை மதிக்கின்றார்கள். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனைத் தண்டிக்க விரும்பிய ஸஹாபிகளை தடுத்து விடுகின்றார்கள்.

நாம் வாழும் குடும்பங்களிலும் எமது சமூகச் சூழலிலும் மனித உரிமைகள் மீறப்படுகின்ற வகை தொகையற்ற நிகழ்வுகளை அன்றாடம் அடையாளப்படுத்த முடியும். தமது பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பில் கரிசனையற்று வாழும் பெற்றோர் உள்ளனர். குறித்த வயதில் பிள்ளைகள் பெற வேண்டிய கல்வியறிவை தடுத்து நிறுத்தி அவர்களை வேலைக்கு அனுப்பி வைக்கும் பெற்றோரும் உள்ளனர். பிள்ளைகளது ஆசை, அபிலாஷைகள், எதிர்பார்ப்புகள், ஆதங்கங்கள் முதலானவற்றை பெற்றோர் கவனத்திற் கொள்ளாமல் தங்களது சுய விருப்பத்தின் பேரில் திருமணப் பந்தத்தில் இணைத்து வைத்து நிம்மதிப் பெருமூச்சுடன் இளைப்பாறி விடுகின்றனர்.

ஆனால், பிள்ளைகளோ குடும்ப வாழ்வில் ஏக்கப் பெருமூச்சுடன் வாழ்வு கசந்து போன நிலையில் காலம் கழிக்கின்ற நிலைமைகளும் இல்லாமல் இல்லை. திருமணப் பேச்சுவார்த்தையின்போதும் திருமணத்தின் பின்னரும் பிள்ளைகளுக்கு தாங்கள் ஆற்ற வேண்டிய உரிமைகள் பற்றிய அடிப்படை அறிவில்லாமலும் வாழுகின்றனர். அவ்வுரிமைகளை மதிப்பதுமில்லை; அங்கீகரிப்பதுமில்லை. ஆனால், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டோரின் ஆதங்கங்களை மதித்தார்கள்; அங்கீகரித்தார்கள். அவற்றை உரிமைக் குரலாக எழுப்புவதற்கு அனுமதி வழங்கினார்கள்.

ஒரு கன்னிப் பெண் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து, "எனது தந்தை அவருக்கு ஏற்பட்ட இழுக்கை நீக்கிக் கொள்வதற்காக அவரது சகோதரரது மகனை (எனது சம்மதம் பெறாமலேயே) எனக்குத் திருமணம் செய்து வைத்து விட்டார்" என முறையிட்டார். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவளுக்கு தெரிவுரிமையை வழங்கினார்கள். அவருடன் வாழ்வதா அல்லது பிரிவதா? என முடிவெடுக்கும் அதிகாரத்தை அவளுக்கு கொடுத்தார்கள். (முஸ்னத் அஹ்மத், அபூதாவூத், இப்னு மாஜா, தாரகுத்னி)

பிள்ளைகளும் கூட தமது பெற்றோருக்கு ஆற்றிட வேண்டிய உரிகைகளை தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். அவற்றை அவர்களுக்கு முழுமையாக வழங்கிவிட வேண்டும். தமது வாழ்க்கைப் பாதையில் குறுக்கிடுகின்ற தடைக்கற்களோ அல்லது மேலதிக சுமைகளோ அல்ல அவர்கள். அவர்கள் ஓர் அனுபவத் திரட்டு. வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் அகல்விளக்குகள். தவறான முடிவுகளை எடுக்கும் பிள்ளைகளின் முன்னால் அவர்கள் எச்சரிக்கை மையங்கள். எனவேதான், இஸ்லாம் பெண் பிள்ளையிள் குடும்ப வாழ்வைத் தீர்மானிக்கும் விவகாரத்தில் அவளது தந்தைக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. அவரை பெண்ணின் பொறுப்புதாரராக ஆக்கியுள்ளது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "தனது பொறுப்புதாரர் இன்றி எந்த ஒரு பெண் திருமணம் செய்து கொண்டாளோ அவளது திருமணம் செல்லுபடியற்றது; அவளது திருமணம் செல்லுபடியற்றது; அவளது திருமணம் செல்லுபடியற்றது." (அத்திர்மிதி)

மனித உரிமை பற்றிய கருத்தியல் கூர்மைப்படுத்தப்பட்டுள்ள காலப் பிரிவில் நாம் வாழ்கின்றோம். ஒவ்வொரு சமூகக் குழுமமும் தம்மிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை மீளப் பெறுவதற்காக எழுந்து நிற்கின்ற காலம் இது. முஸ்லிம்கள்கூட தங்களது பூர்வீகம் பற்றிய அச்சப்பாட்டுடன் இழந்துபோன தமது வாழ்விடங்களையும் காணி நிலங்களையும் புனிதத் தலங்களையும் மீளப் பெறுவதற்கான வியூகங்களை அமைத்து, மூல உபாயங்களை வகுத்து முன் செல்லத் தயாராகுகின்ற நிலைமை தற்போது ஆரோக்கியம் கண்டுள்ளது. தமது பூர்வீக தாயகப் பூமியை மீளப் பெறுவதற்காக அரசியல் போராட்டங்களை முன்னெடுப்பது பர்ளான கடமையாகும். இத்தகைய போராட்டங்களை கைவிடுவதானது அல்லது தமது பூர்வீக பூமியை விற்று தாரை வார்ப்பதானது அடுத்த நூற்றாண்டில் முஸ்லிம்கள் என்ற ஒரு சமூகம் வாழ்ந்ததற்கான அடையாளமே இல்லாமல் போவதற்கான அபாய அறிவிப்பாக அமையும். அவ்வாறே நமது சமுதாயச் சூழலில் நமக்கு மத்தியில் மனித உரிமை மீறல்கள் நடைபெறாமல் பாதுகாத்திட வேண்டிய தார்மிகப் பொறுப்பும் நமக்கு உள்ளது.

நமக்கென்று குடும்ப உறுப்பினர்கள் இருப்பது போல சமூக உறுப்பினர்களும் உள்ளனர். நமது நண்பர்கள், அண்டை அயலவர்கள், விருந்தாளிகள் மற்றும் வகையற்றவர்கள் என இனங்காணப்பட்டுள்ள ஏழை மக்கள், விதவைகள், அநாதைகள், விஷேட தேவையுள்ளவர்கள், அகதிகள்... என்று இந்தப் பட்டியல் நீண்டு செல்கின்றது. இவர்களுக்கிடையேயான உறவுகளை இஸ்லாம் ஒழுங்குபடுத்தியுள்ளது. மேலும் இவர்கள் பெற்றிட வேண்டிய உரிமைகளையும் உத்தரவாதப்படுத்தி அவற்றுக்கு சட்ட அந்தஸ்தை வழங்கியுள்ளது. மேலும் இவ்வுரிமைகள் மீறப்படுகின்றபோது அல்லது பறிக்கப்படுகின்றபோது அவற்றை மீளப் பெறுவதற்காக குரல் எழுப்புவதையும் சாத்தியமான எல்லா போராட்டங்களை முன்னெடுப்பதையும் அனுமதித்து ஆகுமாக்கியுள்ளது.

முஸ்லிம்கள் தமக்கு மத்தியில் பரஸ்பரம் ஆற்ற வேண்டிய உரிமைகளை ஆதிக்கம் செலுத்தி ஆக்கிரமித்துப் பெற முடியாது. தமக்கிடையேயான வளப் பகிர்வு தொடர்பில்கூட நீதமாக நடந்து கொள்ள வேண்டும். இஸ்லாம் இவ்விவகாரத்தில் சம பகிர்வைத் தவிர்த்து நீதியான பகிர்வை கட்டாயப்படுத்தியுள்ளது.

"நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்காக நீதியை நிலைநிறுத்துபவர்களாகவும் அதற்கு சாட்சியாளர்களாகவும் இருங்கள். ஒரு சமூகத்தாரின் மீது உள்ள வெறுப்பு நீங்கள் நீதி செலுத்தாதிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீங்கள் நீதி செலுத்துங்கள். அதுவே தக்வாவுக்கு மிக நெருக்கமானதாகும்..." (ஸூரா அல்மாஇதா: 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லின மக்கள் வாழ்ந்த அக்கால மதீனா நகரில் முஹாஜிர்கள், அன்ஸார்கள் என்போர் மிக முக்கிய சமூகத் தரப்பினராகும். இவ்விரு தரப்பினரும் ஹிஜ்ரத் நிறைவ டைந்து இஸ்லாமிய தலைமைத்துவத்தின் கீழ் வாழ ஆரம் பித்த காலத்தில் இஸ்லாமிய சகோதரத்துவ வாஞ்சையால் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தனர். இக்காலப் பிரிவில் இவ்விரு தரப்பினருக்கும் இடையே எதுவித மனக்கிலே சங்மோ முறுகல் நிலையோ தோற்றம் பெறவில்லை. ஆனாலும், காலப்போக்கில் வளப் பகிர்வு தொடர்பில் இவ்விரு குழுவினருக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றலாயின. இரு வேறு சமூகச் சூழலில் பூர்வீகமாக வாழ்ந்தவர்கள் புதிய நிலப்பரப்பில் ஒன்றாக வாழ ஆரம் பிக்கின்றபோது பல்வேறு சமூகப் பிரச்சினைகள் உருவாவது இயல்பானதாகும். இதனை ஸீராவின் வெளிச்சத்தில் விளங்கிக் கொள்வோம்.

ஒரு முறை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கனீமத் பொருட்களைப் பகிர்ந்தளித்தபோது அன்ஸார்களை விட முஹாஜிர்களுக்கு அதிகமாகக் கொடுத்து விட்டார்கள். இந்தச் செய்தி அன்ஸார்களுக்கு மத்தியில் காட்டுத்தீயைப் போல பரவியது. இதனால் மனவருத்தமடைந்த அன்ஸார்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இவ்விவகாரத்தில் முஹாஜிர்களை அரவணைத்து பக்கச் சார்பாக நடந்து கொண்டார்கள் எனக் கூறலாயினர். இந்தச் செய்தி ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு எட்டியபோது அவர்கள் மன வேதனை அடைந்தார்கள். ஆனால், பிரச்சினை பூதாகரமாக உரு வெடுத்து சமூகப் பிளவாக மாறுகின்ற அளவுக்கு நபிய வர்கள் மௌனித்து நிற்கவில்லை. மேலும் அன்ஸார் களுக்கு எதிராகக் கருத்துரைத்து அவர்களது உரிமைக் குரலை நசுக்கி கருத்துச் சுதந்திரத்திற்கு வேட்டு வைக்கவு மில்லை. மாறாக, அவர்களது உளக் கிடக்கைகளையும் ஆதங்கங்களையும் மிகச் சரியாக புரிந்து கொள்கின்றார் கள். அன்ஸார்களது தலைவராகிய ஸஃது முஆத் (ரழியல் லாஹு அன்ஹு) அவர்களை அழைத்து, "இப்பிரச் சினையில் உமது நிலைப் பாடு என்ன?" என்று கேட்டார் கள். அதற்கு அவர், "நானும் கூட எனது சமூகத்தின் நிலைப் பாட்டில்தான் உள்ளேன்" என்றார். இந்தச் சந்தர்ப்பத்திலும் கூட நபிய வர்கள் காட்டமாக எதையும் பேசவில்லை. மாறாக, அன்ஸார்களது உணர்வலை களைப் புரிந்து கொண்டு அதற்கு மதிப்பளித்தார்கள். அவர்கள் அனைவரையும் குறித்ததோர் இடத்தில் ஒன்று கூடுமாறு ஸஃது (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் சொல்லி அனுப்பினார்கள். அவ்விடத்திற்கு வருகை தந்த முஹாஜிர்களை உள்ளே செல்ல அனுமதியாது திருப்பி அனுப்பி விட்டார்கள்.

பின்னர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனக்கும் அன்ஸார்களுக்கும் இடையேயுள்ள நட்புறவையும் இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தில் அன் ஸார்கள் இருந்த நிலைமையையும் விரிவாக விளக்கினார் கள். முஹாஜிர்களில் சிலர் புதிதாக இஸ்லாத்தில் இணைந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கும் இஸ்லாத் திற்கும் இடையேயுள்ள உறவு வலுப்பெற வேண்டும் என்ற நோக்கில் கனீமத் பகிர்வின்போது கூடுதலாக அவர்களுக்கு வழங்கியதாக தனது நியாயத்தை முன் வைத்தார்கள். இதைக் கேட்ட அன்ஸார்கள், அண்ண லாரை ஆரத் தழுவி தேம்பித் தேம்பி அழுது விட்டு பூரண திருப்தியுடன் அங்கிருந்து அகன்று சென்றனர்.

எனவே, ஹிஜ்ரத் செய்து வந்தவர்களினால் தமக்கு ஏற்பட்ட மன உளைச்சலை அன்ஸார்கள் பகிரங்கமாக தெரியப்படுத்தினர். இவ்வாறு பகிரங்கமாக கருத்துத் தெரிவித்தமை மனித இயல்புசார்ந்த விடயமாகும். இது பிரதேச வெறி அல்லது இன வெறி என குறிக்கப்படலா காது. தங்களது சிந்தனைப் பாங்கு மற்றும் மனப்பாங்கு, நிலைப்பாடு, நடத்தை முதலானவற்றால் தங்களுடன் ஒட்டி உறவாடுகின்ற சமூகத்திற்கு ஏற்படுகின்ற பல்வேறு பாதிப் புக்களை "பாதிப்புக்களே அல்ல" என எண்ணுவதும் அவற்றைக் காதில் போட்டுக் கொள்ளாது தங்களது இருப் பின் மூல வேர்களை இன்னும் பதித்துக் கொள்வதற்கான மூல உபாயங்களைப் பிரயோகிப்பதும் மனித உரிமை மீறலாகும். அல்லாஹ்வின் தூதர், அன்ஸார்களது மனக் கவலைகளையும் ஆதங்கங் களையும் சட்டை செய்யாது மௌனித்து தான் உண்டு தன்பாடு உண்டு என்ற போக்கில் நடந்து கொள்ள வில்லை. இதனை ஸீராவின் ஒளியில் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.


நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸின் இறுதிப் பகுதி நபிகளாரின் பண்பாட்டு விழுமியத்தை எடுத்துரைக்கின்றது. நபியவர்கள் தன்னால் பிறருக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளை அடிமட்டம் வைத்து அளந்து சட்டப் பிரகாரம் நடந்து கொள்ளல் என்ற நிலைப் பாட்டுக்கு அழுத்தம் கொடுத்து வழங்க விரும்பவில்லை. மாறாக, தாராள மனப்பான்மையுடன் நடந்து கொண் டார்கள். வயதில் மூத்த ஒட்டகத்தை வழங்குமாறு பணித்தார்கள். சிறந்தவர்களை சரியாக மதிப்பீடு செய்வ தற்கான மேலான அளவுகோல் தாராள மனப்பான்மை யாகும்.

ஆகவே, உரிமைக் குரல் எழுப்புவோரின் நியாய மான கோரிக்கைகளை முதலாவதாக மதிக்கின்ற மனப்பான் மையை உருவாக்கிக் கொள்ள முயற்சிப் போம்!

Visit: www.alhasanath.lk
Like us: www.facebook.com/alhasanath



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர்வழி பெற்ற மனிதன்... நேர்வழி செல்லும் இயக்கம்... நேர்வழிப்படுத்தப்பட்ட சமூகம்...

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர், அமீர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

தஃவா களத்தில் பொருளறியாது பிரயோகிக்கப்படும் இஸ்லாமிய வழக்குச் சொற்கள் அதிகம். அவற்றுள் இரண்டுதான் 'நேர்வழி' (ஹிதாயத்) என்பதும் 'வழிகேடு' (ழலாலத்) என்பதுமாகும். தாம் வழிகேட்டில் இருந்து கொண்டே தம்மையும் அறியாமல் தாம் பேசும் வார்த்தையின் பொருளையும் அறியாமல் பிறரை வழிகேடர்கள் என்று கூறுவோர் இருக்கின்றனர். தனிமனிதர்களையும் இயக்கங்களையும் சமூகத்தையும் வழிகேடர் பட்டியலில் போட்டுப் பார்ப்பது ஒரு சிலரின் பொழுதுபோக்காகும்.

சமூகம் இந்த மாயையில் சிக்காமல் நேர்வழி எது, வழிகேடு எது என்பதைத் தெரிந்து கொள்வதற்கான ஓர் அணுகுமுறையை இவ்வாக்கத்தினூடாக வழங்க விரும்புகிறோம். நேர்வழி பெற்ற மனிதன், நேர்வழி பெற்ற இயக்கம், நேர்வழி பெற்ற சமூகம், என்பவற்றுக்குரிய பண்புகளை விளங்கிக் கொள்வதன் மூலம் ஒருவர் நேர்வழி பற்றிய தெளிவைப் பெற்றுக் கொள்ளலாம்.

முதலில் தனிமனிதனை எடுத்துக் கொள்வோம்.

## நேர்வழி பெற்ற மனிதன்

இஸ்லாம் ஐயங்களுக்கு இடம் தராத மார்க்கம் என்ற வகையில் ஒரு மனிதன் நேர்வழியில் இருக்கிறான் என்பதற்கான அடையாளங்களும் இஸ்லாத்தில் தெளிவாக இருக்கின்றன. அவற்றை நான்காக வகுக்கலாம். ஐந்தாவதொன்றும் பின்னால் இருக்கிறது. அதன் விரிவான விளக்கத்தை "நேர்வழி பெற்ற இயக்கம்" என்ற தலைப்போடு இணைத்துள்ளோம். அதை இங்கு தனியாகக் குறிப்பிடவில்லை.

### 1. இஸ்லாம் பற்றிய தெளிவான விளக்கம்

வழிகேடர்களாக இருந்தோரை நேர்வழிக்கு அழைத்துவர அல்லாஹ்வின் தூதர் செய்த பணியைக் குறிப்பிடும் அல்குர்ஆன், அன்னார் "வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்தார்கள்..." எனப் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறது.

பார்க்க: **(2: 129, 03: 164, 62: 02)**

அதேபோன்று,

"அறிவைத் தேடி ஒரு பாதையில் புறப்படுபவனுக்கு சுவனம் செல்லும் பாதையை அல்லாஹ் இலகுபடுத்து கிறான்" என இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் குறிப்பிடுகிறார்கள்.

கண்ணிருந்தும் பார்க்காத... காதிருந்தும் செவிமடுக்காத... உள்ளமிருந்தும் அறிவு பெறாதவர்களை நரகத்திற்கென்றே அல்லாஹ் படைத்துள்ளான் **(7: 179)** என்றும் அல்குர்ஆன் விளக்கம் பெறாதவர்களை நோக்கி எச்சரிக்கை விடுகிறது.

ஆக, இஸ்லாம் பற்றிய விளக்கமின்றி ஒருவர் நேர்வழியில் செல்ல முடியாது என்பது தெளிவாகிறது. இதன் பொருள் ஒவ்வொரு முஸ்லிமும் ஓர் இஸ்லாமிய அறிஞனாக வேண்டும் என்பதல்ல. எனினும், இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் அஞ்ஞான சிந்தனைகள், மூட நம்பிக்கைகள் என்பவற்றுக்குமிடையிலுள்ள வேறுபாடு என்ன? இஸ்லாமிய நடைமுறைகளுக்கும் ஜாஹிலிய்ய நடைமுறைகளுக்குமிடையில் உள்ள வேறுபாடு என்ன? தான் சம்பந்தப்படும் வாழ்க்கை விவகாரம் ஒவ்வொன்றிற்கும் இஸ்லாம் வழங்கியுள்ள வழிகாட்டல்கள் எவை? என்ற அளவிலாவது குறைந்தபட்சம் ஒருவர் இஸ்லாம் பற்றி அறிந்திருக்காமல் அவர் நேர்வழியில் நடைபோட முடியாது. பிறருக்கு நேர்வழியைக் காட்டவும் முடியாது.

இத்தகைய சாதாரண மக்களைவிட ஆற்றல் உடையோர் அதிகமாக இஸ்லாத்தைக் கற்று விளக்கம் பெறுதல் வேண்டும். உலமாக்களோ இஸ்லாத்தின் வழிகாட்டலை வழங்கும் வெளிச்ச வீடுகளாகத் திகழ வேண்டும்.

### 2. தூய்மையான உள்ளம்

நேர்வழி பெற்ற மனிதனின் இரண்டாவது அடையாளம் அவன் ஒரு தூய்மையான உள்ளத்தைப் பெற்றிருப்பதாகும். தூய்மையான உள்ளம் இரண்டு தன்மைகளைக் கொண்டதாக இருக்கும்.

அ. ஈமான்

ஆ. அழகிய நற்குணங்கள்

ஈமான் என்பதன் பொருள், கற்றுக் கொண்டவற்றில் ஆசையும் ஆர்வமும் பற்றுறுதியும் ஏற்படுவதாகும். மேலும் கற்றுக் கொண்டவற்றை செயற்படுத்த வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் என்ற அவாவும் உள்ளத்தில் நிறைந்து காணப்படுவதாகும். கற்றுக் கொண்ட விடயங்களில் அலட்சியமும் புறக்கணிப்பும் பொடுபோக்கும் மறதியும் காணப்பட்டால் அங்கு ஈமான் இல்லை என்றே அர்த்தமாகும்.

தூய்மையான உள்ளத்தின் இரண்டாவது அடையாளம் நற்குணங்களாகும். வெறுப்பு, காழ்ப்புணர்வு, குரோதம், பகை, பெருமை, பொறாமை, நயவஞ்சகம், வெறுப்பு, மோசடி, தன்னலம், குரூர மனப்பான்மை, பிடிவாதம், பிறரைத் தரக்குறைவாக எண்ணுதல், தப்பெண்ணம், சந்தேகம், புறம், அவதூறு போன்ற அனைத்து மோசமான குணங்களிலிருந்தும் தன்னைப் பாதுகாத்து இவற்றுக்கெதிரான நற்குணங்களால் ஒரு மனிதன் தன்னை அலங்கரித்துக் கொள்ளும்போது அவனது உள்ளம் தூய்மை பெறுகிறது.

***''தனது உள்ளத்தைத் தூய்மைப்படுத்தியவன் வெற்றியடைந்தான்; தனது உள்ளத்தை மாசடையச் செய்தவன் தோல்வியடைந்தான்'' (91: 9- 10)*** என அல்குர்ஆன் இதனைக் குறிப்பிடுகிறது.

### 3. முன்மாதிரியான நடத்தை

கோட்பாட்டிலும் நடைமுறையிலும் எவற்றையெல்லாம் அசத்தியம் என்று ஒருவர் கற்று விளங்கிக் கொண்டாரோ அவற்றிலிருந்து அவர் முழுமையாக விலகியிருக்க வேண்டும். எவற்றை உண்மையானது, சத்தியமானது என்று கற்றுக் கொண்டாரோ அவற்றை அவர் தனது வாழ்வில் ஏற்றுப் பின்பற்றி நடக்க வேண்டும்.

தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற வணக்க வழிபாடுகள், ஹலால்-ஹராம் வரையறைகள், உறவுகளைப் பேணுதல், குடும்ப வாழ்க்கை, வியாபாரம், சொத்துப் பங்கீடு, அரசியல் போன்ற இன்னோரன்ன விவகாரங்கள் அனைத்திலும் இஸ்லாத்தின் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தி சான்று பகருவதில் முனைப்புடன் இருத்தல் வேண்டும்.

அல்லாஹ்வின் அன்பும் திருப்தியுமல்லாது வேறு எந்தக் காரணியும் அவரை இவ்வாறு செயல்படத் தூண்டும் நிலை உருவாகக் கூடாது. விருப்பிலும் வெறுப்பிலும் சாதகமான சூழலிலும் பாதகமான சூழலிலும் அல்லாஹ்வின் மார்க்கத்துக்கமைவாக அவர் தனது செயல்களையும் நடத்தைகளையும் அமைத்துக் கொள்ள வேண்டும். மொத்தத்தில்தான் கற்றுக் கொண்ட மார்க்கத்தின் முதல் எடுத்துக்காட்டாக அவர் திகழ வேண்டும்.

**''மனிதர்கள் (ஈமான் கொண்ட மாத்திரத்தில்) ஈமான் கொண்டோம் என்று கூறிவிடுவதனால் மட்டும் சோதனைகளுக்குட்படுத்தப்படாமல் விட்டுவிடப்படுவார்கள் என்று நினைக்கிறார்களா? நாங்கள் முன்பிருந்தவர்(களது நடத்தைகள், செயல்)களையும் சோதித்திருக்கிறோம்...''**

***(29: 02)***

இவ்வாறு ஒரு மனிதன் தான் கற்றவற்றை செயற்படுத்துவதன் மூலம் நேர்வழி செல்லும் பாக்கியத்தைப் பெறுகிறான். ஆக, கற்றதை நடைமுறைப்படுத்திக் காட்டாமல் தப்ப முடியாது.

### 4. அல்லாஹ்வுடைய மார்க்கத்தை மேலோங்கச் செய்வதற்காக உழைத்தல்

ஒரு மனிதன் நேர்வழியில் இருக்கிறான் என்பதற்கான நான்காவது அடையாளம் அவனது வாழ்வின் இலட்சியமாகவும் குறிக்கோளாகவும் தீன் பணி அமைவதாகும். உலகில் இறைவாக்கை மேலோங்கச் செய்யும் பணியிலிருந்து ஒதுங்கி தனது சொந்த வாழ்க்கையை மேலோங்கச் செய்வதற்காக தனது நேரம், பணம், உழைப்பு என்பவற்றை செலவிட்டுக் கொண்டிருப்பவன், ஜாஹிலிய்யத் வளர்ந்து செல்வதையும் இஸ்லாம் செத்து மடிவதையும் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று பொருளாகும். இத்தகைய மனிதனுடைய உள்ளத்தில் ஈமானும் இறையச்சமும் எங்கனம் குடிகொள்ள முடியும்?

ஒரு தீமையைக் காணும் ஒருவன் தனது உள்ளத்தினால்கூட அதனை மாற்றுவதற்கான ஒரு தீர்மானத்தை எடுக்காதபோது அதற்கப்பால் கடுகளவு ஈமானையும் அவனிடம் எதிர்பார்க்க முடியாது என்பதை அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிட்டது இங்கு நினைவுகூரத்தக்கதாகும்..

**''(தீனை நிலைநாட்டுவதற்காக உழைத்த) உங்களது முன்னோர்களது உதாரணம் உங்களிடமும் வராதவரை நீங்கள் சுவனம் நுழையலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? அவர்களை (இந்தப் பாதையில்) துன்பங்களும் துயரங்களும் பீடித்தன. அவர்கள் (அத்துன்பங்களால்) ஆட்டி வைக்கப்பட்டார்கள்...'' (2:214)** என இப்பணியைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர்களை அல்லாஹ் பாராட்டுகின்றான். அவர்களது முன்மாதிரியைப் பின்பற்றி நடக்காதவரை எவரும் சுவனம் நுழைய முடியாது என்பதையும் அல்லாஹ் எச்சரிக்கின்றான்.

ஆக, சுவனம் செல்ல முடியாத வழி நேர்வழியாக இருக்க முடியாது.

இவ்வாறு நேர்வழி செல்லும் ஒரு மனிதனின் அடையாளங்கள் இஸ்லாத்தில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. அத்துடன், ஐந்தாவது ஒரு காரணியும் இருக் கின்றது. அவன் கட்டுப்பாடு இன்றி ஒரு தனிமனிதனாக வாழ முடியாது என்பதே அக்காரணியாகும். அதாவது, சுவனம் செல்ல விரும்பும் மனிதன் கூட்டமைப்பில் இருக்க வேண்டும் **''தனித்திருப்பவன் ஷைத்தானுடன் இருக்கிறான்'', ''சுவனத்தின் வாசத்தை நுகர விரும்பும் ஒருவன் கூட்டமைப்பைப் பற்றிப் பிடிக்கட்டும்'', கூட்டமைப் பின்றி மரணிப்பவன் ஜாஹிலிய்யத்தில் மரணிக்கின்றான்''** முதலான நபிமொழிகள் இந்த உண்மையை வலியுறுத்து கின்றன.

**''...முஃமின்கள் செல்லும் பாதையைத் தவிர்த்து வேறு ஒரு பாதையில் செல்லும் ஒருவனை அவன் திரும்பிய**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையிலேயே நகர்த்திச் சென்று நரகில் நுழைவிப்போம்'' **(4: 115)** என்பது போன்ற குர்ஆன் வசனங்களும் இந்த உண்மையை வலியுறுத்துகின்றன.

ஆக, ஒரு முஸ்லிம் ஏற்கனவே கூறப்பட்ட நான்கு அம்சங்களையும் தனது வாழ்க்கையாக மாற்றிக் கொள்வ தோடு நேர்வழியில் பயணம் செய்வதற்கு உதவும் வகையில் கூட்டு வாழ்க்கை முறைமையொன்றுக்குள் தன்னை முழுமையாக உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

இஸ்லாத்தில் கூறப்படும் கூட்டு வாழ்க்கை ஓர் இயக்கத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது மொத்த முஸ்லிம் சமூகத்தையும் தழுவி நிற்கும் கூட்டு வாழ்க்கையாகும்.

எனினும், அத்தகையதொரு நேர்வழி பெற்ற சமூக அமைப்பு முறைமையொன்று இன்று அதன் தூய வடிவத்தில் இல்லை. 'நேர்வழி பெற்ற சமூகம்' என்ற தலைப்பில் அந்த உண்மையை விளக்க இருக்கிறோம். இப்போதிருப்பதெல்லாம் அத்தகையதொரு சமூக அமைப்பொன்றை உருவாக்கும் பாதையில் செயல்படும் இயக்கங்களே. இந்த இயக்கங்கள் மீது சவாரி செய்தே ஒருவர் 'நேர்வழி பெற்ற சமூகம்' என்ற இலக்கை அடைய வேண்டும்.

ஆக, நேர்வழி செல்ல விரும்பும் மனிதன் 'இஸ்லாமிய சமூகம்' என்ற கூட்டமைப்பில் இணைவதற்காக ஓர் இடைக்காலப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அந்த இடைக்காலப் பயணத்துக்கான வாகனம்தான் இயக்கங்கள். 'முஸ்லிம் சமூகம்' என்ற கூட்டமைப்பு அதன் தூய வடிவில் உருவாக்கப்பட்டு விட்டால் அப்போது முஸ்லிம் சமூகம் இயக்கங்களாகப் பிரிந்திருக்க வேண்டிய தில்லை. அந்த இலக்கை அடையும் வரைதான் இயக்கங்கள் என்ற தோற்றப்பாட்டைப் புறக்கணிக்க முடியாதிருக் கிறது. காரணம், இந்த இயக்கங்கள் மூலமாகவே நாளைய அந்த இஸ்லாமிய சமூக அமைப்பைத் தோற்றுவிக்க வேண்டும்.

இந்த இடத்தில் பின்வருமாறு ஒரு வினா எழவும் வாய்ப்பிருக்கிறது.

''இஸ்லாமிய சமூக அமைப்பு உருவாகி அதில் இணைந்து வாழும் பாக்கியம் பெறாமலே ஒருவர் இந்த இடைக்காலப் பணத்தின்போது மரணித்து விட்டால் நேர்வழிக்கான ஐந்தாவது காரணி பூர்த்தி செய்யப்பட்ட தாகக் கொள்ளலாமா?''

ஒரு முஸ்லிம் ஆரம்பத்தில் கூறப்பட்ட நேர்வழிக் கான நான்கு காரணிகளையும் பூர்த்தி செய்து ஐந்தாவது இலக்காகிய 'முஸ்லிம் சமூகம்' எனும் கூட்டமைப்பு நோக்கிப் பயணிக்கும் வேளையில் மரணித்து விட்டால் அவர் நிச்சயம் சுவனம் செல்லும் பாக்கியத்தைப் பெறு வார். காரணம், அவரது நிய்யத்தும் தணியாததாக முமாக கூட்டமைப்பு நோக்கிய அவரது பயணம் இருந் திருக்கிறது. அதற்காக அவர் உழைத்திருக்கிறார்; அர்ப் பணித்திருக்கிறார். எனவே, அந்தக் கூட்டமைப்பில் வாழ்ந்த பாக்கியத்தை அல்லாஹ் அவருக்கு நிச்சயம் வழங்கி நேர்வழி கிடைப்பதற்கான ஐந்தாவது நிபந்தனை யையும் அவர் பூர்த்தி செய்ததாகக் கருதுவான்; சுவனத் தையும் வழங்குவான்.

எனினும், நேர்வழியில் செல்ல வேண்டும் என்ற உணர்வே இல்லாது அதற்குரிய ஐந்து நிபந்தனை களையும் புறக்கணித்து வாழ்ந்த ஒருவர் தனது நிலை குறித்துப் பரிசீலிக்க வேண்டும். அவர் தௌபா செய்து உரிய நிபந்தனைகளின்பால் மீண்டு வராவிட்டால் அவர் செல்லும் பாதை ஆபத்தானதே.

நேர்வழி செல்ல விரும்பும் மனிதன் நிறைவேற்ற வேண்டிய ஐந்தாவது நிபந்தனையைப் பற்றிப் பேசும் போதே இயக்கங்கள் பற்றிய பேச்சு தவிர்க்க முடியாத தாக மாறிவிடுகின்றது. இடைக்காலப் பயணத்தின் வாகனங்கள்தான் இயக்கங்கள் என்ற வகையில் இயக்கங்கள் நேர்வழியில் இருக்கின்றனவா என்பது பற்றித் தெளிவாகப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

எனினும், ஒரு சில வாசகர்கள் எதிர்பார்ப்பது போல் இயக்கங்களது பெயர்ப் பட்டியலும் ஒவ்வொரு பெயருக் கும் எதிரில் இந்த இயக்கம் நேர்வழியில் இருக்கிறதா, இல்லையா? என்ற அடையாளக் குறியீடும் போட்டுக் காட்டுவதல்ல இந்த முயற்சி.

நேர்வழி செல்ல விரும்பும் ஒருவர் ஒரு கூட்டமைப் பைத் தெரிவு செய்வதற்கு வழிகாட்டும் விதமாக ஓர் இயக்கம் நேர்வழியில் இருப்பதற்கான அடையாளங் களைக் கீழே கோடிட்டுக் காட்டுகிறோம். இயக்கங் களும் இந்த வழிகாட்டல்களால் நன்மை பெறலாம். கூட்டமைப்பு ஒன்றைத் தெரிவு செய்து தீனை நிலை நாட்டும் பணியில் ஈடுபட விரும்பும் ஒருவருக்கும் இந்த வழிகாட்டல்கள் உதவியாக அமையலாம், இன்ஷா அல்லாஹ்.


### நேர்வழி செல்லும் இயக்கம்

நேர்வழி செல்லும் இயக்கத்தின் அடையாளங் களாக சுமார் இருபது காரணிகளை இப்பகுதியில் தொகுத்துத் தரவுள்ளோம். அதேவேளை 'நேர்வழி செல்லும் சமூகம்' என்ற அடுத்த தலைப்பில் நான்கு காரணிகள் மட்டுமே விளக்கப்பட இருக்கின்றன. இயக்கத்தை விடப் பெரியதுதானே சமூகம்? சமூகம் நேர்வழி செல்வ தற்கான நிபந்தனைகள் எப்படிக் குறைவடையலாம்? என்பது ஓர் அதிசயமாக இருக்கும். உண்மையில் 'இஸ் லாமிய சமூகம்' அதன் தூய வடிவில் உருப்பெற்று விட்டால் அது மிகத் தெளிவானதாக இருக்கும். அப்போது அது நேர்வழி செல்லும் சமூகம் என்பதை அடையாளப் படுத்த அதிக காரணிகள் அவசியப்படாது. எனினும், இயக்கம் என்பது சிக்கலானது; மயக்கங்கள் நிறைந்தது. அதனால் அதனை அடையாளப்படுத்தும் காரணிகள் சற்று அதிகம்தான் பொறுமையாகப் படியுங்கள்...

(தொடரும், இன்ஷா அல்லாஹ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எகிப்திய ஜனாதிபதித் தேர்தல்:

## இரண்டாம் சுற்றுக்குக் காத்திருப்போம்!

|| ரசீம் ஐதுரூஸ் ||

எகிப்திதை இரும்புப் பிடிக்குள் வைத்திருந்த ஹுஸ்னி முபாரக் எகிப்திய மக்கள் புரட்சியனால் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் எகிப்தில் இடம்பெறும் முதலாவது ஜனாதிபதித் தேர்தலின் முதல் கட்ட வாக்கெடுப்பு முடிவடைந்துள்ள இத்தருணத்தில், இஃவான்களின் தரப்பில் தேர்தலில் நிறுத்தப்பட்ட கலாநிதி முர்ஸி முன்னணியில் நின்றாலும் 50%க்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெறாததனால், இரண்டாம் கட்டத் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் 16, 17ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

சுமார் 23 வேட்பாளர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தும் 10 வேட்பாளர்கள் தகுதியிழப்புச் செய்யப்பட்டனர். இவர்களுள் எகிப்திய அரசியலில் செல்வாக்குப் பெற்றவர்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னணியில் மதச்சார்பற்றவர்கள் செயற்பட்டுள்ளனர் என நம்பப்படுறது. பெருமளவு வாக்குகளைப் பெறக்கூடியவர்கள் என நம்பப்படுவோரும் இஸ்லாமிய அடிப்படையில் அரசாங்கத்தை வழிநடத்தக் கூடியவர்கள் என எதிர்பார்க்கப்படுவோருமே தேர்தல் உச்ச சபையினால் தடைவிதிக்கப்பட்டவர்கள்.

குறிப்பாக இஃவான்களது பிரதித் தலைவரான ஹைரத் ஸாதிர், இஃவான்களின் அங்கத்துவத்தைப் பெற்றிருந்ததும் ஹுஸ்னி முபாரக்கின் ஆட்சிக் காலத்தில் இஃவான்களோடு தொடர்புபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் 12 வருடங்கள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். குற்றவியல் (Criminal) தண்டனைக்குட்பட்டு சிறையில் இருந்த ஒருவரால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என தேர்தல் சபை அறிவித்தது. இதே மாதிரியான ஒரு குற்றச்சாட்டின் அடிப்படையில் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் துணிச்சலாக போட்டியிட்ட ஐமன் நூரியும் தடைவிதிக்கப்பட்டுள்ளார். தேர்தலின் பின்னர் முபாரக்கின் அதிகாரத் துஷ்பிரயோக அரசினால் கைது செய்யப்பட்ட அவர், 2009இலேயே விடுதலை செய்யப்பட்டார்.

மதசார்பின்மை அரசியலுக்குப் பின்னால் உள்ள சக்திகளுக்கே எகிப்தின் இராணுவக் கவுன்ஸில், தேர்தல் உச்ச சபை என்பன தமது ஆதரவினை மறைமுகமாக வழங்கி வருகின்றன. ஏனெனில், ஹுஸ்னி முபாரக்கின் ஆட்சிக் காலத்தில் உளவுப் பிரிவின் தலைவராக இருந்து பல இஸ்லாமியவாதிகள் மற்றும் பொதுமக்களை இன்னலுக்குட்படுத்திய உமர் ஸுலைமான் என்பவரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்திருந்தார். தேர்தலில் போட்டியிடுவதற்கான போதுமான அளவு பொதுமக்கள் ஆதரவுக் கையொப்பத்தைப் பெறவில்லை என்ற அடிப்படையில் தேர்தல் உச்ச சபை அவரின் வேட்புமனுவையும் நிராகரித்தது. இவர் முபாரக்கின் ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் துணை ஜனாதிபதியாக செயற்பட்டவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபு லீக்கின் செயலாளராக இருந்தவரும் முபாரக்கின் ஆட்சியில் வெளியுறவுத்துறை அமைச்சராக செயற்பட்டவரும் அதிகளவு மதச்சார்பின்மை அரசியலோடு தொடர்புபட்டவருமான அம்ர் மூஸாவும் களத்தில் இறங்கியுள்ளார். முன்னாள் பிரதம மந்திரியாக செயற்பட்டவரான அஹ்மத் ஷபீக், இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற அப்துல் முன்இம் அபுல் பதாஹ் போன்றோர் முக்கிய வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ளனர்.

இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பின் அரசியல் சாணக்கியத்தின் காரணமாக இறுதி நேரத்தில் அதன் அரசியல் கட்சியான நீதிக்கும் சுதந்திரத்திற்குமான கட்சி, அதன் தலைவரான முஹம்மது முர்ஸியை தனது பிரதான வேட்பாளராகக் களமிறக்கியது மையப்படுத்தி நோக்கப்பட வேண்டியதாகும்.

எகிப்திய புரட்சி இடம்பெற்று சுமார் 15 மாதங்கள் உருண்டோடிய நிலையில் அங்கு கடந்த மே 23, 24ஆம் திகதிகளில் ஜனாதிபதித் தேர்தலின் முதல் சுற்று நடைபெற்றது. முழுமையான தேர்தல் முடிவுகள் மே 29ஆம் திகதியே வெளியிடப்படவுள்ளதால் இக்கட்டுரை அச்சுக்குச் செல்லும் வரை, இஹ்வான்களின் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் தலைவர் கலாநிதி முஹம்மத் முர்ஸி 25 வீத வாக்குகளையும் அஹ்மத் ஷபீக் 23 வீத வாக்குகளையும் இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற அப்துல் முன்இம் அபுல் புதூஹ் 20 வீத வாக்குகளையும் இடதுசாரி நாஸரிய்ய சிந்தனைப் போக்குடைய ஹம்தீன் ஸபாஹி 19 வீத வாக்குகளையும் பெற்றுள்ளனர். அம்ர் மூஸா 12 வீதத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றுள்ளார்.

கலாநிதி முர்ஸிக்குக்கும் ஷபீக்கிற்குமிடையிலேயே அடுத்த சுற்று வாக்களிப்பு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எகிப்தில் இடம்பெற்ற அரபு வசந்தப் புரட்சிக்குப் பின்னர் சுமார் 50 மில்லியன் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். முழு உலகின் கவனமும் குறிப்பாக, அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய தளங்களின் கவனக் குவி மையம் எகிப்துத் தேர்தலை நோக்கி குவிக்கப்பட்டிருக்கிறது. "மத்திய கிழக்கில் அணுவாயுத சக்தியை விட எகிப்தில் இஹ்வான்கள் வெற்றி பெறுவது மிக ஆபத்தானது" என அண்மையில் இஸ்ரேலியப் பிரதமர் குறிப்பிட்டிருந்தமை நோக்கத் தக்கது.

அம்ர் மூஸா, அஹ்மத் ஷபீக் ஆகியோர் எதிர்மறைச் சிந்தனையும் தாராள ஜனநாயக சிந்தனையாளர்களாகவும் திகழ்வதோடு அமெரிக்க சார்புடையோருமாவர். இத்தேர்தலில் அமெரிக்க, இஸ்ரேலிய ஊடுருவல்கள் அதிகரித்துள்ளதுடன், அம்ர் மூஸாவை வெற்றி பெறச் செய்வதற்காக ஊடக முயற்சிகளும் கட்டவிழ்த்துவிடப் பட்டுள்ளன.

### கலாநிதி முஹம்மத் முர்ஸி ஈஸா அய்யாத்

முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் நீதிக்கும் சுதந்திரத்திற்குமான அரசியல் கட்சியின் தலைவரான கலாநிதி முஹம்மத் முர்ஸி, 1951 ஆகஸ்ட் மாதம் எகிப்தின் கிழக்கு மாகாணமான ஷர்கிய்யாவில் பிறந்தார். 1978இல் கெய்ரோ பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் முதுமானிப் பட்டம் பெற்றார். 1982இல் அமெரிக்காவின் தென் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

கெய்ரோ பல்கலைக்கழகம், தென் கலிபோர்னியா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் விரிவுரையாளராகப் பணியாற்றிய அவர், 1982 தொடக்கம் 1985 வரை கலிபோர்னியாவின் நொர்த் ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகவும் பின்னர் எகிப்திலுள்ள ஸகாஸிக் பல்கலைக்கழகத்தில் 1985 தொடக்கம் 2010 வரை பேராசிரியராகவும் பொறியியல்துறை தலைவராகவும் பணியாற்றினார்.

நடைமுறை உற்பத்தித் தீர்வுகள் தொடர்பாக எகிப்திய கைத்தொழில் துறையில் பல்வேறு ஆய்வுகளைச் செய்துள்ள இவர், 1980களில் விண்கல என்ஜின் உருவாக்கம் தொடர்பாக நாஸாவில் சிறிது காலம் பணிபுரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2000-2005 வரையான காலப் பகுதியில் இஹ்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தின் பாராளுமன்றக் குழுத் தலைவராகவும் கலாநிதி முர்ஸி செயற்பட்டார். அக்காலப் பகுதியில் அவர் மிகச் சிறப்பாகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளினது சர்வதேச மாநாட்டில் அவர் அங்கம் வகிக்கிறார். சியோனிஸத்தை எதிர்க்கும் எகிப்திய திட்டக் குழுவின் ஸ்தாபக அங்கத்தவரும் இவரே.

கலாநிதி முர்ஸி மிகவும் அர்ப்பணத்துடன் பணியாற்றுபவர். சிறந்த அரசியல் தலைவர் என்பதை பல்வேறு கட்டங்களில் நிரூபித்துள்ளார். 2010இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது இஹ்வான்களின் அரசியல் நடவடிக்கைகளை வழிநடத்துவதில் முன்னின்று செயற்பட்டார்.

ஹுஸ்னி முபாரக்கின் சர்வதிகார அடக்குமுறைக்கு எதிராக செயற்பட்டதன் காரணமாக, கலாநிதி முர்ஸி பலமுறை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹுஸ்னி முபாரக்கின் அரசாங்கம் 2005 தேர்தலில் மோசடி செய்தபோது அதற்கெதிராகக் கொதித்தெழுந்தார். தேர்தல் ஊழல்கள் தொடர்பாக வெளிப்படையாகப் பேசிய நீதிபதிகளைத் தண்டிப்பதையும் அவர் கடுமையாக எதிர்த்தார். இதன் காரணமாக எகிப்திய இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டார்.

(16ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஹெம்மாதகம வரலாற்றில் ஒரு திருப்புமுனைக்கான அமர்வு என்றால் மிகையாகாது. ஊழிய உள்ளங்கள் தம் பணி எப்போது கைகிட்டும் எனக் காத்திருந்த வெள்ளிக்கிழமை (09.03.2012) நாள் அது. ஷூரா உறுப்பினர்களின் உள்ளங்களை இறை ஞாபகத்தோடு இறுகப் பிணைத்து விடுகிறார் நாஸிம்.

அன்றைய அமர்வின் பிரதான கரு, ஊழியர்களுக்கு உரமூட்டக் காத்திருக்கும் இஜ்திமா பற்றிய தீர்மானம். ஆம், 1433 ஜுமாதா அல்ஆகிர் 8ம் நாள்- 2012 ஏப்ரல் 29ம் திகதி காலை 8.30 மணி முதல் 12.30 மணிவரை குடும்ப இஜ்திமா!

ஸூரா யூஸுபின் 108 ஆவது வசனம் கூறும் 'தூர நோக்கும் பணியில் வேட்கையும்' என்ற கருவில் ஊழியர்கள் வலுவூட்டப்படுகின்றனர். அதனைத் தொடர்ந்து இஜ்திமாவின் முன்னணிப் படையாக 30 பேர் கொண்ட குழுவொன்று தம் கரங்களில் பொறுப்புகளைச் சுமந்து கொள்கிறது.

குழு' மற்றும் 'இஜ்திமா கள ஏற்பாட்டுக் குழு', இஜ்திமாவை சமூகமயப்படுத்திட 'ஊடகக் குழு', அனைத்துக் குழுக்களையும் இயங்கச் செய்திடும் நிதிக் குழு. இவை அனைத்திற்கும் பக்கபலமாக 'பெண்கள் அணி' என அல்லாஹ்வின் அருளால் அனைத்துக் குழுக்களும் கச்சிதமாகப் பணியாற்ற உறுதிபூண்டன.

குழுக்களின் பணி களைகட்ட ஆரம்பித்தது. வாராந்த முஹாஸபாக்களாக மார்ச் 23, 30 ஏப்ரல் 06, 12, 19, 20, 23, 26 முதலான நாட்களில் சந்திப்புக்கள் இடைவிடாது தொடர்ந்தன. நாட்கள் நெருங்க நெருங்க ஊழியர் உள்ளங்கள் இஸ்திக்பார் செய்ய ஆரம்பித்தன.

பிரசாரக் குழு தனது பணியின் முதல் நடவடிக்கையாக "எதிர்பாருங்கள்" சுவரொட்டியை குறித்த திகதியில் (09.04.2012) தல்கஸ்பிட்டி, பள்ளிப்போருவ, ஹிஜ்ராகம, அமுருப்ப, மடுல்போவ, வாடியதன்ன, தும்புளுவாவ, கொடேகொட என சுவர்களில் பதித்தன.




# சமூக மாற்றமும் சுவனப் பாக்கியமும்

## ஹெம்மாதகம வரலாறு கண்ட இஜ்திமா

இறை தொடர்பு இன்றேல் இப்பணி சிறப்புறாது என்ற வகையில் மூன்று நோன்பு வைத்து, ஒவ்வொரு நாள் தொழுகையிலும் இஜ்திமாவின் வெற்றிக்காகப் பிரத்தியேகப் பிரார்த்தனை என்ற தீர்மானத்தோடு அடுத்த வார சந்திப்பை எதிர்பார்த்தவர்களாக முதலாவது அமர்விலிருந்து ஊழிய உள்ளங்கள் பிரிந்தன.

23.03.2012 இல் அடுத்த அமர்வு தலைமையுரையோடு ஆரம்பமாகியது. 5000 பேரை இலக்காகக் கொண்ட குடும்ப இஜ்திமா பணிகளுக்கென இஜ்திமாவின் செய்தி பரப்பிட 'பிரசாரக் குழு'; சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தும் பிரமுகர்களோடு சந்திப்பை ஏற்படுத்த 'பிரமுகர் சந்திப்புக்

ஏப்ரல் 20 ஜுமுஆவுக்கான அழைப்பு. ஹெம்மாதகம பிரதேச குத்பா மேடைகள் 'கண்குளிர்ச்சி தரும்குடும்பம்' கருப்பொருள் சுமந்து நின்றன.

தலைக்கு வெள்ளையடித்த இளைஞர்களோ இவர்கள் என்றெண்ணத் தோன்றும் வண்ணம் பிரமுகர் சந்திப்புக்கு வீறுநடை போட்டு வேலை செய்த பிரமுகர் சந்திப்புக் குழுவின் முதலாவது அறுவடை அது. ஆம், இஜ்திமாவை முன்னிட்டு 'முஸ்லிம் சமூகம் மாற்றத்தை நோக்கி' என்ற தலைப்பில் பிரமுகர்களுக்கான ஓர் அமர்வு 20.04.2012இல் அஸ்ஹர் நவோதய பாடசாலையின் கேட்போர்கூடத்தில் களைகட்டுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமாஅத்தின் பொது உறவுப் பகுதிப் பொறுப்பாளர் சகோதரர் நஜா முஹம்மத் (இஸ்லாஹி) பிரதான உரை நிகழ்த்துகிறார். கேள்விகளும் கருத்துக்களும் செவிமடுத்த உரைக்கு மெருகூட்டுவதாக அமைந்தன. அதனைத் தொடர்ந்து இஜ்திமா அறிமுகம் நடைபெற, "எமக்கும் வாய்ப்புண்டோ இப்பணியில் இணைய?" என்றாற்போல் பிரமுகர்கள் எழுந்து நின்றனர் சுப்ஹானல்லாஹ் கலிமா வுடன்.

**21.04.2012** காகிதம் சுமந்த இஜ்திமா செய்தியை, கரங்கள் சுமந்து வீடு தேடிச் சென்று சேர்ப்பித்ததை ஒவ்வொரு வீட்டு வாயிலும் சாட்சி சொல்லும். ஒருநாள் கழித்து பெண்கள் படையணி அதே செய்தி சுமந்து ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்டியது, அல்ஹம்து லில்லாஹ்.

ஏப்ரல் **24, 25** இஜ்திமாவின் பிரசவ நாளும் நேரமும் எதிர்பார்த்திருந்த சொந்தங்கள் இஜ்திமா தினம் **29.04,2012** என்று ஹெம்மாதகம, தல்கஸ்பிடிய பிரதேசங்களில் வீதிதோறும் சுவரொட்டி அடித்து... வீடு தோறும் அழைப்பிதழ் கொடுத்து... ஸ்டிக்கர் பதித்து "உங்கள் குடும்பம் கண்குளிர்ச்சி கண்டு இந்நாடு அமைதி பெறுவது எவ்வாறு என்பதனை அறிந்திட வாரீர்" என்றழைத்தன.

**27.04.2012** இலங்கை முஸ்லிம்களின் உளக்கீறலுக்கு வேல் பாய்ச்சிய நாள். தம்புள்ளை மஸ்ஜிதுல் ஹைரியாவுக்காக விண் நோக்கி உயர்த்திப் பிரார்த்தித்த கைகளோடு குடும்ப இஜ்திமா பற்றிய அறிமுகம் மஸ்ஜித் தோறும் இடம்பெற்றது, அல்ஹம்துலில்லாஹ்.

பதிநான்காயிரம் சதுர அடி பரப்புக் கொண்ட கூடார வேலைகள் முற்றுப் பெற்று, ஊழியர்கள் தமது வேலைகளைக் கச்சிதமாய் முடித்த மகிழ்ச்சியில் அல்லாஹ்வைப் புகழ்ந்து இஜ்திமா மணித்தியாலங்களை எண்ணி எண்ணி இருந்த வேளை, அலைவரிசை **96.1**இல் மதீனா எப்.எம். இஜ்திமா செய்திகளைச் சுமந்து வர, சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரது கரங்களும் வானொலிப் பெட்டிகளில் மீட்டர் பிடித்தன.

மேற்கு வானம் சிவக்க சூரியன் விடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஊழியர்கள் இஜ்திமாவின் மீதமுள்ள வேலைகளை முடித்து, வட்டமிட்டு அமர்ந்தனர் இஜ்திமாவுக்கு முன்னதான முஹாஸபாவிற்காக! செய்து முடித்த பணிகளில் அல்லாஹ்வின் உதவி பற்றிய செய்திகள் பரிமாறி இஜ்திமாவின் வெற்றிக்காகப் பிரார்த்தித்துக் கலைந்தனர்.

**29.04.2012** அதிகாலையில் விழித்த ஊழியர்கள் குழு கரம் ஏந்தி,

"யா அல்லாஹ்! இந்த இஜ்திமாவை இப்பிரதேச மக்களின் மாற்றம் நோக்கிய நகர்வின் மைல்கல்லாக ஆக்குவாயாக! இப்பணி பொருந்தி, எம் பாவக்கறை நீக்கி நரக விடுதலை அளித்து, திருப்பொருத்தமும் சுவன பாக்கியமும் தருவாயாக!" என்று பிரார்த்தித்த வண்ணம் இருக்க...

"அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்..." சுபுஹ் தொழுகைக்கான அல்லாஹ்வின் அழைப்பு சங்க நாதமாய் செவிகளைத் துளைக்க, தொழுகை முடித்த ஊழியர்கள் **8.30** மணியை எதிர்பார்த்து நின்றனர். கிராமத்து மஸ்ஜிதுகளின் ஒலிபெருக்கிகளில் மீண்டும் இஜ்திமாவுக்கான அழைப்புகள்.

நேரம் **7.30**ஐ நெருங்கும் வேளையில் கருமேகக் கூட்டமொன்று நகர்ந்து வந்தது. ஒரு கணம் திகைத்து நின்ற ஊழியர்கள், இஜ்திமாவுக்கான முன்னெடுப்புக்கள் அத்தனையையும் கச்சிதமாக நிறைவேற்றிய திட உறுதியில் அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டினர்.

"யா அல்லாஹ்! நீ தந்த அருள் கொண்டு எம்பணி செய்திட்டோம். இக்கரு மேகம் அகற்றிட எம்மால் இயலாது. அருள் பொழிவாய் ரஹ்மானே!"

சிந்தியது கண்ணீர்... கலைந்தது மேகம். சூரியன் சிரித்து மகிழ்வித்தான், அல்ஹம்துலில்லாஹ்.

கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளைகள், முதியவர்-மூதாட்டி, சகோதரன்-சகோதரி என அல்லாஹ்வின் அருளால் மக்கள் வெள்ளம் அலைமோதியது. பெண்கள் அங்கே; ஆண்கள் இங்கே பலகை பார்த்து உள்ளே நுழைய புன்முறுவல் பூத்து ஸலாம் சொல்லி, கரம் பிடித்து, பெயர் பதிந்து பக்குவமாய் அமரச் செய்தனர் ஊழியர் படையினர்.

அல்லாஹ்வின் வேத வசனங்கள் உள்ளங்களில் ஊடுருவி பக்குவம் செய்தன, உரைகளுக்குச் செவி சாய்க்க.

மத்திய பிராந்திய நாஸிம் சகோதரர் என்.எம்.எம். மன்ஸூர் அல்லாஹ்வின் நாமம் போற்றி இஜ்திமாவை ஆரம்பித்து வைக்கிறார்.

ஆரம்ப உரை 'கண்குளிர்ச்சி தரும் குடும்பம்.' அஷ்ஷெய்க் ஆர்.எம். இப்ராஹீம்.

எந்த வார்த்தையும் விட்டு வைக்கப்படாமல் பற்றிப் பிடித்து உள்ளத்தில் செருகிக் கொள்ளும் அவா அனைவரிடத்திலும். "எமது குடும்பத்தின் கண்குளிர்ச்சியை எங்கெங்கே தேடினோம். இப்பொழுதல்லவா தெரிகிறது எங்கிருக்கிறது என்று; உரை தொடர்ந்தால் நன்றாக இருக்குமே...!" இது பலரது ஆதங்கம்.

**14** ஆயிரம் சதுர அடி இடம் பற்றாக்குறையாகிறது... இடநெருக்கடியைச் சமாளிக்க மீண்டும் இரண்டு டென்ட், மஸ்ஜித் என இட ஒதுக்கீடுகளுக்காக பரபரப்பாகிறது பெண்கள் அணி.

மதீனா எப்.எம். மணித்தியாலக் கேள்வியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசளிப்பு நிகழ்வை நடத்தியது. மத்திய பிராந்திய நாஸிம், மன்ற நாஸிம் பரிசில்களை வழங்கி மகிழ்விக்க, இரண்டாம் உரைக்கான அழைப்பு விடுக்கப்படுகிறது.

அஷ்ஷெய்க் மின்ஹாஜ் (இஸ்லாஹி) 'நாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் நலம் பெற' எனும் தலைப்பில் உரைநிகழ்த்த எழுந்து நின்றார்.

இந்நாடு செழிக்க நம் முன்னோர் செய்த பணி, வரலாறு குறித்துச் சொன்ன அவர், எம் பணி தொடர ஆலோசனை சொன்னார். அழகான விளக்கம். இதுவும் இஸ்லாமியப் பணி என்பது இப்போதுதான் புரிகிறது. உள்ளங்கள் ஆனந்தமடைவது அவர்களது கண்களில் தெரிகிறது.

குடும்பத்தின் ஆணிவேர் தாய். அவள் பணி மறப்பது நன்றோ என்றாற்போல் ஓர் இனிமையான பாடல். அமர்ந்திருந்தவர்களின் உள்ளங்களைத் தட்டிவிட்டது அந்தப் பாடல்.

அதனைத் தொடர்ந்து எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உரை! இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் 'சமூக மாற்றமும் சுவனப் பாக்கியமும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்த ஒலிவாங்கி முன்...

இப்பூமியில் எத்தனையோ நல்ல மனிதர்கள் இருப்பது என்பது ஒரு சமூகம் நேர்வழியில் இருக்கிறது என்பதற்கான அடையாளம் அல்ல. மாற்றமாக, அந்த நல்ல மனிதர்கள் கொண்ட சமூகத்தை மார்க்கம் பற்றிய தெளிவான விளக்கமும் தூய்மையான உள்ளமும் (ஈமானும் அழகிய பண்புகளும்) அல்லாஹ்வின் தீனுக்கு தனது சொல்லாலும் செயலாலும் சான்று பகர்வதற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மனிதர்கள் வழிநடத்த வேண்டும்.

தலைமைத்துவம் இல்லாத சமூகம் நேர்வழி பெற முடியாது. மாற்றமாக, சில மனிதர்களே நேர்வழி பெறுவர். சமூக மாற்றத்தின் இரண்டாவது தேவை; கட்டுப்படும் சமூகம்; மூன்றாவது தேவை அதிகாரம். இந்த மூன்று பண்புகளையும் பெற்று நிற்கும் சமூகமே சுவனத்தின் பாதையில் பயணிக்கின்ற சமூகம். இவ்வாறானதொரு சமூக மாற்றத்தை நோக்கிய பணியே சுவன பாக்கியத்தைப் பெற்றுத் தரும் என்று தனக்கே உரிய பாணியில் தொடர்ந்தார் அமீர்.

ஹெம்மாதகம வரலாறு கண்ட இஜ்திமா அல்லாஹ்வின் உதவியால் ழுஹர் தொழுகைக்கான அழைப்போடு நிறைவு பெற்றது, அல்ஹம்துலில்லாஹ். இறை செய்தி சுமந்த உள்ளங்கள் துஆவுடன் விரைந்து சென்றன ழுஹர் தொழுகைக்காக. ——

எகிப்திய..(13ஆம் பக்கத் தொடர்)

இவரோடு மற்றும் பல இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பைச் சார்ந்தோரும் கைதுசெய்யப்பட்டனர்.

எகிப்திய அரசாங்கத்திற்கெதிரான புரட்சி வெடித்து சில நாட்களில் கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது அவர் மீண்டும் கைதுசெய்யப்பட்டார். அவருடன் பெருந் தொகையான இஹ்வான்களும் கைதுசெய்யப்பட்டனர்.

புரட்சியின்போது சிறைகள் உடைக்கப்பட்டு, கைதிகள் பலர் தப்பிச் சென்றபோதும் கலாநிதி முர்ஸி தனது சிறைக்கூடத்திலிருந்து வெளியேற மறுத்தார். அங்கிருந்தவாறு செய்மதி தொலைக்காட்சி சேவைகளைத் தொடர்பு கொண்ட அவர், நீதித்துறை அதிகாரிகளை சிறைக்கு வந்து, கைதுசெய்யப்பட்ட இஹ்வான் தலைவர்களது சட்டநிலை தொடர்பாக ஆராயுமாறு வேண்டினார். அவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு ஏதேனும் சட்டரீதியான காரணங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்த பின்பே அவர்கள் சிறையிலிருந்து வெளியேற வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

எகிப்திய புரட்சிக்குப் பின்னர் இஹ்வான்களது ஷூராவினால் புதிதாக உருவாக்கப்பட்ட சுதந்திரத்திற்கும் நீதிக்குமான அரசியல் கட்சியின் தலைவராக அவர் தெரிவுசெய்யப்பட்டார்.


SCHOLARSHIP

STUDY IN MALAYSIA

மலேசியாவில் முற்றிலும் இலவசமாக
Degree மற்றும் Diploma
முடிப்பதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!

O/Lல் ஆங்கிலத்தில் C உட்பட 03C சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருந்தால் Diplomaவையும் A/Lல் 02C மற்றும் ஒரு S சித்தியுடன் Degreeயும் தொடரலாம்

**Diplomas**
1. Business Information System
2. Accounting
3. Marketing
4. Hotel Management
5. Tourism Management
6. Auto Mobile
7. Electrical

FREE
EDUCATION
FOOD
ACCOMMODATION
MEDICAL

DURATION
03 YEARS

**Degrees - Honors**
1. BBA - Entrepreneurial
2. BBA - Accounting

HOTLINE
0777 55 34 34

GOLDEN COLLEGE CITY CAMPUS
548, Peradeniya Road, Kandy.
0812 20 55 44 / 0718 032 967




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு பிராந்திய

# இஜ்திமா 2012



இம்முறை கொழும்பு பிராந்திய குடும்ப இஜ்திமா

## "கண்குளிர்ச்சி தரும் குடும்பம்; மனித வாழும் தேசம்!"

எனும் கருப்பொருளின் கீழ் மூன்று வெவ்வேறு இடங்களில் நடைபெற இருக்கிறது. இன்ஷா அல்லாஹ்.

**கொலன்னாவை- ராஜகிரிய மன்றம்**

இடம்: மங்கலபாய மண்டபம், I.D.H. வீதி, கொலன்னாவை
நேரம்: மு.ப. 8.30 - 12.00
திகதி: 17.06.2012
தொடர்புகளுக்கு: சகோதரர் எம்.யூ.எம். ரஹ்மி- 0777587058

**தெமட்டகொட - கொழும்பு மத்திய மன்றம்**

இடம்: டவர் மண்டபம், மருதானை, கொழும்பு - 10
திகதி: 01.07.2012
நேரம்: மு.ப. 8.30-12.00
தொடர்புகளுக்கு: சகோதரர் ஏ.எச்.எம். ஷிராஸ்- 0774146688

**தெஹிவளை- ஹெவ்லக் டவுண் மன்றம்**

இடம்: பின்னர் அறிவிக்கப்படும்
திகதி: பின்னர் அறிவிக்கப்படும்
நேரம்: மு.ப. 8.30-12.00
தொடர்புகளுக்கு: சகோதரர் எம்.எச்.எம். பாஸிம் - 0777683088

பின்வரும் தலைப்புகளில் உரைகள் இடம்பெறும்:

- கண்குளிர்ச்சி தரும் குடும்பம்
- சமூக மாற்றமும் சுவனப் பாக்கியமும்
- நாடும் நாமும் நலம் பெற...

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

உங்களது குடும்பம் கண்குளிர்ச்சி கண்டு இந்நாடு அமைதி பெறுவது எப்படி என்பதை அறிந்திட குடும்ப சகிதம் அணிதிரண்டு வாருங்கள்!

ஏற்பாடு: **இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி**

மேலதிக விபரங்களுக்கு: கொழும்பு பிராந்தியம் 0773585586

ஜமாஅத்தின் கொழும்பு பிராந்தியத்தின் இலவச Twitter சேவையைப் பெற்றுக் கொள்ள FOLLOW (space) SLJICMB என Type செய்து 40404 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்பவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிக இலகுவில் ஆங்கிலம் பேச வேண்டுமா?

உங்கள் மூளைக்கு ஆங்கிலத்தை பழக்குங்கள்..

ஆங்கிலம் என்பது ஒரு மொழி– மொழி என்பது படித்து பழகக் கூடியதல்ல. பேசிப் பழகக் கூடியது. இதை இப்படி புரிந்து கொள்ளுங்கள்... ஒருவர் சைக்கிள் ஓட்டுவதற்காக சைக்கிள் சம்பந்தப்பட்ட ஆயிரம் புத்தகங்களை படித்தாலும் அவரால் சைக்கிள் ஓட்ட முடியாது. ஆனால் 4 நாட்கள் ஓட்டிப் பழகினால் விழுந்து விழுந்தாவது ஓட்ட ஆரம்பித்து விடுவார்.... சாதாரணமாக ஒருவன் ஒரு மொழியை பேசும் நேரத்தில் பேசும் விடயத்தை சிந்தித்து பேசுவார். பேசும் மொழியை சிந்திக்க மாட்டார். அதாவது தன்மை, முன்னிலை, படர்க்கை, இறந்த காலம், நிகழ்காலம் எல்லாம் அவர் பேச்சில் வரும் நேரத்தில் அதற்கேற்றவாறு பேசுவார். ஆனால் அவர் அதை சிந்தித்து பேச மாட்டார். அவர் அறியாமலே பேசுவார். எந்த விடயத்தை பேசுகிறாரோ அதை தான் சிந்தித்து பேசுவார். ஏனெனில் அவர் பேசும் மொழி அவர் மூளைக்கு பழக்கப்பட்டுள்ளது.

மிக இலகுவில் ஆங்கிலம் பேச–
உங்கள் மூளைக்கு ஆங்கிலத்தை பழக்குங்கள்!

**Call For Further Details**
**0774447110**

# Spoken English
## With Grammar



## Just in 8 Days

- Only 15 Students
- Free Hostel Facilities
- Course Fee 8000/= Only

Colombo- June 11 - 20 Kandy- June 25 - July 04

## 8 நாட்களில் ஆங்கிலம் பேச முடியுமா ?...

சின்ன ஒரு Calculation ...

6 மாத கால ஆங்கில வகுப்புக்கள் கிழமையில் ஒரு நாளில் 2 மணித்தியாலங்கள் நடைபெறும். மாதத்திற்கு 8 மணித்தியாலங்கள். 6 மாதத்திற்கு 48 மணித்தியாலங்கள்.... 8 நாட்களில் நடைபெறும் ஆங்கில பாடநெறியானது, ஒரு நாளைக்கு 8 மணித்தியாலங்கள், என்ற அடிப்படையில் 64 மணித்தியாலங்கள் நடைபெறுகின்றன. 48 மணித்தியாலங்களில் நடைபெறும் வகுப்பில் ஆங்கிலம் பேச முடியும் என்ற சாத்தியம் இருந்தால், 8 நாட்களில் ஏன் முடியாது?

# IRO College Of Education

**Colombo** 105,(3rd floor) Jayantha Weeresekera Mw, Colombo-10

**Kandy** 458,(1st Floor) Peradeniya Road, Kandy.


# HONEY MEDI CARE

## CURE WITH PURE HERBAL



எம்மிடம்...

- நாற்பட்ட மூட்டுவலி (Arthritis)
- முதுகுவலி (Back Pain)
- நீண்டநாள் குணமடையாத தலைவலி (Prolong Headache)
- கழுத்து மற்றும் தோற்பட்டை வலி (Neck & Shoulder pain)
- தோல் நோய்கள் (Eczema, Psoriasis, Scabice, etc)
- சிறுநீரக, பித்தப்பை கற்கள் (Renal, Gold bladder calculi)
- பிள்ளைப் பேறின்மை (Sub fertility)
- மாதவிடாய் பிரச்சினைகள் (Menstrual problem)
- பெண் பாலியல் குறைபாடுகள் (Sexual problem)
- மூலவியாதி (Piles)
- பாரிசவாதம் (Paralysis)
- தீராத சளித்தொல்லை (Phlegm, Sinusitis, Asthma




பக்கவிளைவுகளற்ற தூய மூலிகை மருந்துகளினூடாக (HERBAL MEDICINE) நீண்ட நாள் வைத்தியத்தினூடாகவும் குணமாகாத நோய்களுக்கு நிரந்தர நிவாரணம் காண. இப்போது யூனானி, ஆயுர்வேதம், ஹோமியோபதி சிகிச்சை

HONEY MEDI CARE CURE WITH PURE HERBAL
No 109, Arunodaya Mawatha, Obeysekarapura, Rajagiriya.
Phone: 0112866467

- உளவளத்துணை (Psychology Counseling)
- பெண்களுக்கான சகல சிகிச்சைகளும் பெண் வைத்தியர்களினால் செய்யப்படும்
- சகல சிகிச்சை முறைகளும் தகுந்த தகுதிவாய்ந்த அரச அங்கீகாரமும் பதிவும்

சேவை நேரம்: திங்கள்- வியாழன் 4.00- 9.00 சனி, ஞாயிறு- மு.ப. 9.00- பி.ப. 1.00

காத்திருப்புகளைத் தவிர்த்துக் கொள்ள முன்பதிவு செய்து கொள்ளவும்

**விஷேட சேவைகள்**

Hijamath சுத்தமானதும் பாதுகாப்பனதுமான முறையில் எந்தவித பக்கவிளைவுகளற்ற குத்தி எடுத்தல் (Cupping) "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் ஹிஜாமாவை நிறைவேற்ற விரும்புகிறார்களோ (பிறை 17,19,21) ஆகிய தினங்களில் மேற்கொள்ளட்டும். அதில் அனைத்து நோய்களுக்கும்

HONEY MEDI CARE
CURE WITH PURE HERBAL
Dr J. Aynul Fasmiya BUMS (Hones) (uc.co) Dip in psy cou CHM.
Double Cer. in Panchakama, Marma & Therapeutic Massage.
SLAMC Re No. 13057,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமுதாயச் சீரமைப்பில் மாணவியர் பங்கு

ஜரீனா ஜமால்

"மனித இனத்தைச் சீர்படுத்துவதற்காக தோற்றுவிக்கப் பட்டிருக்கும் மிகச் சிறந்த சமூகத்தவராய் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் நன்மை புரியும்படி ஏவுகிறீர்கள்; தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள். மேலும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறீர்கள்." (3: 10)

"நன்மையின்பக்கம் அழைக்கக்கூடிய ஒரு குழுவினர் உங்களிடையே கண்டிப்பாக இருந்திட வேண்டும். அவர்களோ நல்லவை புரியும்படி ஏவ வேண்டும்; தீயவற்றிலிருந்து தடுத்தவண்ணம் இருக்க வேண்டும். எவர்கள் இப் பணியைப் புரிகிறார்களோ உண்மையில் அவர்களே வெற்றியாளர்." (3: 104)

மேற்கண்ட வசனங்கள் யாருக்கு? முஃமின்களுக்கு. ஆணுக்கா? பெண்ணுக்கா? மாணவர்களுக்கா? மாணவிகளுக்கா?

ஒரு பெண் நன்றாக இருந்தால் அவள் வாழும் வீடும் நன்றாக இருக்கும். ஆணும் பெண்ணும் கலந்துதான் ஒரு சமுதாயம். இந்த தேசத்தின் தூண் இளைஞர்கள். இளைஞர்கள் ஒரு நாட்டின் எதிர்காலத் தூண்கள் என்று கூறுகிறோம்.

விவேகானந்தர் கூறினார்: "100 இளைஞர்களை என்னிடம் கொடுங்கள். மிகச் சிறந்த இந்தியாவை உருவாக்கிக் காட்டுகிறேன்."

இன்றைக்கு இளைஞர்களுக்கு சமமாக யுவதிகளும் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுகிறார்கள்.

மருத்துவத்துறை, பொறியியல் வல்லுனர்கள், மின்னணு ஊடகங்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் என்று அங்கிங்கெனாத படி எங்கும் பிரகாசமாக ஆணுக்குச் சமமாக ஆட்சி செலுத்துகிறார்கள்.

"பலமான முஃமின் பலவீனமான முஃமினை விட அல்லாஹ்வின் பார்வையில் விருப்பமானவன்." (நபிமொழி)

பலமான உறுப்புகளுடன், பல வளமான காரியங்களைச் செய்யலாம்.

ஈமான்-அமல்-உடல் மூன்றுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உள்ளது. ஈமான் சரியாக இருந்தால் அமல்களும் அழகாக இருக்கும். அந்த அமலைச் செய்யக்கூடிய உடலும் ஒழுங்காக, நன்றாக இருக்க வேண்டும்.

இன்று ஈமானுக்கும் அமலுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதை விட, ருசிக்கும் நாவுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவது அதிகம்.

ஈமானுள்ள அமல்களில் சிறந்த அமல், சமுதாய நற்பணி. எனவே, இன்றைய தேவை சமூக அக்கறை கொண்ட இளைஞர்களின் பலம்; மனம். இவர்களால்தான் சீரழிவில் சிக்கிக் கொண்டிருக்கும் மாணவிகளைக் காப்பாற்ற முடியும்.

இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். "அல்லாஹ்வின் வரம்புகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பவனுக்கும் அவற்றை மீறி நடப்பவர்களுக்கும் உவமை ஒரு கூட்டத்தாரைப் போன்றதாகும். அவர்கள் கப்பலில் (தங்களுக்கு இடம் பிடிப்பதற்காக) சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். (அதன்படி) அவர்களில் சிலருக்கு கப்பலின் மேல் தளத்திலும் சிலருக்குக் கீழ் தளத்திலும் இடம் கிடைத்தது.

கீழ் தளத்தில் இருந்தவர்களுக்கு தண்ணீர் தேவைப்பட்டபோது அவர்கள் மேல் தளத்தில் இருப்பவர்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. (அதனால் மேலே இருந்தவர்களுக்கு சிரமம் ஏற்பட்டது) அப்போது கீழ் தளத்தில் இருந்தவர்கள் நாம் தண்ணீரைப் பெறுவதற்காக கீழ்த் தளத்தில் துளையிட்டுக் கொள்வோம். நமக்கு மேலே இருப்பவர்களைத் தொந்தரவு செய்யாமலிருப்போம். என்று பேசிக் கொண்டார்கள்.

அவர்கள் விரும்பியபடி செய்ய மேல் தளத்தில் உள்ளவர்கள் அனுமதித்து விட்டால் என்ன ஆகும்? கப்பலில் இருப்பவர்கள் அனைவரும் அழிந்து போவார்கள்.

துளையிட விடாமல் அவர்களைத் தடுத்துக் கொள்வார்களாயின் அவர்களும் தப்பிப் பிழைத்துக் கொள்வார்கள் அவர்களுடன் கப்பலில் உள்ள மற்ற அனைவரும் தப்பிப் பிழைத்துக் கொள்வார்கள்" என்று நுஃமான் இப்னு பஷீர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் ஸஹீஹுல் புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொதுவாகவே முஸ்லிம்களாகிய நாம் தமது சொந்தப் பிரச்சினைகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறோம். எமது உரிமைகளுக்காக குரல் கொடுக்கிறோம். குரல் கொடுக்கத்தான் வேண்டும். உரிமைகளைப் பெற்றிடப் போராடித்தான் ஆக வேண்டும். ஆனால், அது மட்டும் போதுமா?

பொதுவாக மக்கள் அனைவரையும் பாதிக்கின்ற பிரச்சினைகள் அனைத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் குரல் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

இலஞ்சம், ஊழல், விலைவாசி ஏற்றம், வறுமை, மது, ஆபாசம், போதைப் பொருட்கள், விபச்சாரம், வன்முறை, குழந்தைகளுக்கெதிரான கொடுமைகள்... இவை பேன்ற எல்லாவிதமான மக்கள் பிரச்சினைகளுக்காகவும் நாம் குரல் கொடுக்க வேண்டும்.

எப்படிக் குரல் கொடுக்க வேண்டும்?

மக்களின் அவலங்களைக் களைத்திட நம்மால் இயன்ற வரை களம் இறங்கிப் பணியாற்ற வேண்டும். இதுதான் சமுதாயத்தை சீரமைக்க மாணவியர் எடுத்துக் கொள்ளும் பங்காகும்.

***"எப்பணி நல்லதாவும் இறையச்சத்திற்குரியதாகவும் உள்ளதோ அதில் எல்லோருடனும் ஒத்துழையுங்கள். ஆனால், எது பாவமானதாகவும் வரம்பு கடந்ததாகவும் உள்ளதோ அதில் எவருடனும் ஒத்துழையாதீர்கள்." (5:3)***

சமுதாயப் பணி செய்ய குர்ஆன் வகுக்கும் முக்கிய வசனமே இதுதான்.

மன அழுத்தம், மனச்சோர்வு, தற்கொலை எண்ணம், முதியோர் பிரச்சினைகள், விவாகரத்து, குழந்தைகளைப் பாதிக்கும் மனநலப் பிரச்சினை, குடும்ப வன்முறை, கல்லூரி, பள்ளிக் கூட வளாகங்களில் பெண்களைப் பாதிக்கும் தற்கொலை நிகழ்வுகள்... போன்ற அனைத்து விதமான பிரச்சினைகள் குறித்தும் பொது அரங்குகளில் மாணவிகள் விவாதம் புரிய வேண்டும். பாடலும் ஆடலும் கிளுகிளுப்பான கடி ஜோக்குகளும் மட்டுமே வாழ்க்கை அல்ல! இவை தீமைகளின் திறவுகோல் என்பதை மாணவிகள் உணர்ந்து மற்றவர்களுக்கும் அதனை உணர்த்த வேண்டும்.

பிரச்சினைகளுக்கான சரியான தீர்வு குறித்து மற்றவர்களுடன் விவாதித்திட வேண்டும்.

இஸ்லாம் மேற்கண்ட பிரச்சினைகள் அனைத்துக்கும் தருகின்ற நடைமுறைத் தீர்வு குறித்து மக்களுக்கு புரிய வைத்திட வேண்டும்.

ஒரு கட்டிடம் எழ எப்படி பிளானிங் மாஸ்டர்களும் ஆக்கிடெக்சர்களும் இன்ஜினியரும் மேஸ்திரி, கொத்தனர், சித்தாள், ஆசாரி, பெயின்டர்... என்று தன் பங்கைக் கொடுக்கின்றார்களோ அது போல. தீன் என்ற கட்டிடத்தைத் தன் தோள்களில் தாங்கிப் பிடிக்கும்படியாகவே நமது ஒவ்வொரு செயலும் அமைந்திட வேண்டும்.

இதில் நமது சமுதாய அக்கறை வெளிப்பட வேணடும். கொஞ்சமும் உள்நோக்கம் இருந்திடக் கூடாது. நாம் சுயநலம் இல்லாமல் நேர்மையாகவும் மனத்தூய்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும். இறைவன் ஒருவனின் திருப்திக்காகவே நமது செயலும் அமைந்திட வேண்டும்.

"பூமியில் உள்ளவர்கள் மேல் கருணை காட்டினால் அர்ஷில் உள்ளவன் நம்மீது இரக்கம் காட்டுவான்."

கப்பல் பற்றிய நபிமொழியின் கருத்து நமக்கு என்ன செய்தியைத் தருகிறது?

பொதுப் பிரச்சினைகளுக்காக நாம் குரல் கொடுக்கா விட்டால் அதே பிரச்சினைகளில் நாமும் சிக்கிக் கொண்டு விடுவோம்.

மதுவும் போதைப் பொருட்களும் நம் சமூகத்தைப் பாதிக்கும்.

விபச்சாரம் நம்மை மட்டும் விட்டு வைக்காது.

விலைவாசி நம்மையும் சேர்த்துத்தான் வாட்டும். நமக்குத் தேவை புதிய தலைமுறை, சமுதாய சீரமைப்பில் மாணவியரின் பங்களிப்பு.

இந்தப் புதிய தலைமுறை இளைய தலைமுறையாக இருந்தால் எவ்வளவு நல்லது!

யுவதிகளின் தலைமுறை தெளிவாக சிந்திக்கின்ற தலைமுறை.

தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொள்கின்ற ஒரு தலைமுறை.

உணர்ச்சிவசப்படாத ஒரு தலைமுறை.

தொலைநோக்குப் பார்வை கொண்ட இஸ்லாத்தைப் பின்பற்ற விரும்பும் மாணவியரின் படை.

இப்படிப்பட்ட பங்களிப்பை மாணவிகளும் தம் பங்கிற்கு வழங்கினால் அப்போது மட்டுமே கப்பல் காப்பாற்றப்படும்.

தன்னம்பிக்கை கொண்ட சமுதாயமாக மாறும். மக்களைப் பற்றி கவலைப்படக் கூடிய ஒரு தலைமுறையாக மாறும்.

அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் மகள் அஸ்மா (ரழியல்லாஹு அன்ஹா) அர்களின் வயதும் வாழ்வும் அறிவு நுணுக்கமும் நமக்கு முன்மாதிரி. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிஜ்ரத் புறப்படும் சமயத்தில் அவர்களின் பொருட்களைக் கட்டி அனுப்பியதும் தௌர் குகையில் தங்கியிருந்தபோது உணவும் செய்தியும் கொண்டு போன பாங்கும் உலக உளவுத்துறைக்கு கூட வராத ஒன்று.

படிக்கும் பருவத்தில் சமுதாய சேவையா? படிக்கும் காலத்தில் தொழுகையா? குர்ஆன் ஓத ஏது நேரம்? என்று கேட்கிறார்கள்.

அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் இளைய மகள் ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் வயது 12க்குள் தான். பத்ர் போர்க் கால கட்டத்தில், களத்தில் இறங்கிப் பணி செய்தது விலை மதிக்க முடியாத பங்காகும். (25ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி ஹரூபா அஸ்ஹர் கள்-எலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1953 செப்டம்பர் 27ஆம் திகதி முஹம்மத் ஸலாஹுத்தீன்- பாத்திமா தூபா தம்பதியினருக்குப் பிறந்த இவர் ஆசிரியையாக, அதிபராக, கம்பஹா, மினுவங்கொடை கல்வி வலயங்களின் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார். கல்வித் துறையில் சாதிக்க விரும்பும், சமூக முன்னேற்றத்தில் பங்களிப்புச் செய்ய முயற்சிக்கும் பெண்களுக்கோர் எடுத்துக்காட்டு என்ற வகையில் இவர் வழங்கிய நேர்காணலிலிருந்து சில பகுதிகளை அல்ஹஸனாத் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

# பெண்கள் வெளியில் சென்று கற்பது, தொழில் புரிவது குற்றமாகக் கருதப்பட்ட காலத்தில்தான் நான் கல்விப் பயணத்தைத் தொடர்ந்தேன்

*நேர்காணல்: இஸ்மத் அலி*

***அல்ஹஸனாத்:*** உங்கள் கல்வி வாழ்க்கையின் தொடக்கம், தொடர்ந்தேர்ச்சையான அதன் வளர்ச்சி பற்றிக் கூற முடியுமா?

**திருமதி ஹரூபா அஸ்ஹர்:** எனது ஆரம்பக் கல்வியை கள்-எலிய அலிகார் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்தேன். அங்கு க.பொ.த. உயர்தரம் வரை கற்றேன். ஒரு பட்டதாரியாக வேண்டும் என்பது சிறு வயது முதல் என்னிடமிருந்து வந்த ஓர் ஆசை. ஆனால், என்னால் பல்கலைக்கழக அனுமதியைப் பெற முடியவில்லை. பின்பு எனக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அப்போது எனக்கு ஜோசப் பிலிப்ஸ் எனும் ஆசிரியர் வெளிவாரியாக பட்டப் படிப்பைத் தொடர முடியும் எனும் செய்தியைச் சொன்னார். அதுவரை எங்களுக்கு அது பற்றித் தெரியாது. பிலிப்ஸ் ஆசிரியரின் வழிகாட்டலுடன் நான் ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டு பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்தேன். அச்சமயம் வெளிவாரிப் பரீட்சைகளுக்கான வகுப்புக்களோ அதற்கான புத்தகங்களோ குறிப்புக்களோ இல்லாத காலம். கொழும்பில் நடைபெற்ற வகுப்புக்களுக்குச் சென்றுதான் படிக்க வேண்டியிருந்தது.

1980ஆம் ஆண்டு நான் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்தேன். அதே வருடம் ஆசிரியர் பயிற்சிக்காக அளுத்கமை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றேன். 1989ம் ஆண்டு கல்வியியல் டிப்ளோமாவையும் 1999ஆம் ஆண்டு கல்வி முகாமைத்துவ டிப்ளோமாவையும் பூர்த்தி செய்த நான், 2009ஆம் ஆண்டு நடைபெற்ற கல்வி நிர்வாகச் சேவைப் பரீட்சையிலும் (SLEAS) சித்தியடைந்தேன்.

***அல்ஹஸனாத்:*** உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, பின்பு ஆசிரியர் நியமனம் பெற்ற நீங்கள் அத்தோடு உங்கள் கல்வி அடைவை நிறைவு செய்யாமல் அத்துறையில் உயர் நிலை வரை சென்றுள்ளீர்கள். அதுபோல, கல்வித் துறையில் தொழில் ரீதியாக நீங்கள் அடைந்த அடைவுகள் பற்றிச் சொல்லுங்கள்.

**திருமதி ஹரூபா அஸ்ஹர்:** எனக்கு 1977இல் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. குருணாகல் மாவட்டத்திலுள்ள மெல்சிரிபுர எனும் ஊரின் மாய்வெல எனும் கிராமத்தில்தான் எனது ஆசிரியப் பணி தொடங்கியது. பின்பு வெளிவாரிப் பட்டப் பரீட்சை, ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி என்பவற்றைப் பூர்த்தி செய்த நிலையில் எனக்கு 1983ஆம் வருடம் திஹாரி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைக்கப் பெற்றது. அங்கு சேவையாற்றிய ஒரு வருட காலத்தில், அப்போதிருந்த அதிபர் ஓய்வுபெற்றுச் சென்றதால் நான் தற்காலிக அதிபராக பொறுப்பேற்க வேண்டியேற்பட்டது.

1989ஆம் வருடம் நான் முதற்தர அதிபராக தரமுயர்த்தப்பட்டேன். பின்னர் முஸ்லிம் மகளிர் கல்லூரியையும் இன்னொரு பாடசாலையையும் இணைத்து திஹாரி அல்அஸ்ஹர் மத்திய கல்லூரி உருவாக்கப்பட்டபோது அதன் பிரதி அதிபராகவும் பின்னர் அதிபராகவும் 1997ஆம் ஆண்டு வரை நான் பணியாற்றினேன். உண்மையில் எனது முன்னேற்றத்துக்கு திஹாரியின் கல்விச் சூழல் பேருதவி செய்தது.

பின்பு எனது ஊரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1997இல் கள்-எலிய அலிகார் மகா வித்தியாலயத்தின் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். 1999ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறியைத் தொடர்வதற்காக அதிபர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட நான், அப்பாடநெறியைப் பூர்த்தி செய்தவுடன் மீண்டும் அலிகாரின் பிரதி அதிபர் பொறுப்பையேற்று 1999ஆம் ஆண்டுவரை கடமையாற்றினேன். பின்பு கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்து, கம்பஹா மற்றும் மினுவாங்கொடை தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கான கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இவ்வருட ஏப்ரல் மாதம் வரை செயற்பட்டு தற்போது ஓய்வுபெற்றுள்ளேன்.

***அல்ஹஸனாத்:*** ஆசிரியை, பிரதி அதிபர், அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் என்று சுமார் 30 வருடங்களுக்கு மேலாக கல்வித் துறையில் சேவையாற் றியுள்ளீர்கள். இந்தப் பயணத்தில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் எவை? அவற்றை எதிர்கொண்டு, உங்கள் பணியில் தொடர்ந்திருக்க உங்கள் குடும்பத்தினரின் ஒத்துழைப்பு எவ்வாறு அமைந்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி ஹரூபா அஸ்ஹர்:** உண்மையில் ஒரு பெண் கல்வி கற்று, உயர் நிலையை அடைவதற்கு குடும்பத்தினரின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. பெண்கள் வெளியில் சென்று கற்பது, தொழில் புரிவது பாரதூரமான குற்றமாகக் கருதப்பட்ட காலத்தில்தான் நான் எனது கல்விப் பயணத்தைத் தொடர வேண்டியிருந்தது. என்றாலும், எனது குடும்பத்தினரிடம் குறிப்பாக எனது தாய், தாயின் சகோதரர்களிடம் முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பது சமூக முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது என்ற கருத்து ஆழமாக இருந்தது. இந்நாட்டின் முதல் முஸ்லிம் பெண்கள் அரபுக் கல்லூரியை எமது ஊரில் நிறுவியதில் எனது தாயின் சகோதரர்களுக்கும் பெரும் பங்கிருந்தது. எனவே, நான் கற்பதற்கு அவர்கள் தூண்டுதலாக இருந்தனர். அத்தோடு எனது தாயினதும் கணவரினதும் ஒத்துழைப்பும் உதவிகளும்தான் எனது சாதனைகளுக்கு பக்கபலமாய் அமைந்தன, அல்ஹம்துலில்லாஹ்.

இங்குதான் கணவனின் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. தமது மனைவியரின் திறமைகளை மழுங்கடிக்காமல் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்கவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் அவர்கள் முயற்சிக்க வேண்டும். ஏனெனில், பல்வேறு துறைகளில் முஸ்லிம் பெண்கள் உயர் நிலையை அடைய வேண்டியிருக்கிறது.

இவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைத்ததன் காரணமாக சவால்கள் என்று எதையும் எதிர்கொண்டதாக நான் உணரவில்லை. நான் படிக்கின்ற காலத்தில் பெண் பிள்ளைகள் தூர இடங்களுக்குச் சென்று கற்பது, தொழில் புரிவது தவறாகக் கருதப்பட்டது. என்றாலும், எனது குடும்பத்தினரிடமிருந்த தெளிவு, தாயின் ஊக்குவிப்பு என்பவை எனது படிப்பைத் தொடர உதவியது. பின்பு தொழிலில் நான் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் கணவரின் புரிந்துணர்வு, தாயின் உதவிகள் என்பவை பெரும் சவால்களை சந்திக்காமல் எனது தொழிலைத் தொடர உதவியது எனலாம்.

**அல்ஹஸனாத்:** ஒரு பெண்ணின் கல்வி வளர்ச்சியில் கணவனின் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

**திருமதி ஹரூபா அஸ்ஹர்:** மிக முக்கியமான ஒரு கேள்வி. இன்று எமது சமூகத்தில் மிகத் திறமையான முஸ்லிம் மாணவிகள் இருக்கின்றனர். பாடசாலைகளின் பெறுபேறுகள், பல்கலைக்கழக நுழைவு என்பவற்றைப் பார்க்கின்றபோது ஆண்களை விட பெண்களே முதல் நிலையிலுள்ளனர். என்றாலும் ஒரு கட்டத்தில் பெண்களின் இத்திறமைகள் அனைத்தும் மழுங்கடிக்கப்பட்டு விடுகின்றன. அதுதான் அவர்கள் திருமணம் செய்யும் சந்தர்ப்பம். பெரும்பாலானவர்கள் திருமண வாழ்க்கையின் பின்பு குழந்தை வளர்ப்பு, வீட்டு வேலைகள் என்பவற்றோடு தம்மைச் சுருக்கிக் கொள்கின்றனர். உயர் படிப்பைத் தொடர்வதற்கான எத்தனையோ வாய்ப்புக்கள் இருந்தும் அவற்றை மறந்து விடுகின்றனர். கற்பித்தல் போன்ற தொழிலில் ஈடுபடுவோர் கூட அத்தோடு தம்மைச் சுருக்கிக் கொள்கின்றனர். அத்துறையில் மென்மேலும் உயர்வடைய அவர்கள் முயற்சிப்பதில்லை.

இங்குதான் கணவனின் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. தமது மனைவியரின் திறமைகளை மழுங்கடிக்காமல் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்கவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் அவர்கள் முயற்சிக்க வேண்டும். ஏனெனில், பல்வேறு துறைகளில் முஸ்லிம் பெண்கள் உயர் நிலையை அடைய வேண்டியிருக்கிறது. கல்வித் துறையில் மட்டுமன்றி, மருத்துவ மற்றும் சட்டத் துறைகளில் உயர் நிலையை அடைந்த பெண்களின்பால் எமது சமூகம் அதிக தேவையுடையதாக இருக்கின்றது.

இலங்கையில் முஸ்லிம் பெண் அதிபர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என்று கல்வித் துறையில் உயர்வடைந்தவர்கள் இருக்கின்றனர். ஒரு முஸ்லிம் பெண் நீதிபதி இருப்பதாகவும் நான் கேள்விப்பட்டேன். இத்தகைய உயர் நிலையை அடையும் திறமையுள்ள மாணவிகள் எமது சமூகத்தில் அதிகளவில் காணப்படுகின்றனர். ஆனால், அவர்களின் அத்தனை திறமைகளும் திருமணத்தோடு முற்றுப் பெற்று விடுகின்றன. இந்நிலையை மாற்றுவது கணவன்மாரின் பொறுப்பாகும்.

க.பொ.த. சாதாரண தரம் வரை கற்றுவிட்டு மிக இள வயதில் திருமணம் முடித்த, என்னிடம் கற்ற மாணவிகளில் சிலர், தாம் உயர் தரம் கற்கப் போவதாக அண்மையில் என்னிடம் கூறினார்கள். இந்த நிலை ஆரோக்கியமானது. திருமணம் ஒரு பெண்ணின் கல்வி வளர்ச்சிக்கு ஒருபோதும் முட்டுக்கட்டையாகி விடக் கூடாது.

**அல்ஹஸனாத்:** ஆண்களை விட பெண்கள் இன்று கல்வியில் அதிக முன்னேற்றமடைந்து வருவதாகக் கூறினீர்கள். இத்தகைய சமநிலையற்ற முன்னேற்றம் சமூகத்திற்கு பாதகமாகவே அமையுமல்லவா? இது பற்றிய உங்களின் கருத்து என்ன?

**திருமதி ஹரூபா அஸ்ஹர்:** இக்கருத்து மறுக்கப்பட முடியாதது. பெண்கள் கற்கின்ற அளவுக்கு ஆண் பிள்ளைகள் கற்காமை கவலைக்குரியது. ஆண்கள் கற்கவில்லை என்று நான் சொல்லவில்லை. இந்த நவீன உலகத்தின் கவர்ச்சிகளுக்கு அவர்கள் அடிமையாகி விடுகின்றனர். தொலைபேசி, வாகனம் என்று பகட்டாக வாழ்வதற்கு அவர்களுக்குப் பணம் தேவைப்படுகின்றது. எனவே, அவசரமாகத் தொழிலொன்றைப் பெற்றுக் கொள்ள அல்லது அதிக சம்பளத்தைப் பெற்றுத் தரக் கூடிய குறுகியகால பாடநெறிகளைத் தொடர்வதில்தான் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். இதனால்தான் இன்று க.பொ.த. சாதாரண தரத்தோடு இடைவிலகும் ஆண் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளது. உயர்தர வகுப்புக்களில் மாணவிகள்தான் அதிகளவில் கற்கின்றனர். அவர்கள்தான் அதிகளவில் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர்.

ஆண் மாணவர்கள் முறைசார் கல்வி முறைமையிலிருந்து அவசரமாக விலகிக் கொள்வதால் அவர்கள் திருமணம் செய்யும் வயது முற்படுத்தப்படுகின்றது. ஆனால், பெண்கள் உயர்தரம், பல்கலைக்கழகம் என்று கற்று வருகின்றபோது அவர்கள் திருமணம் செய்யும் வயது பிற்படுத்தப்படுகின்றது. இதனால் தகுதியான வரனைப் பெற்றுக் கொள்வதில் பெண்ணைப் பெற்றவர்கள் சிரமப்படுகின்றனர். மேலும் படித்த பெண்ணுக்கு படித்த மாப்பிள்ளை தேடுவதும் இன்று சிரமசாத்தியமானதாக மாறியுள்ளது. மட்டுமன்றி, இதனைப் பிரச்சினையாக உணரும் பெற்றோர் பெண் பிள்ளைகளின் படிப்பையும் இடையில் நிறுத்திக் கொள்ளச் செய்கின்றனர். எனவே, இது பற்றி எமது சமூகத் தலைமைகள் சிந்திப்பது அவசியமாகும்.

***அல்ஹஸனாத்:*** முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சிக்குத் தடையாக உணரப்படும் காரணிகளில் அவர்களது ஒழுக்கம், பண்பாடு என்பவை பாதிப்படையும் என்ற விடயமும் பிரதானமானதாகும். இதுபற்றி என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

***திருமதி ஹரூபா அஸ்ஹர்:*** முஸ்லிம் பெண்கள் கற்பதற்குச் செல்வதால் அவர்களது ஒழுக்கம் பாதிப்படைகின்றது என்ற மனோபாவம் முன்பை விட தற்காலத்தில் மிகக் குறைவென்றே சொல்ல வேண்டும். எனவேதான் முஸ்லிம் பெண்கள் அதிகளவில் கற்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். அவர்கள் கற்பதை பெரும்பாலான பெற்றோர் ஊக்கப்படுத்துகின்றனர். மேலும் அல்லாஹ்வின் அருளால், இன்று முஸ்லிம்களுக்கான பிரத்தியேகமான பாடசாலைகள் அனைத்துப் பிரதேசங்களிலும் காணப்படுகின்றன. இப்பாடசாலைகளில் பெண்கள் பர்தா அமைப்பைப் பேணி கற்க முடியுமான சூழல் இருக்கின்றது. மட்டுமன்றி, பல்கலைக்கழகங்களில் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரைத் தவிர பெரும்பாலான முஸ்லிம் மாணவியர் ஹிஜாபுடைய அமைப்பைப் பேணியே கற்கின்றனர்.

இவை அனைத்தையும் விட முன்பை விட தற்போது மார்க்க வழிகாட்டல்கள் அதிகளவில் கிடைக்கப் பெறுகின்ற நிலை காணப்படுகின்றது. எனவே, இஸ்லாம் கூறும் வரையறைகளை அறிந்து ஒழுக்கத்தோடும் கற்பைப் பேணியும் முஸ்லிம் பெண்களால் கற்க முடியுமாக இருக்கின்றது.

அடுத்தது, கற்பதற்குச் செல்கின்ற ஒரு முஸ்லிம் பெண், தான் செல்கின்ற நோக்கத்தை மனதில் வைத்து, அதை மறக்காமல் தனது படிப்பை முன்னெடுப்பாள் என்றால் எத்தகைய சூழலிலும் வழிதவறிச் செல்லாமல் அவளால் தனது படிப்பைத் தொடர முடியும் என்பதுவே எனது அனுபவமாகும்.

***அல்ஹஸனாத்:*** தொழிலுக்கு வெளியில் நின்று நீங்கள் ஏதாவது சமூகப் பணிகளில் ஈடுபடுகின்றீர்களா?

***திருமதி ஹரூபா அஸ்ஹர்:*** எமது ஊரில் சுமார் 40 வருடங்களாக இயங்கி வரும் கள்-எலிய ஐக்கிய முஸ்லிம் மாதர் சங்கத்தின் செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டு வருகின்றேன். எனது தாயார்தான் இதன் ஆயுட்காலத் தலைவியாக இருக்கின்றார். சுமார் 400 பேரை அங்கத்தவராகக் கொண்ட சங்கம் இது. வட்டியின்றி கடன் வழங்கும் பணியை நாம் இச்சங்கத்தின் ஊடாக செய்து வருகின்றோம். அங்கத்தவர்களின் கடன் விண்ணப்பங்களை பரிசீலித்து மாதாந்தம் சுமார் ஐந்து இலட்சம் ரூபாவை வழங்கி வருகின்றோம். ஆகக் கூடிய கடன் தொகையாக நாற்பதாயிரம் ரூபாயை வழங்குகின் றோம். எனது தாயார் சுகவீனமடைந்துள்ள நிலையில், நான் ஓய்வு பெற்று தற்போது இச்சங்கத்தின் பிரதான கணக்காளராகச் செயற்பட்டு வருகின்றேன்.

மேலும் எனது சக்திக்குட்பட்ட வகையிலும் எனது குடும்பத்தவர்களை சம்பந்தப்படுத்தியும் தனிப்பட்ட முறையில் தேவையுள்ளோருக்கு உதவிகள் செய்து வருகின்றேன். அத்தோடு, கம்பஹா மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு, மல்வானையைச் சேர்ந்த இஸ்மாயீல் ஹாஜியார் அவர்கள் அண்மையில் ஆரம்பித்த Muslim Education Forum எனும் நிறுவனத்தின் உயர்மட்ட செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றேன், அல்ஹம்துலில்லாஹ்.

கதீஜதுல் குப்ரா இஸ்லாமிய
பெண்கள் உயர் கல்லூரி

பதவி வெற்றிடங்கள்

உடனடியாக கீழ்வரும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விரிவுரையாளர்கள்
1. அரபு, ஷரீஆ துறைகள்
2. இஸ்லாம் உயர் தரம் பகுதி நேரம்
3. அரச அறிவியல் (Political Science)
சிங்கள மூலம் பகுதி நேரம் (பெண்)
4. கணனி பயிற்றுனர் பகுதி நேரம் (பெண்)
5. தையல் பயிற்றுனர் பகுதி நேரம் (பெண்)

விடுதிப் பொறுப்பாளர் (பெண்)

குறிப்பு:
இஸ்லாமிய தஃவா, தர்பியா ஆர்வம் உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

KHADHEEJATUL KUBRA LADIES COLLEGE (KKLC)
7th mile Post, Watadeniya, Velamboda - P.O.C: 20640
Email: kklc2009@gmail.com
தொடர்புகளுக்கு: 0812055050



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. உயர் தரத்தில் எதைச் செய்யலாம்?



-நயீமா சித்தீக்-

"ஓ... ரமீஸா... எவ்வளவு நாளைக்குப் பிறகு... எப்படி இருக்கீங்க... என்ன செய்றீங்க... ஏ.எல். ரிஸல்ட் எப்படி?"

"நான் ஏ.எல். செய்யல்லயே... இந்த வருஷம்தானே செய்யிறன்... உங்கட எப்படி?"

"அல்ஹம்துலில்லாஹ்... எதிர்பார்த்த மாதிரியே ரெண்டு ஏயும் ஒரு பீயும்... இஸட் ஸ்கோர்... போதும்... இன்ஷா அல்லாஹ் நிச்சயம் கெம்பஸ் கெடைக்கும்."

"ம்... எனக்குத்தான் ஒரு வருஷம் வீணாயிடிச்சு... பயோ ஸயன்ஸ் செய்யப்போய் ஒரு வருஷம் முடியிற வரைக்குமே எனக்கு ஒன்றுமே விளங்கல்ல... பிறகுதான் கொமர்ஸுக்குப் போய் முதல்ல இருந்து படிக்கத் தொடங்கினேன்... அதுதான் ஒரு வருஷம் வேஸ்ட்."

◆ ◆ ◆

"என்னப்பா யோசிச்சுக்கிட்டிருக்கிற...?"

"ஏ.எல்.லுக்கு என்னத்த செய்யிறதெண்டுதான்... எனக்கு ஒண்ணுமே வெளங்கல்ல... ஒவ்வொருத்தரும் ஒன்றொன்றா நல்லம் என்று சொல்றாங்க... யார் சொல்றதக் கேக்க... அதான் யோசிக்கிறேன்..."

"ஓ... எங்கட ஆட்களே இப்படித்தான் படிக்கப் போற புள்ளைக்கு எது முடியும், எது விருப்பம் என்று யாருமே கேக்க மாட்டாங்க... இதனாலதான் எங்கட பல பேருட படிப்பு மோசமாயிடுது..."

◆ ◆ ◆

ஆமாம்... ஜீ.ஸீ.ஈ. சாதாரண தர பெறுபெறுகள் வந்துவிட்டன. பல வீடுகளில் பேசுபொருளாக இருப்பது "ஏ.எல்.க்கு எந்தத் துறையைத் தேர்ந்தெடுப்பது?"

தந்தையின் விருப்பம்... தாயின் ஆசை...

தமையனின் குறிக்கோள்...

சகோதரியின் எதிர்பார்ப்பு... மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா, உம்மம்மா, வாப்பம்மா, அப்பா ஏன் தம்பி தங்கைகளும்தான் ஆளுக்கொரு ஆலோசனையை படிக்கப் போகும் பிள்ளையின் முன் மாறி மாறி வைக்கின் றனர்.

எதைப் படித்தால் சீக்கிரமாக வேலை கிடைக்கும்? எதைப்படித்தால் கூடுதல் சம்பளம் எடுக்கலாம்? என்ற வினாக்கள் வேறு.

இவை மாத்திரமா?

எந்த மாவட்டத்தில் போய்ப் படித்தால் குறைவான இஸட் ஸ்கோரில் பல்கலைக்கழகம் நுழைய குறுக்குவழி கிடைக்கும் என்ற ஆய்வுகள் ஒருபுறம்!

இத்தனைக்கும் மத்தியில் படிக்கப்போகும் பிள்ளையின் கருத்தை -ஆசையை- யாராவது கேட்கின் றார்களா?

இந்தப் பிள்ளையின் உண்மையான திறமைகளை இனங்கண்டு அதற்குரிய வகையில் உயர் தரக் கல்வியை அமைத்துக் கொடுக்க முயற்சிக்கின்றார்களா?

விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானோர் மேற்படி விடயங்களை யோசிப்பதே இல்லை.

தற்பொழுது 'ஏ.எல்.' செய்து கொண்டிருப்பவர்களில் ஒரு நூறு மாணவர்களை எடுத்து அவர்களிடம்,

"நீங்கள் இத்துறையைத் தேர்ந்தெடுத்தது ஏன்" என்ற கேள்வியைக் கேட்டுப் பார்த்தால்,

"எனக்கு இதில் மிகவும் விருப்பம், எனது விருப்பத் தினாலேயே. இதனைத் தெரிந்தெடுத்தேன்" என்று சொல்லக் கூடியவர்கள் ஒருவர் அல்லது இருவர்தான் இருப்பர். இது அனுபவரீதியான உண்மை.

இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்று வேறு வேறு பாடசாலைகளுக்கு ஏ.எல்.க்காகச் சென்று அங்கு முடியாது என்று மீண்டும் தமது முந்தைய பாடசாலைக்கே திரும்பியவர்களின் பட்டியலும் நீளமானதே.

சில மாதங்களில் கற்கும் துறைகளை மாற்றியவர்களின் பட்டியலும் கணிசமான அளவு நீளமே.

ஜீ.ஸீ.ஈ. உயர் தரம் என்பது நமது நாட்டைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமான கற்கையாகும். இதில் சிறப்பாகத் தேர்ச்சியடைந்தால் வளமான வருங் காலத்திற்கான பல வாசல்கள் திறக்கும்.

உயர்தரத் துறையைத் தெரிவு செய்வதில் கற்கப் போகும் மாணவர்களின் ஆற்றல், ஆசை முதலியவற்றைத் தயவு செய்து கவனத்திற் கொள்ளுங்கள். யார் யாருக்கா கவோ யார் யாரது ஆசைகளுக்காகவோ எவரும் படித்து முன்னேற முடியாது; படித்து சிறப்புத் தேர்ச்சி பெற்ற வரலாறும் கிடையாது.

முன்னர் போலன்றி எத்துறையில் கற்றாலும் அதில் திறமை காட்டினால் கடைசிவரை கற்கப் பல நல்ல துறைகள் இன்று பரவலாக உள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படும் கைந்நூலை பெற்றோரும் கற்கப்போகும் மாணவர் களும் பார்ப்பது மிகவுகம் பயன்தரும்.

சிந்திப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயச் சீரமைப்பில்... (20ஆம் பக்கத் தொடர்)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மனைவியார்கள் அனைவரும் தாங்கள் வாழும் சமூகத்தைச் சீரமைப்பதில் பெரும் பங்காற்றினார்கள்.

இப்போது உங்களுக்கு ஒரு சந்தேகம் வரும். இது அந்நக் காலம் என்று. இதோ இந்தக் கால நிகழ்ச்சி. அல்ஜஸீரா தகவல் தொடர்பில் பதிவு செய்யப்பட்டது.

பிலிப்பைன்ஸ் தீவின் பல்கலைக்கழகம், அந்தக் கல்லூரியின் பேராசிரியர் தன் முன்னால் அமர்ந்துள்ள மேலைநாட்டு மாணவியைப் பார்த்து, "இவ்வளவு உஷ்ணமும் இவ்வளவு வெப்பமும் கொண்ட காலத்தில் இவ்வளவு இறுக்கமான ஆடையை ஏன் அணிந்துள்ளாய்?" என்று கேட்கிறார்.

அதற்கு அந்த மாணவி, "இதைவிட வெப்பமும் உஷ்ணமும் கொண்ட நரகத்தை விட இது பெரிதல்ல" என்று பதில் கூறினாராம்.

இன்னுமொரு தகவல் அல்ஜஸீரா உடையது.

ஒரு முஸ்லிம் பெண் பட்டதாரி வேலைக்காக நேர்முகத் தேர்விற்கு போனதில் தெரிவாகி விட்டார். உடனே அவளுடைய மேலாளர் வாழ்த்துக்கள் என்று கை கொடுக்கிறார். உடனே அந்த முஸ்லிம் பெண்மணி, "நான் பின்பற்றும் இஸ்லாத்தில் அந்நிய ஆணுக்கு கை கொடுக்க உரிமை இல்லை" என்றாள். உடனே அவர் "வெளியில் போ! வேலை இல்லை" என்றார். ஆனால், அந்த யுவதியோ நீதிமன்றப் படியேறி, வாதாடி, நேர்முகத் தேர்வில் சித்தியடைவதுதான் முக்கியமே தவிர, கை குலுக்குவது முக்கியமல்ல என்று நிரூபித்தாள். அந்த யுவதி இன்றும் அவருக்குக் கீழ் பணிபுரிகிறாள்.

தீன் என்றால் என்ன என்ற கேள்விக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "உபதேசம்" என்றார்கள். மாணவிகளே! நம் மார்க்கம் உபதேசத்தினால் பரவியது.

**"ஒரு விஷயம் தெரிந்தாலும் அதை மற்றவர்களுக்கு எடுத்துரையுங்கள்."**

**"நீர் அறிவுரை புரிந்த வண்ணம் இருப்பீராக! திண்ணமாக நீர் அறிவுரை புரிபவர் மட்டுமே!"** (அல்குர்ஆன்)

**"யாருக்கேனும் அறிவுரை கூற வேண்டுமானால் அந்த அறிவுரை பலனளிக்குமானால் திருக்குர்ஆனைக் கொண்டு உபதேசம் செய்வீராக!"**

உபதேசத்தின் மூலமே தீன் பரவியது; வாளால் அல்ல!

இன்றைய மாணவிகளுக்கு சமுதாய அக்கறை இல்லாததற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

1. பெற்றோர் 2. சுற்றுப்புறச் சூழல் 3. மனோபாவம்

மாணவிகளே! சிந்தியுங்கள். சமுதாயத்திற்காக இதுவரை என்ன செய்தீர்கள்? உங்கள் கண் முன்னால் பரவிக் கிடக்கும் தீமைகளை எடுத்துச் சொல்லி விட்டேன். அக்டோபஸ் கால்களுடன் உங்கள் கழுத்தையும் நெரிக்குமுன் உங்கள் கைகளால் தீமைகளைக் களைந்து புத்துணர்ச்சியான சமுதாயத்தை எப்படிப் படைப்பது என்று சிந்தியுங்கள். அனைவரின் கைகளும் இணைந்தால் பூமியைப் புரட்டி விடலாம். அப்படி இல்லாவிட்டால் நினைவில் வையுங்கள், மறுமையில் ஐந்து கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் இறைவனிடமிருந்து தப்ப முடியாது. அதில் ஒன்று "உன் இளமையை எவ்வாறு கழித்தாய்?"

என்ன பதில் வைத்துள்ளீர்கள்?

நன்றி: சமரசம்

# நேர்வழி பெற்ற நேபாள நடிகை

நேபாளத்தின் புகழ் பெற்ற நடிகையும் பாடகருமான பூஜா லாமா ஏழு மாதங்களுக்கு முன்பு காத்மாண்டுவில் வைத்து இஸ்லாத்தைத் தழுவினார். இவருடைய வயது 28. இவர் பௌத்த குடும்பத்தில் பிறந்தவர்.

இஸ்லாத்தைத் தழுவிய பிறகு பூஜா லாமா என்ற தனது பெயரை 'ஆமினா ஃபாரூகி' என்று மாற்றிக் கொண்டதாக பேட்டி ஒன்றில் கூறினார். மேலும் "இஸ்லாம் மட்டுமே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு அளிக்கிறது. இஸ்லாத்தின் அழகு எனக்கு நேர்வழி காண்பித்தது. இல்லையெனில் நான் இருளிலேயே இருந்திருப்பேன். இஸ்லாம் அமைதியான மார்க்கம் என்பதனை நான் உலகுக்கு கூற விரும்புகிறேன்" என்றார்.

"நான் காரிருளில் வாழ்ந்து வந்தேன்; தற்கொலை செய்துகொள்ளவும் முயன்றேன். இஸ்லாம் என் வாழ்வில் ஒளி ஏற்றியது. நான் இப்பொழுது ஆபாசம், மது, புகை, அசுத்தமான உணவுகள் அனைத்தையும் விட்டு விட்டேன். இஸ்லாத்தைப் பற்றி உலகம் கூறும் அனைத்தும் அவதூறு என்பதை உணர்ந்து கொண்டேன்" என்கிறார் அவர்.

பூஜா லாமா என்ற தனது பழைய பெயரைக் கொண்டு தன் பழைய வாழ்க்கையை நினைவுபடுத்த வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இஸ்லாத்தை ஏற்ற பின் தனது நடிப்புத் தொழிலையும் குடி, புகைத்தல் போன்ற தீய பழக்கங்களையும் விட்டு விட்டார். அந்தப் பெண்ணுக்கு நேர் வழிகாட்டிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும், அல்ஹம்துலில்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒவ்வொரு பெண்ணும் எமது சமூகமும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல்!

**நூல்:** பெண்கள் தொழில் புரிதல் சில வழிகாட்டல்கள்
**ஆசிரியர்:** அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்
**விலை:** 120.00
**வெளியீடு:** றிபா பதிப்பகம் (0773148021)

-ஷிஹா-

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது காலத்திலும் அவர்களுக்குப் பின் இஸ்லாமிய கிலாபத் தொடர்ந்த காலங்களிலும் பெண்கள் சமூகத்தின் கௌரவப் பிரஜைகளாக வாழ்ந்தார்கள். அவர்கள் குடும்பத்தின் பொருளாதாரச் சுமைகளைச் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கவில்லை. அவர்களைப் பராமரிக்கின்ற பொறுப்பை அவர்களது குடும்பத்திலுள்ள ஆண்கள் இபாதத்தாகக் கருதிச் செய்தார்கள். எனவே, இப்பெண்களால் தமது குடும்பப் பணிகளை செவ்வனே நிறைவேற்ற முடிந்தது. இஸ்லாத்தின் தூதை உலகெங்கும் சுமந்து செல்லக்கூடிய ஆரோக்கியமான ஈமானியப் பரம்பரையை உருவாக்க முடிந்தது. மருத்துவம், வணிகம், ஆசிரியப் பணி போன்ற பல துறைகளில் பிரகாசித்த பெண்களையும் அச்சமூகம் உள்ளடக்கியிருந்தது. இஸ்லாத்தைச் சரியாகப் புரிந்து கொண்ட அந்த சமூகத்தின் அத்திவாரம் பொருளாதாரமாக இருக்கவில்லை. அவர்களது மிகக் குறைந்த, எளிய தேவைகளை நிறைவேற்ற ஆணின் வருமானம் போதுமானதாக இருந்தது.

காலம் மாறியது. முஸ்லிம் சமூகத்தில் பிற சமூகக் கலாசாரத் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. சமூகத்தில் எல்லாவற்றினதும் அடிப்படையாகப் பொருளாதாரம் மாறியது. சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மட்டுமன்றி, வேறு பல நோக்கங்களுக்காகவும் பெண் தொழில் துறையை நோக்கித் தள்ளப்பட்டாள். சடத்துவம் சார்ந்த வாழ்வு முறையால், இன்று பெண் விரும்பியோ விரும்பாமலோ தொழில் பார்க்கப் போகிறாள்.

இன்றைய இந்தத் தொழில் பார்க்கும் பெண் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு என்ன? இஸ்லாம் இதை ஆதரிக்கிறதா; தடுக்கிறதா? ஆணைப் போல எல்லாத் தொழிற்துறையிலும் பெண்ணும் ஈடுபட வேண்டும் என்ற பெண்ணிலைவாதிகளின் கூப்பாடு நியாயமானதா? தொழில் பார்க்கும் பெண் எவற்றைக் கடைபிடிக்க வேண்டும்? எவற்றைத் தவிர்க்க வேண்டும்? எவற்றில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?

இத்தகைய வினாக்களுக்கெல்லாம் விடை பகர்கிறது 'பெண்கள் தொழில் புரிதல்-சில வழிகாட்டல்கள்' எனும் நூல். தமிழ் பேசும் உலகின் மிகச் சிறந்த இஸ்லாமிய அறிஞர்களுள் ஒருவரான அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) அவர்கள், தனது இந்த நூலின் மூலம் முஸ்லிம் சமூகத்தின் பல சிக்கல்களுக்கான தெளிவை வழங்குகிறார். பெண்கள் தொழில் புரிவது பற்றிய இஸ்லாத்தின் வழிகாட்டல்கள் அனைத்தும் இரத்தினச் சுருக்கமாக இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மிக எளிமையாகவும் எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலும் விடயங்கள் அழகாக முன்வைக்கப் படுகின்றன.

தொழில் புரியும் ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் வாசித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய நூலாக இது திகழ்கிறது. தொழில் பார்க்கும் பெண்கள் மட்டுமன்றி, இஸ்லாத்தில் தமது அந்தஸ்தைப் புரிந்து கொள்ளாத பெண் சமூகமும் இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கியுள்ள உரிமைகளைக் காலடியில் போட்டு நசுக்கும் முழுச் சமூகமுமே வாசிக்க வேண்டிய நூலென்றால் அது மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதா பவனம் கவிதா பவனம் கவிதா பவனம் கவிதா பவனம்

# கண்ணாடி

மனிதச் சந்தையில்
வகை வகையாய்
விலை போகின்றன
கண்ணாடிகள்

இப்போதெல்லாம்
சந்துபொந்தெங்கும்
சந்தேகம்!
கறுப்புக் கண்ணாடிகள்
அதிகம்!

கறுப்புக் கண்ணாடி
அணிந்து
கண்களே
கறுப்பாய்...


சின்னச் சின்ன
விடயம்
சிக்காகி
சீர்குலைகிறது
பூதக் கண்ணாடி
அணிந்தவர்களால்!

துருவித் துருவி
குறை காண்கிறது
நுணுக்குக் கண்ணாடி!

கலர் கலராய் கண்ணாடிகள்
சூரியக் குளியலுக்காய்
பீச் ஓரங்களில்
காய்ந்து கிடக்கின்றன!!

மனிதச் சந்தையிலோ
கண்ணாடிகள்
குவிந்து கிடக்கின்றன!

நபிகளார் சொன்ன
"முஃமினுக்கு முஃமின்
முகம் பார்க்கும் கண்ணாடி"
இந்தக் கண்ணாடி மட்டும்
மனிதச் சந்தையில்
உடைந்து நொறுங்கிக்கிடக்
கிறது கவனிப்பாரற்று!



- ஜெம்ஸித் அஸீஸ் -

# ஸைத்தூன் சிட்டு

உம்மா!
நான் பள்ளிக்கூடம்
போய்வாறேன்!

நாம் அடுத்துப் போகும்
நம் வீட்டு முகவரியை
எழுதிக் கொடு!

நான் மீண்டும் வரும் போது
இவ் வீட்டின் முகவரி
புல்டோசர்களால் இடிக்கப்பட்டு
இல்லாமல் போய்விடலாம்!

ஆனால்...
எனக்கு நம்பிக்கை
இருக்கிறது!
என் இரத்தக் கறைபடிந்த பூமியை
நான் சுமக்கும் காலம்
வெகு தூரமல்ல!

என் தம்பி கவனம் உம்மா!
கவனமாய் பார்த்துக்கொள்!

நான் வீடு திரும்பா விட்டால்
என்னைப் பற்றி
அவனிடம் சொல்!
நாம் நிச்சயமாய் அக்ஸாவில்
தொழுவோமென்று!

எனது தந்தை
சென்ற வழியில்
நான் பள்ளி செல்கிறேன் உம்மா!

கற்கள் கொஞ்சம்
என் பையினுள்
போட்டு விடு!
என் வாப்பாவின்
நண்பர்கள்
கல் தேடி அலைவார்கள்!

என் ஸைத்தூன்
மரங்களைக் கவனமாய்
பார்த்துக் கொள்!
நாளை அது நமக்காய்
சாட்சி சொல்லும்!

யூதனின்
முள்ளுக் கம்பிகளுக்குள்ளால்
தவழாமல் நான்
பள்ளி செல்லும் காலம்
வெகுதூரமில்லை!

கவனம் உம்மா!
யூதனின் ரணவெறியில்
சிதையுண்டு போகமல்
ஈமானோடு போராடு!
உன் ஈமானியக் கற்களின்
முன்னால்
அவன் ஆயுதங்கள்
தூசியம்மா!

இன்னும் எனக்கு
காத்திருக்க நேரமில்லை
கண்ணைத் துடைத்து
எழுந்திடு!

அதோ!
துர்ராவின் வீதியில்
வெடில் சத்தம்
கேட்கிறது!

என் தந்தையின்
நண்பர்கள்
முன்னோக்கிச் செல்லும்
தக்பீர் ஒலி
என் காதில் ஒலிக்கிறது!

உம்மா!
அவசரமாய்
உன் கல்லையும்
என் பையினுள் போட்டுவிடு!

தண்ணீர் வேண்டாமம்மா!
தாகத்தோடு ஓடிப்போகிறேன்
நமது மண்ணின்
விடுதலைக்காய்!

-இறக்காமத்தான் ரஜீப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதா பவனம் கவிதா பவனம் கவிதா பவனம் கவிதா பவனம்

### எப்படி மறக்கும் எனக்கு

2012.05.01 டெங்கு காவுகொண்ட
ஆருயிர் தோழன் நௌபலின்
நினைவாக...

*-ஏ.கே.எம். முபஷ்ஷிர்-*

அதிகாலை வேளை
சிணுங்கிய என் தொலைபேசி
கண்ணீரை சுமந்து வரும் என
கனவிலும் நினைக்கவில்லை


இருபது வருடத்துக்குள் பூவுலகு
உனக்கு பிரியாவிடை கொடுக்க
நீ மரணத்தாயின் மடியில்
நிம்மதியாய் உறங்கிக் கிடக்கிறாய்

புன்முறுவல் பூக்கும்
உன் முகம்
இதமான பேச்சு
இனிய நட்பு
எப்படி மறக்கும் எனக்கு!

ஓ.எல். வரை
ஒன்றாய்க் கழித்த
நாட்கள்
மனத் தோப்பில்
ஊஞ்சலாடுகிறது.

உன் உடல் சுமந்த என் தோள்கள்
கனத்த உள்ளத்துடன்
மண்ணறை நோக்கி நடக்க
உன் சுவன
வாழ்வுக்காய்
அழுது பிரார்த்தித்தேன்.

நாளை ஜன்னதுல் பிர்தௌஸில்
நானும் நீயும்
நட்புப் பாராட்ட
யா ரஹ்மான்
அருள் புரிவாய்!



---

### நானும் நீயும்...

நாளை உலகம் முழுக்க
ஒரு வாசம் வீசும் - அதில்
உனதும் எனதும்
வியர்வைத் துளிதான் இருக்கும்!

நாளை ஒரு விருட்சம் தோன்றும் - அதில்
இஸ்லாத்தின் விழுதுகள்
வீரமாய் நிற்கும்- அதன்
வேர்களில் நானும் நீயும்
உறுதியாய் இருப்போம்!

நாளை ஒரு செடி முளைக்கும் - அதில்
ஈமானிய மொட்டுக்கள் மலரும்
அதன் விதையாகவும் அழகாகவும்
நானும் நீயும் இருப்போம்!

நாளை கிலாபத்தின்
போர் நடக்கும் - அதில்
ஆட்சியும் அமைதியும்
முஸ்லிம்களுக்கே கிடைக்கும் - அதன
குருதியாகவும் கண்ணீராகவும்
நானும் நீயுமே இருப்போம்!

நாளை இந்த மண்ணில்
எம் தீனின் கொடி பறக்கும்
அதன் ஊன்று கோலாகவும் துணியாகவும்
நானும் நீயும் இருப்போம்!
நாளை மஹ்ஷரில்
வெப்பம் மிகைக்கும் - அதில்
ஒரே ஒரு நிழல் மட்டுமே கிடைக்கும்
அதன் சொந்தக்காரர்களாய்
நானும் நீயும் இருப்போம்

ஸபானா சுஹைறுப்
இஸ்லாஹிய்யா வளாகம்

---

### நேயர் மனங்களில் நீங்கா நேசம் கொண்டவர்



உயன்வத்தை ஈன்றெடுத்த
உயரிய முத்து
நூராணியா ஹஸன்
முஸ்லிம் ஊடகத் துறையில்
நூர் எனும் ஒளிபாய்ச்சிய
பௌஸுல் ஹஸன்!

பசுமை மரத்தை
பட்சிகள் அணுகுவது போல
அனுதினமும்
அன்பால் அணுகினார்
மக்களை...

பூத்திடும் புன்னகையூடே
ஈர்த்திடும் வார்த்தை கொண்டு
பார்த்திடும் பாசமான உறவால்
புதிய சிந்தனைகளோடு
புத்தாக்க நிகழ்வுகளோடு
வலம் வந்தார்
ஒலிபரப்பு வானில்!

வாய்மையில் திளைத்து
தூய்மையான துணிவுடன்
நேர்மையாய் பணி செய்து
நேயர் மனங்களில் நீங்கா
நேசம் கொண்டவர்
நூராணியா ஹஸன்!

உயன்வத்தையில் பூத்த மொட்டு
ஊடகத்துறையில்
விரிந்திட்ட மலர்
உதிர்ந்து விட்டது
உதிரா நினைவுகளை
உள்ளமதில் திணித்து விட்டு...

மங்காத புகழுடன்
நீங்காத நினைவுகளுடன்
எம்முள்
நூராணியா ஹஸன்!

வல்லோனே
உந்தன் உயர்
சுவனத்தை
சொந்தமாக்கிவிடு
நூராணியாவுக்கு!

*19.04.2012 அன்று விபத்தில்
மரணமடைந்த ஊடகவியலாளர்
மர்ஹூம் நூராணியா ஹஸன்
(பௌஸுல் ஹஸன்) அவர்களது
நினைவாக...*

ஹுமதா ஏ. கப்பார், உயன்வத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WinSYS NETWORKS® 9 year Celebration

*The network security training provider of the nation*

***Build your Foundation for Microsoft & CISCO Proven Structured Learning Approach @ WinSYS***

## Diploma In Hardware Engineering With Networking.

## Special Diploma In Network Administration

### Cisco Certifications

**CCNA** Rs.12,000/=
640-802 (ICND1) v1.1 (ICND2) v1.1

**CCNP** (Per Module) Rs.15,000/=
642-902 (ROUTE) / 642-813 (SWITCH) / 642-832 (TSHOOT)

**CCIP** Rs.150,000/=
642-691 (BGP)(MPLS) / 642-902 (ROUTE) / 642-642 (QoS)

### Microsoft Certifications

**MCTS** (Per Module) Rs.12,000/=
Microsoft Certified Technology Specialist
70-680 / 70-642 / 70-643 / 70-640

*Microsoft Certified Information Technology Professional*

**MCITP** Rs.12,000/=
70-646 PRO: Server Administrator

**MCITP** Rs.12,000/=
70-647 PRO: Enterprise Administrator

### WEEKDAYS SPECIAL OFFER

ALL 3 TRAININGS ONLY 25000/=

- Special Diploma In Advanced Networking (ANW)
- Cisco Certified Network Associate (CCNA)
- Microsoft Certified Technology Specialist (MCTS)
  70-680 MCTS: Windows 7 Configuring

| CCNA | | MCTS | |
|---|---|---|---|
| Course fee weekdays | 12,500.00/= | Course fee weekdays | 12,500.00/= |
| Special offer | 12,000.00/= | Special offer | 12,000.00/= |
| Existing WinSYS Student | 11,000.00/= | Existing WinSYS Student | 11,000.00/= |
| Course fee weekend | 15,500.00/= | MICROSOFT SQL SERVER 2008 | |
| Special offer | 14,500.00/= | MICROSOFT EXCHANGE SERVER 2010 | |
| Existing WinSYS Student | 14,000.00/= | OFFER VALID ONLY REGISTRATION BEFORE 30th June | |

Sun ORACLE

**MySQL Certification**

MySQL

## PHP & MySQL

php

zend

**ZEND certified Engineer PHP**

**Microsoft Exchange Server and SQL Server**

70-662 :
Microsoft Exchange Server 2010
70-432 / 70-433 :
Microsoft Sql Server 2008

Microsoft SQL Server 2008

## Linux RH033 & RH133

leads to RHCE

## Admin Security Training

CentOS redhat Linux

Virtualization Technology
**Vmware vSphere 5.0** vmware

**Training schedule: 20th June 2012 to 24th June 2012.**
**NOTE : Confirm your registrations on or Before 13th of June 2012. in order to reserve the course materials from Vmware**

*5 DAYS BOOTCAMP* CITRIX

**Start your carrier with a Internationally Recognized Certificates**

**Hardware** CompTIA A+ **Networking** CompTIA N+

[illegible] Cisco Routers மற்றும் Switch [illegible] Network [illegible] 1000/1600 [illegible] WinSYS Network [illegible] Cisco [illegible] Puttalam (Twinwin ICT Professionals) / Kandy (E-win Networks) / Batticaloa (WinSYS NETWORKS) / Galle & Jaffna / Negambo [illegible]

[illegible] WinSYS [illegible] Network மற்றும் Security [illegible]

WinSYS NETWORKS
The network security training provider of the nation

**Hotline**

011-2589567 0777 259927

www.winsysnetworks.net / www.winsys.lk
info@winsysnetworks.net

*Tertiary and Vocational Education Commission - Sri Lanka :- Reg.No:- P01-/0402*

**COLOMBO** No: 14, Schofield Place, Kollupitiya, Colombo-03, Sri Lanka.

**Kandy** E-win NETWORKS *On your way to the future* — No: 524, Peradeniya Road, Kandy. Tel:- 081-2203785-6 Hotline :- 0777-04 77 08/0777-807 630

**Puttalam.** Twin-WIN ICT Professionals — No: 33, Masjid Road, Puttalam. Tel:- 032-2267477 Hotline :- 0777-112 771

**Batticaloa** WinSYS NETWORKS — No: 10, New kalmunai Road, Batticaloa. Tel:- 065-2228789 Hotline :- 0777-832 871





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை பணியைத் தொடர
# நல்லதொரு வாரிசு தேவை



"குழந்தைகள் விடயத்தில் எமது கவலை எதுவாக இருக்க வேண்டும் என்பது இப்போது புரிகிறதா? நாம் ஆற்றுகின்ற மகத்தான இந்தப் பணியை நமது சந்ததிகளும் தத்தமது தோள்களில் சுமந்து அடுத்து வருகின்ற ஒவ்வொரு வழித்தோன்றலுக்கும் அதனைக் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற வேண்டும் என்ற தூரநோக்கோடு நாம் சிந்திக்க வேண்டும்."

***"என் இறைவனே! என் எலும்புகள் நலிவடைந் விட்டன. மேலும் நரையினால் என் தலை மினுமினுத்து விட்டது. மேலும் என் இறைவா! நான் உன்னிடம் பிரார்த்தனை புரிந்து ஒருபோதும் ஏமாற்றம் அடைந்த தில்லை. எனக்குப் பின் என் உறவினர்கள் (மேற்கொள்ளக் கூடிய) தீய வழி பற்றி நான் அஞ்சுகிறேன். மேலும் என்னுடைய மனைவியோ மலடியாக இருக்கிறாள். எனவே, உனது தனிப்பட்ட அருளால் எனக்கொரு வாரிசை வழங்குவாயாக! அவர் எனக்கும் யஃகூபுடைய குடும்பத்தினருக்கும் வாரிசாகத் திகழட்டும். மேலும் என் இறைவனே! அவரை விரும்பத்தக்க மனிதராய் ஆக்குவாயாக." (19:4-6)***

இது பனூ இஸ்ரவேலர்களுக்கு இறைதூதராக அனுப்பப்பட்ட ஹஸ்ரத் ஸகரிய்யா (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் தமது இறைவனிடத்தில் தாழ்ந்த குரலில் இறைஞ்சிய துஆ. இந்த துஆ அல்குர்ஆனில் இன்னும் இரு வேறு ஸூறாக்களில் வித்தியாசமான விதங்களில் மீட்டப்பட்டிருக்கிறது. (பார்க்க 3: 28, 21:89)

குழந்தைகள் ஏன் வேண்டும்? குழந்தைகள் இல்லாமல் வாழ முடியாதா? குழந்தைப் பாக்கியம் அற்றவர்களின் உள்ளங்கள் ஏன் கவலையால் நிரம்பி வழிகின்றன? அனைத்தும் ஆண் குழந்தைகளாக இருப்பவர்களுக்கு ஒரு பெண் குழந்தை இல்லையே என்ற ஏக்கம்; பெற்றெடுத்ததெல்லாம் பெண் குழந்தைகளாக இருப்பவர்களுக்கு ஓர் ஆண் சிங்கம் வேண்டும் என்ற ஆதங்கம். குழந்தைகளைப் பெற் றெடுத்ததும் அவர்களின் உணவு, போசாக்கு, ஆரோக் கியம், நோய் எதிர்ப்புச் சக்தி, கல்வி முதலானவை பற்றித்தான் மனிதர்கள் அலட்டிக் கொள்கிறார்கள். பெற்றோர் உலகைவிட்டுப் பிரியும்போது சந்ததிகளுக்கு வாரிசு சொத்துக்களாக எதனை விட்டுச் செல்கிறோம் என்ற கவலை அவர்களை ஆட்கொள்கிறது.

மனித வாழ்வின் ஒவ்வோர் அம்சத்தையும் இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் தெளிவாக விளங் கிக் கொள்ளாதவர்களுக்கு இவ்வுலக வாழ்வு என்பது ஒரு புரியாத புதிராகவே தோன்றும். தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் புதல்வர் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) பற்றி அல்குர்ஆன் ***"ஸுலைமான் தாவூதின் வாரிசாவார்" (27: 16)*** என்று குறிப்பிடுகிறது. இவ்வசனம் அவர் சொத்துக்களுக்கு வாரிசானார் என்பதைக் குறிக்கவில்லை. மாறாக, தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நபித்துவத்துக்கும் கிலாஃபத்துக்கும் அறிவுக்கும் அவரது மகன் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) வாரிசானார் என் பதே பொருளாகும். இக்கருத்து பின்வரும் நபிமொழிகள் மூலம் இன்னும் தெளி வாகிறது.

***"நபிமார்கள் தீனாரையோ திர்ஹத் தையோ வாரிசாக விட்டுச் செல்ல வில்லை. என்றாலும் அறிவைத்தான் அவர்கள் வாரிசாக விட்டுச் சென்றார்கள்."***

***(அபூதாவூத், அத்திர்மிதி)***

***"நபிமார்களாகிய நாம் விட்டுச் செல்லும் சொத்துக்கள் வாரிசாவதில்லை. அவை ஏழைகளுக்கும் தேவையுடைய வர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்."***

***(அல்புகாரி)***

ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மேற்கூறிய பிரார்த்தனையில் அவர் எனக்கும் யஃகூபுடைய குடும்பத் தினருக்கும் வாரிசாகத் திகழட்டும்" என்ற வாசகத்திலிருந்து வாரிசாக நாடப்படுவது சொத்துக்களாக இருந்தால் ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர் களின் மகன் யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய சொத்துக்களை வாரிசாக அனந்தரம் கொள்ள முடியாது என்பதும் புரிகிறது.

இம்ரானுடைய மனைவியும் ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) உடைய மனைவியும் ஒன்றுவிட்ட சகோதரிகள். இருவருக்கும் குழந்தைப் பாக்கியம் இருக்கவில்லை. ஒரு நாள் ஒரு தாய்ப் பறவை அதன் குஞ்சுகளுக்கு தீனி கொண்டு வந்து ஊட்டுவதைப் பார்த்த இம்ரானின் மனைவி ஹன்னா தனக்கும் ஒரு குழந்தை வேண்டுமே என இறை வனிடம் இறைஞ்சியதும் அவர் கர்ப்பம் தரித்தார். குழந்தை கர்ப்பத்தில் இருக் கும்போதே அதனை மஸ்ஜிதுல் அக்ஸாவை நிருவகிப்பதற்கான பொறுப்பைச் சுமக்க நேர்ச்சை செய்வதாக அல்லாஹ் விடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிடுகிறார்.

*"என் இறைவா! நான் எனது வயிற்றில் இருக்கும் குழந்தையை உனது திருப்பணிக்காக அர்ப்பணிக்க நேர்ச்சை செய்துள்ளேன். எனவே, இதனை என்னிடமிருந்து ஏற்றுக் கொள்வாயாக." (3: 35)*

இப்பணிக்காக ஓர் ஆண் குழந்தையை எதிர்பார்த்த ஹம்னா, அதனைப் பெற்றெடுத்ததும் ஒரு பெண் குழந்தையாகக் கண்டார்.

*"என் இறைவனே! நான் அதைப் பெண் குழந்தையாய்ப் பெற்று விட்டேன்.. நான் அக்குழந்தைக்கு 'மர்யம்' எனப் பெயர் சூட்டியுள்ளேன்." (3: 36)*

ஆம்! அவர்தான் ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை ஈன்றெடுத்த மர்யம் பின்த் இம்ரான். ஹம்னா செய்த நேர்ச்சையின் பிரகாரம் குழந்தை மர்யம் மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு அனுப்பப்படுகிறது. மர்யமைப் பராமரிக்கின்ற பொறுப்பை ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களே சுமக்க வேண்டும் என்று அல்லாஹ் நாடினான். மர்யம் மஸ்ஜிதுல் அக்ஸாவில் தனக்கென ஒரு திரையைப் போட்டு தியானத்திற்காக ஓரிடத்தை அமைத்துக் கொண்டார்.

மர்யம் இருக்கும் அந்த மாடத்தினுள் ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) செல்லும்போதெல்லாம் ஏதாவது உணவுப் பொருட்கள், பழ வர்க்கங்கள் அவரிடத்தில் இருப்பதைக் காண்பார். ஆனால், அந்தக் கனி வர்க்கங்களுக்குரிய பருவகாலமல்ல அது. குளிர் காலத்தில் கிடைக்கின்ற பழங்கள் கோடை காலத்திலும் கோடை காலத்தில் கிடைக்கின்ற பழங்கள் குளிர் காலத்திலும் மர்யமுக்கு முன்னால் பசுமையாக இருப்பதைப் பார்த்த ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், *"மர்யமே! இது "உனக்கு எங்கிருந்து கிடைத்தது"* (என்பார்). *அல்லாஹ் விடமிருந்து கிடைத்தது. தான் நாடியவர்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கணக்கின்றி வழங்குகிறான் என்று மர்யம் பதிலுரைப்பார்." (3: 37)*

இந்நிலையைக் கண்ட ஸகரிய்யா (அலைஹிஸ் ஸலாம்) அவர்களின் சிந்தனையைப் பாருங்கள். பருவங்கள் கடந்த பின்னரும் பசுமையான நிலையில் பழங்களை அள்ளி வழங்க ஆற்றல் பெற்ற அல்லாஹ் குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கான பருவகாலத்தை இழந்து, எலும்புகள் நலிவடைந்து, நரையினால் தலை மினுமினுத்து அதற்கும் அப்பால் மனைவியும் மலடியாக இருக்கின்ற நிலையில் தனக்கொரு குழந்தையை தரவும் அவன் பேராற்றல் பெற்றவன் என்பதை உணர்கிறார். பனூ இஸ்ரவேலர்களின் இயல்புகளையும் நன்றி கெட்ட சுபாவத்தையும் நன்கறிந்து வைத்திருந்த ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்), தான் நாளை மறைந்தால் தனது இந்தப் பணியை இச்சமூகத்தில் தொடர யார் இருக்கிறார் என்று தனது முதுமையின் தள்ளாத வயதில் ஏங்கித் தவித்து தன் இறைவனிடத்தில் தனக்கு ஒரு குழந்தை வேண்டுமே என்று பிரார்த்திக்கிறார். ஸூறா அல் அன்பியாவில் அவரது பிரார்த்தனை இப்படிப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது:

*"என் இறைவனே! என்னை நீ சந்ததியற்ற தனித்தவனாக ஆக்கி விடாதே. நீயே வாரிசுதாரர்களில் மிக்க மேலானவன்." (21: 89)*

அல்குர்ஆனில் ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பிரார்த்தனை இடம்பெற்றுள்ள மூன்று இடங்களிலும் அவரது பிரார்த்தனையை அல்லாஹ் அங்கீகரித்து ஓர் இறைதூதரைக் குழந்தையாக வழங்கியதாகப் பிரஸ்தாபிக்கிறான்.

*"ஸகரிய்யாவே! உமக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கும் என்று நாம் நற்செய்தி அறிவிக்கின்றோம். அதன் பெயர் யஹ்யா. இந்தப் பெயருடைய எவரையும் இதற்கு முன் நாம் படைக்கவில்லை."(19: 7)* மேலும் பார்க்க *(3: 39) (21:90)*

எந்த நோக்கங்களுக்காக தனக்கு குழந்தை வேண்டும் என்று ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) பிரார்த்தித்தாரோ அந்த நோக்கத்தை குழந்தை யஹ்யா (அலைஹிஸ்ஸலாம்) செவ்வனே நிறைவேற்ற வேண்டும் என்று அல்லாஹ் எதிர்பார்த்தான். குழந்தை கிடைப்பதற்கான நற்செய்தியை அல்லாஹ் ஸூறா மர்யமில் சொல்லியதன் பின் அடுத்த வசனத்தில் நாம் யஹ்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை வளர்த்த வாலிபப் பருவத்தில் காண்கிறோம்:

*"யஹ்யாவே! நீர் வேதத்தை உறுதியாகப் பற்றிப் பிடிப்பீராக!" (19: 12)*

இஸ்லாமியப் பணிக்குத் துணை நிற்கின்ற அவரது பல ஆளுமைப் பண்புகளை அல்குர்ஆன் விவரிக்கிறது.

*"அவரிடம் தலைமைத்துவம் மற்றும் மகத்துவத்தின் பண்புகள் காணப்படும். மனக்கட்டுப்பாடு கொண்டவராகவும் இருப்பார். நபித்துவம் அருளப்பட்டவராகவும் இருப்பார். மேலும் ஒழுக்கசீலர்களில் ஒருவராகவும் திகழ்வார்." (3: 39)*

குழந்தைகள் விடயத்தில் எமது கவலை எதுவாக இருக்க வேண்டும் என்பது இப்போது புரிகிறதா? நாம் ஆற்றுகின்ற மகத்தான இந்தப் பணியை நமது சந்ததிகளும் தத்தமது தோள்களில் சுமந்து அடுத்து வருகின்ற ஒவ்வொரு வழித்தோன்றலுக்கும் அதனைக் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற வேண்டும் என்ற தூரநோக்கோடு நாம் சிந்திக்க வேண்டும். இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அல்லாஹ் பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தி, அத்தனை சோதனைகளிலும் அவர் வெற்றி பெற்ற பின்னர் அல்லாஹ் கூறினான்.

"(இப்றாஹீமே!) நான் நிச்சயமாக உம்மை மனித குலத்திற்கு தலைவராக்கப் போகிறேன்." (2: 124)

அதற்கு இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பதில் என்ன தெரியுமா?

وَمِنْ ذُرِّيَّتِي *"(என் இறைவனே!) என்னுடைய குழந்தைகளின் விஷயம் என்ன?" (2: 124)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சமூகத்தை வழிநடத்துகின்ற மகத்தான அந்த தலைமைத்துவப் பொறுப்பை எனது குழந்தைகளும் என்னிடமிருந்து வாரிசாகப் பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அது தொடராக பல சந்ததிகளுக்கு வியாபிக்க வேண்டும் என்று நான் ஆதரவு வைக்கிறேன். ذُرِّيَّة என்ற பிரயோகம் أَبْنَاء அல்லது أَوْلَاد என்ற பதங்களில் இருந்து வேறுபட்டது. ذُرِّيَّة என்பது பிற்காலத்தில் வாழையடி வாழையாக வர இருக்கின்ற எண்ணற்ற பல சந்ததிகளை உள்ளடக்கும். ஸூறா ஆலு இம்றானில் வருகின்ற ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய துஆவிலும் ذُرِّيَّة طَيِّبَة "ஒரு தூய சந்ததியை உனது ஆற்றலால் வழங்குவாயாக" என்றே குறிப்பிடப்படுகிறது.

அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் துஆக்களை படித்துப் பாருங்கள். அவர் எப்போதும் தன்னுடைய துஆக்களில் தனது குழந்தைகளையும் குடும்பத்தையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார். அவரது துஆக்களின் விளைவாகவே அவருக்குப் பிறகு அனுப்பப்பட்ட அத்தனை நபிமார்களையும் அவருடைய குடும்பத்திலிருந்து வந்தவர்களாக அல்லாஹ் ஆக்கினான். மேலும் அவருடைய இரண்டு புதல்வர்களான இஸ்மாஈல், இஸ்ஹாக் (அலைஹிவஸ்ஸலாம்) ஆகிய இறைத்தூதர்கள் மூலமாக அல்லாஹ் உலகில் இன்றுவரை இருக்கின்ற இரண்டு பெரிய சமூகங்களையே ஆக்கினான்.

எனவே, எமது கவலையும் கரிசனையுமாக இருக்க வேண்டியது நாம், அழிந்து போகின்ற சொத்துக்களில் குழந்தைகளுக்கு எதனை விட்டுச் செல்கிறோம் என்பதல்ல. மாறாக, மார்க்கத்தை சந்ததிகளுக்கு வாரிசாக விட்டுச் செல்வதனூடாக நாமும் நமது சந்ததிகளும் நாளை சுவனத்தை வாரிசாகப் பெற வேண்டும் என்பது தான்.

*"அந்தச் சுவனம் எத்தகையதென்றால் நம் அடியார்களில் எவர்கள் இறையச்சம் கொண்டு வாழ்கிறார்களோ அவர்களையே அதற்கு வாரிசுகளாக்குவோம்." (19: 63)*

இஸட். ஏ.எம். பவாஸ்
சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், மலேசியா


# இஸ்லாமிக் புக் ஹவுஸ் வெளியீடுகள்

# வெற்றிச் சுடர்

**கடந்த கால வினா விடை மாதிரி வினா விடைத்தாள்களுடன் (O/L)**

| | |
|---|---|
| கணிதம் | - 299/= |
| வரலாறு | - 180/= |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | - 180/= |

**(A/L)**

| | |
|---|---|
| அரபு மொழி | - 230/= |
| பொருளியல் | - 175/= |
| அரசியல் மூலதத்துவங்கள் | - 225/= |
| கணக்கீடு | - 200/= |
| அளவையியலும் விஞ்ஞான முறைமையும் | - 150/= |
| பெரிய மஃஸூறாத் (தமிழ் மொழி பெயர்ப்பு) | - 120/= |
| கணக்கீடு அடிப்படைக் கணக்கீட்டுக் கோட்பாடு (A/L) | - 230/= |

**புள்ளியிடல் திட்டத்திற்கமைய சுயகற்றல் வழிகாட்டி நூல்கள்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் எழுத்து மூல அனுமதியுடன் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.**

**வழிகாட்டி (A/L) நூல்களில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மாதிரி வினாத்தாள் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

தொகுப்பு - இஸ்லாமிக் புக் ஹவுஸ் ஆசிரியர் குழாம்

## இஸ்லாமிக் புக் ஹவுஸ்

எமது புத்தக விலைப்பட்டியலை பார்வையிட www.lbh.lk
77, தெமடகொட வீதி,கொழும்பு-9.
தொலைபேசி: 011 2684851, 011 2669197 | பெக்ஸ்: 011 2688102 | தொ.பேசி:0112684851




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று ஒளியின் நிழலில் - 13

# "நான் அல்லாஹ்விடம் உதவி கோராது போர்க்களம் சென்றதில்லை. அப்போதெல்லாம் தோல்வி அடையவும் இல்லை. ஆயினும்..."

## செல்ஜுக் மன்னன் அல்ப் அர்ஸலான்

எம்.ஐ.எம். அமீன்
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

கி.பி. பதினொராம் நூற்றாண்டில் அப்பாஸிய கிலாபத் சிதைந்து பல சிற்றரசுகள் உருவாகியிருந்தன. சாம்ராஜ்யத்தின் கிழக்குப் பகுதியில் துருக்கிய அடிமைகள் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்ட கஸ்னி, புவைத், ஸமனைட் முதலான பல கோத்திரங்கள் சிற்றரசுகளை அமைத்திருந்தன. இவர்களைக் கட்டுப்படுத்தித் தன்கீழ் கொண்டுவருவதற்கான இராணுவ பலமோ ராஜதந்திரத் திறமைகளோ கலீபாவிடம் இருக்கவில்லை. அதனால் ஒரு சிற்றரசை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றும், மற்றொரு சிற்றரசை வாழ்த்தி ஆசீர்வதித்து அங்கீகரிக்கும் பணியையே கலீபா மேற்கொண்டார். கலீபாவின் ஆதிக்கம் ஆன்மிகத் துறையின் எல்லைக்குள் மட்டுமே மட்டுப்பட்டிருந்தது.

பக்தாதில் நிழாமிய்யாப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்த சிற்றரசுகளில் இக்காலப்பகுதியில் தோன்றிய செல்ஜூக் சிற்றரசும் குறிப்பிடத்தக்கதாகும். புஹாராவை மத்திய நிலையமாகக் கொண்டு வாழ்ந்த செல்ஜூக்கியர்களின் முன்னோர்களில் 'துகாக்' என்பவரே முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றார். இவர்கள் 'சுன்னத் வல் ஜமாஅத்' சிந்தனைப் பிரிவைச் சேர்ந்தவர்கள். கஸ்னி சிற்றரசின் ஆட்சியாளரான மஹ்மூத் இவர்களை புகாராவில் குடியேற்றினார்.

இக்கோத்திரத்தவர் சிறந்த வீரர்கள். குறிப்பாக, கி.பி. *1037*இல் மர்வு நகரில் தன்னை சிற்றரசராகப் பிரகடனப்படுத்திய துஃரில் என்பவர், இலக்குத் தவறாது அம்பு எய்வதில் புகழ் பெற்றவர். இவரே செல்ஜூக் ஆட்சியைத் தோற்றுவித்தவர்.

இவர் கி.பி. *1063*இல் இறக்க, அவரது மருமகனான அல்ப் அர்ஸலான் பதவியேற்றார். கம்பீரமான தோற்றமுடைய இவர் ஒரு சிறந்த வில் வீரர். இலக்குத் தவறாது அம்பெய்வதில் ஆற்றல்மிக்கவர். இலக்கியம், வரலாறு போன்ற கலைகளில் ஆர்வம் உள்ளவர். எதிரிகள் பலரைப் பல போர்க்களங்களில் புறமுதுகிட்டு ஓடச் செய்தவர். உரோமப் பேரரசரைப் போர்க்களத்தில் கைது செய்தவரும் இவரே.

கி.பி. *1072*இல் தனது ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த மற்றொரு துருக்கிக் கோத்திரத்தவரை அடக்குவதற்காக இரண்டு இலட்சம் போர் வீரர்களுடன் சென்றார். இதற்கு முன்னர் அவர் இத்தகைய பெரும் படையை ஒரு போதும் போர்க்களங்களுக்குக் கொண்டு சென்றதில்லை. ஆதலால், அவரது உள்ளத்தில் பெருமை உணர்ச்சி மெதுவாகத் துளிர்விட்டது. தனது படையின் சக்தி பற்றிச் சிந்தித்து போர்க்களத்தில் வெற்றி கொள்ள முடியும் என்று கற்பனையில் இருக்கும்போதே அவரது வீரர்கள் அவரது எதிரிகளில் ஒருவரைக் கைது செய்து கொண்டு வந்து அவரது முன்னிலையில் நிறுத்தினர். அவனது கைகளிலும் கால்களிலும் விலங்கிடப்பட்டிருந்தது. அக்கைதிக்கு கொலைத் தண்டனை வழங்குமாறு அல்ப் அர்ஸலான் கட்டளையிட்டார்.

இதனைச் செவியுற்ற அக்கைதி, "எனது கைசேதமே! நான் ஓர் அடிமை போலவா சாக வேண்டும்!" என்று குரல் எழுப்பினான். அதனால் அல்ப் அர்ஸலான் அவனது தளைகளை அவிழ்த்து விடுமாறும் அவனைத் தானே கொலை செய்வதாகவும் மெய்க்காப்பாளர்களை ஒதுங்குமாறும் கட்டளையிட்டார்.

ஒரு நாளும் இலக்குப் பொய்க்காத அவனது அம்பு பொய்த்தது. ஒரு கணப்பொழுது அர்ஸலான் செயலிழந்து நின்றார். அதனைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திய கைதி மறைத்து வைத்திருந்த கூரான ஆயுதத்தால் அர்ஸலானைத் தாக்கிப் படுகாயப்படுத்தினான்.

படுகாயமுற்று மரணப் படுக்கையில் இருந்த அல்ப் அர்ஸலான் தன் படையினருக்கு வஸிய்யத் செய்தார். பிரதம அமைச்சர் நிழாமை அழைத்து தன் மனக் கவலையைப் பின்வருமாறு வெளியிட்டார்:

"நான் அல்லாஹ்வை நினைத்து உதவி கோராது ஒரு போதும் போர்க்களம் சென்றதில்லை. அப்போதெல்லாம் தோல்வி அடையவும் இல்லை. ஆயினும், நேற்று இரண்டு இலட்சம் படை வீரர்களோடும் எனது படைத் தளபதிகளோடும் நின்றபோது நான்தான் உலகின் மன்னாதி மன்னன்; எவரும் என்னைத் தடுத்து நிறுத்த முடியாது என்று நினைத்தேன். அல்லாஹ் இன்று மிகப் பலவீனமான அவனது படைப்புகளில் ஒருவன் மூலம் என் கர்வத்தை அடக்கி விட்டான். எனது இந்த கர்வத்துக்காக நான் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருகின்றேன்."

இறைவனின் அருளை மறந்து தமது திறமையினால் அனைத்தையும் சாதித்தோம் என்று தம்பட்டம் அடிக்கும் ஒவ்வொருவரும் தமது வாழ்வு பற்றி மறுபரிசீலனை செய்வார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை நிறைய பணத்தை பெற்றுத் தரும் பாடநெறி!

Free Hostel Facilities

For More Details
0774447110



Hardware
&
Software

MOBILE PHONE
Reparing Course

Course fee 6500/-வை முதல் மாதத்திலேயே சம்பாதித்துக் கொள்ள முடியுமான ஓர் முதலீடு...

Batch 1
May 12-15
Batch 2
May 19-22

FREE - Mobile Secrets 100 ( Book)
- Toolkit - Tutes - Software CD
- நீங்கள் கொண்டு வரும் 5 phone கள் Free ஆக repair செய்து கொடுக்கப்படும்.

IRO College of Education

Colombo
105, (3rd Floor)
Jayanthe Weerasekara Mw,
Colombo - 10.

Kandy
64, (1st Floor)
Katugastota Road,
Kandy

100% Money Back Guaranteed

தபால் மூலக் கல்வி

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Dip. in Social Science – சமூக விஞ்ஞானம்.
2. Dip. in Disaster Mgt – அனர்த்த முகாமைத்துவம்
3. Dip. in Psychology – உளவியல்
4. Dip. in Library Management – நூலக முகாமைத்துவம்
5. Dip. in Human Recourse Management – மனித வள முகாமைத்துவம்
6. Dip. in Educational Mgt – கல்வி முகாமைத்துவம்.
7. Dip. in Montessori – ஆரம்ப பாடசாலை
8. Dip. in Marketing – சந்தைப்படுத்தல்
9. Dip. in Business Mgt – வியாபார முகாமை
10. Dip. In Office Mgt – அலுவலக நிர்வாகம்

தமிழ் மொழி மூலம்

அனைத்து பாடங்களும் தபால் மூலம் கற்பிக்கப்படும், இறுதியில் சர்வதேச அங்கீகார Certificate வளங்கப்படும். காலம் 6 மாதம், கட்டணம் 4800.00 (மாதாந்தம் 800.00 ரூபாய்) Application Form, மேலதிக விபரங்கள் பெற கீழ்வரும் கையடக்க தொலைபேசிக்கு பெயர், முகவரியை SMS செய்யுங்கள். 0713144536

INSTITUTE OF SOCIAL & TECHNICAL STUDIES
400 First Floor, Main Street, Maruthamunai 3, Kalmunai
வெளிநாட்டில் உள்ளோர்: ists999@gmail.com
Affiliated with: IAO - U.S.A.

New City Cab

Fast & Reliable Service



24 HRS
Service

- A/C, D/A/C Vans
- VIP Luxury Vehicles
- Wedding Cars
- Loading Vehicles

Colombo City

Call us for Long & Short Hires

Special Rates for Airport, Reasonable Charges for Long Hires
Special Package for City Run,

உங்களது சகல விதமான பயணத் தேவைகளுக்கும் நாடுங்கள்!

தொடர்புகளுக்கு:
Kamaldeen
✆ 241 222
Mobile: 077 831 3071

NEW
HOW TO LEARN
கற்றலுக்கான வழிகாட்டல்



புதிய இறுவட்டு வெளியீடு
RINOS HANIFFA

Note:
மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிப்பதற்கான புதிய கற்கை முறையான "PQRST" முறைமை இவ் இறுவட்டில் (DVD) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இஸ்லாமிக் புக் ஹவுஸ் | கொலேஜ் புக் சென்றர் | 077 5079598 | 075 2841275



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலஸ்தீன்

## முஸ்லிம் உம்மத்தின் உயிர்

(ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்)

தொடர் 06

சென்ற இரு தொடர்களில் பலஸ்தீனை மீட்டெடுத்து, நீதிமிக்க ஆட்சியைக் கட்டி எழுப்பும் நோக்கில் பனூ இஸ்ரவேலர்களை அழைத்து வந்த நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், தமது மக்களின் கோழைத்தனம், அடாவடித்தனம், நிராகரிப்பு, அத்துமீறல் ஆகிய பண்புகளினால் இலட்சியத்தை அடைய முடியாமல் மனவிரக்தி அடைந்த நிலையில் மரணத்தை ஆசித்துப் பிரார்த்திக்கும் வரைக்குமான வரலாற்றை அல்குர்ஆன், பைபிள் ஆகிய மூலாதாரங்கள் வாயிலாக நோக்கினோம். அவற்றினூடாக பனூ இஸ்ரவேலர்கள் எத்தகைய மனப்பாங்குடையவர்கள் என்பதையும் அறிந்து கொள்ள முடியுமாகியது.

மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மறைவைத் தொடர்ந்து, அவரது பாசறையில் வளர்ந்த, அல்லாஹ்வால் நபியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட யூஷஃ பின் நூன் என்பவர், கி.மு. 1190 களில் ஜோர்தான் நதியினூடாக படை நகர்த்தி வந்து பலஸ்தீனைச் சூழ உள்ள பல பகுதிகளை வெற்றி கொண்டார்கள். ஆனாலும், அவரால் குத்ஸை வெற்றி கொள்ள முடியவில்லை.

நபி யூஷஃ (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மேற்கொண்ட ஒரு யுத்தம் பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய ஒரு சம்பவத்தை பின்வரும் ஹதீஸிலிருந்து அறிய முடிகின்றது.

"நபி யூஷஃ அவர்களின் படை போரிட்டுக் கொண்டிருந்தது. சூரியன் அஸ்தமிக்கும் நேரம் வந்தபோது, யுத்தம் முடிந்து வெற்றி தனக்குக் கிடைக்கும் வரை சூரியன் அஸ்தமிக்காதிருக்க அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். அல்லாஹ் அவரது பிரார்த்தனையை ஏற்று அஸ்தமனத்தைத் தாமதப்படுத்தி தனது நபிக்கு வெற்றியைக் கொடுத்தான்."

யூஷஃ பின் நூன் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மரணித்ததைத் தொடர்ந்து பனூ இஸ்ரவேலர்களின் வரலாற்றில் மிகவும் இருள் சூழ்ந்த ஒரு காலம் தோன்றுகின்றது. ஒரு நபியினதோ அல்லது ஒரு மண்ணினதோ பொதுவான ஒரு தலைமைத்துவம் இல்லாமல், பல தலைவர்களினால் பனூ இஸ்ரவேலர்கள் அக்காலத்தில் ஆளப்பட்டு வந்தனர். அக்காலம் 'நீதிபதிகளின் காலம்' என அழைக்கப்படுகின்றது.

சுமார் 150 வருடங்களை இவ்வாறாகக் கழித்த பனூ இஸ்ரவேலர்கள், அப்போது தமக்கு வழிகாட்டியாக வந்த நபி சாமுவேல் அவர்களிடம், பலஸ்தீனை வெற்றி கொள்வதற்காக தம்மைத் தலைமை தாங்கிச் செல்லும் ஒருவரை தமக்கு அரசராக்கும்படி வேண்டிக் கொண்டனர். அதற்கு, அவர்களது மனநிலையை நன்கு அறிந்திருந்த நபி சாமுவேல், "யுத்தம் உங்கள் மீது விதியான பின் நீங்கள் யுத்தம் செய்யாமல் இருந்து விடுவீர்களோ?" எனக் கேட்டார். அதற்கு அவர்கள் "நாம் எமது வாழ்விடங்கள், பிள்ளைகள் அனைவரிலிருந்தும் பிரிக்கப்பட்டு அவலப்படும் இந்நிலையில் அல்லாஹ்வின் பாதையில் அப்படியும் யுத்தம் செய்யாதிருப்போமா!" என்றனர்.

யுத்தம் செய்வதில் பனூ இஸ்ரவேலர்களின் உறுதித் தன்மையைக் கண்டபோது நபி சாமுவேல் அவர்கள் யுத்தம் செய்வதற்கு அல்லாஹ்விடமிருந்து வந்த அனுமதியையும் அதற்கு 'தாலூத்' என்பவரே அரசராகவும் தளபதியாகவும் இருக்க வேண்டும் என்றபோது, அவர்களின் முக்கியஸ்தர்கள் "தாலூத் பலமில்லாதவர்; நாமே அதற்கு மிகவும் தகுதியானோர்" எனக் கூறி நபியுடன் முரண்பட்டனர்.

கி.மு. 1025இல் நடைபெற்ற இந்நிகழ்வு ஸூரதுல் பகராவின் 246 முதல் 251 வரையிலான வசனங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அல்குர்ஆன், பைபிள் ஆகிய இரு மூலாதாரங்களினதும் தகவல்களின்படி, பனூ இஸ்ரவேலர்களின் சிறிய ஒரு கூட்டமே தமது எதிரிகளான பலம் பொருந்திய ஜாலூத்தின் படையை எதிர்கொண்டது. தாலூத்தின் படையிலிருந்து 'தாவூத்' என்ற சிறுவனே ஜாலூத் என்ற தளபதியை வீழ்த்தியதன் மூலம் பனூ இஸ்ரவேலர்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தான். பிறகு அல்லாஹ் தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை நபியாகத் தேர்ந்தெடுத்தான்.

தாலூத் மன்னனைத் தொடர்ந்து கி.மு. 1004ல் தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் பனூ இஸ்ரவேலர்களின் அரசராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து பலஸ்தீன வரலாற்றில் புதியதோர் அத்தியாயம் மலர ஆரம்பித்தது.

நபி தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் பிறந்த இடம் பெத்லஹேம் ஆகும். அரசரானதும் ஹலீல் என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு அவர் ஆட்சி செய்தார். அங்கிருந்து தொடர்ந்தும் போராடி குத்ஸ் நகரையும் வெற்றி கொண்டார். அவர் பலஸ்தீன் முழுவதையும் 40 வருடங்கள் ஆட்சி செய்து ஏகத்துவத்தையும் நீதியையும் அம்மண்ணில் நிலைநாட்டினார்.

தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வபாத்தைத் தொடர்ந்து அவரது மகன் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் பலஸ்தீனத்தின் அரசாரக முடிசூடுகின்றார். சுமார் 40 வருடங்கள் ஆட்சி செய்த அவரது காலம் பலஸ்தீன வரலாற்றில் பொற்காலமாகவே கருதப்படுகின்றது. அல்லாஹ் அவருக்கு, எந்த ஒரு மனிதனுக்கும் வழங்காத அருட்கொடைகளை வழங்யிருந்தான். அவர் அவற்றை நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவும் இறைத்தூதை நிலை நாட்டுவதற்காகவுமே பயன்படுத்தினார். இதனால் நாடு வளம் பெற்றது. மக்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. பலஸ்தீனத்திற்கு அப்பாலும் ஏகத்துவக் கோட்பாடு பரவியது. ஸபஃ நாட்டு இளவரசிகூட புனித மார்க்கத்தில் நுழைந்து ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு தனது கட்டுப்படுதலை வெளிப்படுத்தினார்.

பனூ இஸ்ரவேலர்கள் நபி தாவூத் (அலைஹிஸ்ஸலாம்), நபி ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) ஆகிய இருவரையும் தங்களது மகத்தான தலைவர்களாகப் போற்றிப் புகழ்கின்றனர். அவர்கள் ஆட்சி செய்த பூமியை தமது அனந்தரச் சொத்தாகக் கருதுகின்றனர். ஆனால், முஸ்லிம்கள் அவர்களை விடவும் அவ்விருவரையும் கௌரவிக்கின்றனர். பாவங்கள் செய்வதிலிருந்தும் மனோ இச்சைகளைப் பின்பற்றுவதிலிருந்தும் அவ்விருவரும் பாதுகாக்கப்பட்டவர்கள் என்றே நம்புகின்றனர். அல்குர்ஆன் அத்தகைய நம்பிக்கையைத்தான் முஸ்லிம்களது உள்ளத்தில் வளர்த்துள்ளது. ஆனால், யூதர்களின் வேத நூல் தாவூத் மற்றும் ஸுலைமான் (அலைஹிமஸ்ஸலாம்) ஆகிய இருவரையும் காம வெறி கொண்ட அயோக்கியர்களாகச் சித்திரிக்கின்றது. தூய்மைமிக்க நபிமார்களின் வரலாற்றை அசிங்கப்படுத்தியோர் எவ்வாறு அந்த நபிமார்களின் வாரிசுகளாக முடியும்?

ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் வபாத்தானதும் பனூ இஸ்ரவேலர்களின் 12 பிரதிநிதிகளும் ஷகீம் என்ற இடத்தில் ஒன்றுகூடி யார் தமது அடுத்த அரசன் என்பது தொடர்பாக கலந்தாலோசித்தனர். அப்போது ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது மகனைத் தெரிவு செய்வதில் அவர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு தோன்றியது. ஏனெனில், வரிச் சலுகை தொடர்பாக அவர் வாக்குறுதி ஏதும் அளித்திருக்கவில்லை. எனவே, 10 பிரதிநிதிகள் அவருக்குப் பதிலாக 'யர்பிஆம்' என்பவரை மன்னனாக முடிசூட்டினர். யஹூதா, புன்யமீன் கோத்திரத்தார் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது மகனையே தமது அரசராகத் தெரிவு செய்தனர். அது முதல் பனூ இஸ்ரவேலர்கள் இரு முகாம்களாகப் பிரிந்தனர்.

மன்னன் 'யர்பிஆம்' உடைய இராச்சியம் 'இஸ்ராயீல்' என அழைக்கப்பட்டது. ஸுலைமான் (அலைஹிஸ்ஸலம்) அவர்களது மகனின் இராச்சியம் 'யஹூதா' என அழைக்கப்பட்டது. இவர் குத்ஸைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார்.

இவ்விரு யூத அரசுகளுக்குமிடையில் போட்டியும் பொறாமையுமே எப்போதும் இருந்து வந்தது. அத்தோடு ஒழுக்கச் சீர்கேடும் தடையேதும் இன்றிப் பரவியது. இவ்விரு ஆட்சியாளர்களும் தாவூத் (அலைஹிஸ்ஸலாம்), ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) ஆகிய இருவரும் கட்டி எழுப்பிய ஏகத்துவம், நீதி, பண்பாடு என்பவற்றைக் குழிதோண்டிப் புதைத்தனர். அப்போது பல நபிமார்கள், அவர்களைச் சீர்திருத்துவதற்காக அனுப்பப்பட்டனர்.

ஆனால், பனூ இஸ்ரவேலர்களோ "அவர்களது மனோ இச்சைப்படி செயற்படாத அந்நபிமார்களில் சிலரைப் பொய்ப்பித்தனர்; மற்றும் சிலரைக் கொலை செய்தனர்."
(அல்மாஇதா: 70)

Hijama Health Centre
Ayurveda, Unani Medicine & Hijama Therapy
"We Treat... God Heals..."
offers
the forgotten Sunnah...
Al-hijama
The Prophet (Sallallaahu Alayhi Wasallam) said, "If there is any good in your medical treatments it is in Hijama..." [Bukhari (5359)]
Experienced Insured Qualified Hygienic Safe
Receive affordable healthcare by incorporating Modern Medicine with Ancient Natural Remedies & Treatments inspired by the Quran & Sunnah
hijama can help in the treatment of:
stress and tension
migraines and headaches
back and neck pain
shoulder problems
skin conditions and allergies
fatigue and lethargy
sleeping problems
joint pains and arthritis
foot and ankle pain
menstrual pain
irregular cycles
available for males & females
web: www.unani.lk
Consultation Hours:
Mon - Sat 6.30 am - 10.00 am
Sun - Holidays 6.30 am - 1.00 pm
(Appointments Only)
Special Kerala Ayurvedic Treatment Available For Nervous Disorders & Paralysis
222, Grandpass Road, Colombo - 14, Mob: 0718348190



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம்: நஸீமா மால் (தென்னாபிரிக்க எழுத்தாளர்) தமிழில்: சல்மான் அக்ரம்

சில நாட்களில் நாம் தூக்கத்திலிருந்து கண் விழிக்கும்போது தலையை ஒரு கருமேகம் சூழ்ந்திருப்பது போல் உணருவோம். அந்நேரத்தில் உலகமே இருண்டு விட்டதாக எமக்குத் தோன்றும். நம்பிக்கையீனம் எம்மைத் தொற்றிக் கொள்ளும். இந்நிலைமையை உதறித்தள்ளி விட முடியாது என்பது போல் எண்ணுவீர்கள்.

இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் வழிவகுக்கின்றன. சிலவேளைகளில் இந் நிலைமைகள் ஏற்படுவதற்கான காரணங்களை எமது உள்ளத்தால் உணர முடியாமல் போகலாம்.

சில பொழுது எமக்கு மிக விருப்புக்குரியதாக அமையும். ஒரு சாதகமான பரீட்சைப் பெறுபேறு கிடைத்தபோது... ஒரு பெருநாள் தினத்தின்போது... நண்பர்களோடு சுற்றுலா செல்லும்போது... உங்கள் மனநிலையை எண்ணிப் பாருங்கள். மனத்திருப்தியும் மகிழ்ச்சியும் உங்களை ஆட்கொண்டிருக்கும். அதே போன்று இன்னும் சிலவேளைகளில் உங்கள் தன்னம்பிக்கையை நீங்கள் இழந்து விட்டதாகவும் வாழ்க்கையே கசப்பானதாக மாறிவிட்டதாகவும் நீங்கள் உணருவீர்கள்.

இவ்வாறு பல்வேறு உணர்வுகளுக்கு மத்தியில் நாம் எமது வாழ்வைக் கடத்திக் கொண்டிருக்கிறோம். நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது உலகத்தையே எங்களால் வெற்றி கொள்ள முடியும் என்பது போன்று நாம் எண்ணுவோம். ஆனால், கவலையடையும் போது நாங்கள் எதனையும் செய்வதற்கான மனநிலையில் இருப்பதில்லை. சிலவேளைகளில் எமது அன்றாட வேலைகளைக் கூட செய்ய முடியாதவாறு நாங்கள் சோர்ந்து விடுகிறோம்.

உண்மை என்னவென்றால், நாம் ஒவ்வொருவரும் சில நேரங்களில் கவலையடைகிறோம். அது ஒவ்வொருவரினதும் கால, இட சூழ்நிலைக்கேற்ப மாறுபடும்.

சோர்வு அல்லது கவலை ஏற்படுவது தங்களது ஈமானில் உள்ள பலவீனத்தினால் என்று எம்மில் பலர் நினைக்கின்றனர். உண்மை நிலை அதுவல்ல. இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது மகனை இழந்த போது, மகள் ருகையா (ரழியல்லாஹு அன்ஹா) மரணித்தபோது, தனது முதல் மனைவியான அன்னை கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை இழந்தபோது, தன்னை சிறு வயதிலிருந்து வளர்த்த சிறிய தந்தை அபூதாலிபின் மரணம் சம்பவித்தபோது நபியவர்கள் கவலையடைந்து அழுததை வரலாறு எமக்குச் சொல்கிறது.

நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மட்டுமல்ல, ஏனைய நபிமார்கள் கூட சில சந்தர்ப்பங்களில் கவலைக்கு உட்பட்டார்கள் என்பதை நாம் வரலாற்றில் காண்கிறோம். யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தனது அன்பு மகன் யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் காணாமல் போன போது அழுதழுது அவரது கண்கள் பார்வையிழந்து போனதை அல்குர்ஆன் விவரிக்கிறது.

நபிமார்களுக்கு கவலை ஏற்படும்போதெல்லாம் முதலாவதாக அல்லாஹ்வை நம்பினார்கள்; அல்லாஹ்விடமே உதவியை வேண்டி நின்றார்கள். கவலைப்படுவது பிழையான ஒரு விடயமல்ல; துக்கத்தின்போது நாம் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என்பதே முக்கியம். இதுவே நபிமார்களின் வரலாற்றிலிருந்து நாம் பெறும் படிப்பினையாகும்.

ஆனால் எம்மில் சிலர் துக்கத்தின்போது அல்லாஹ்விடம் கை ஏந்துவதில்லை. எங்களை சந்தோஷம் ஆட்கொள்ளும்போது அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பதற்கும் மனச்சோர்வின்போது உதவியையும் பலத்தையும் பெறுவதற்கும் எம்மைப் படைத்த இறைவனே முதன்மைப் பொருத்தமானவன் என்பதை நாம் உணர வேண்டும். அல்லாஹ்விடம் மாத்திரமே உதவி தேட வேண்டும். இறைவனின் அருட்கதவுகள் அவனது அடியார்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கின்றன.

நாம் என்ன செய்யலாம்?

கவலைகள், சஞ்சலங்கள் ஏற்படும்போது மனம் திறந்து எமது பெற்றோரிடம் கலந்தாலோசித்து அறிவுரை பெற முடியும். அது மிக ஆரோக்கியமான நிலை. எனினும், நடைமுறையில் அவ்வாறு பெற்றோருடன் மனம் திறந்து பிரச்சினைகளைக் கலந்தாலோசிக்கும் பண்பு எம்மவர் மத்தியில் மிகவும் குறைவாகவே உள்ளது. அதன்போது எமது நண்பர்களிடம் அல்லது மிகவும் நெருங்கிய ஒரு நண்பரிடம் எமது கவலைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். மிக முக்கியமான விடயம் என்னவெனில், கவலை எம்மைச் சூழ்ந்து கொள்ளும்போது நாம் தனிமைப்படவோ நம்முடன் இருப்பவர்களை விட்டு தூர விலகவோ முயலக் கூடாது. இது எமது நிலையை இன்னும் மோசமானதாக மாற்றி விடும்.

சிலவேளைகளில் நாம் எமது பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய மிக நெருங்கிய நண்பர் ஒருவரைக் கூட பெற்றுக் கொள்ள முடியாது போகலாம். அவ்வாறான நிலைமைகளில் உளவளத்துணையாளர் ஒருவரை அல்லது எமது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரை நாடலாம். அவர் எங்களது நண்பராகவே இருக்க வேண்டிய அவசியமில்லை.

பிரச்சினைகள் எம்மைச் சூழும்போது எமக்கு மகிழ்ச்சியை தரக்கூடிய ஏதாவது ஒரு விடயத்தில் கவனத்தை செலுத்த வேண்டும். அது புத்தகங்களாக அல்லது சஞ்சிகைகளாக இருக்கலாம். குர்ஆன் ஓதுதல் அல்லது அதனை செவிமடுத்தல் போன்ற எமதுள்ளத்துக்கு திருப்தியை தரக்கூடிய ஏதாவது ஒரு விடயத்தில் கவனத்தை செலுத்துவது எமது மன அழுத்தத்தைக் குறைக்க உதவும்.

கவலைப்படுவது மனித இயல்புகளில் ஒன்றாகும். அதனைப் புறக்கணிப்பது எம்மில் பாதகமான விளைவை ஏற்படுத்தலாம். எனவே, கவலைகள் எம்மைச் சூழும்போது இதயத்தை இறைவனின் பக்கம் திரும்புவது, நெருக்கமானவர்களிடத்தில் எமது பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்வது போன்ற வழிமுறைகளினூடாக கவலைகளைப் போக்குவதற்கு முயற்சிக்க வேண்டும்.


இன்னுமொரு நாள் எமது நண்பர் ஒருவரின் துயரத்தின் போது நாம் அவருக்கு ஆறுதல் சொல்வதற்கு இந்த அனுபவம் உதவும்.

# சஞ்சலங்கள் சூழும்போது என்ன செய்யலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா



ஜம்இய்யதுத் தலபாவினால் நடத்தப்பட்ட மனித வள அபிவிருத்திக்கான நிகழ்ச்சியை (HRDP) வெற்றிகரமாக நிறைவுசெய்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் பிலிமதலாவை கிராம அபிவிருத்திக்கான பயிற்றுவிப்பு மற்றும் ஆய்வு நிலையத்தின் ஜீ.வி.எஸ் சில்வா கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் செயற்திட்ட அதிகாரியும் ப்ரபோதய சஞ்சிகையின் ஆசிரியருமான எம்.எச்.எம். ஹஸன், அஷ்ஷெய்க் நஜா (இஸ்லாஹி), பேராதனைப் பல்கலைக்கழக விவசாயத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் மௌஜூத் மற்றும் ஜம்இய்யாவின் நாஸிம் சகோதரர் முன்ஸிப் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்



க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான 5 நாள் பயிற்சிநெறியில் (இளைஞர் வலுவூட்டல் நிகழ்ச்சி) கலந்து கொண்ட அம்பாறை, மட்டக்களப்பு பிராந்திய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் அஷ்ரஃப் மாநாட்டு மண்டபத்தில் ஜம்இய்யாவின் மருதமுனை உப பிராந்திய நாஸிம் ஆஷிக் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அம்பாறை பிராந்திய நாஸிம் அப்துல் கமால் (இஸ்லாஹி) அவர்களும் விஷேட அதிதியாக அல்மனார் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் ஹிர்பகன் அவர்களும் மற்றும் பல அதிதிகளும் கலந்து கொண்டனர்.

## களப் பிரயாணம்



ஒட்டமாவடி ஜம்இய்யா கிளை அண்மையில் அஸாபீர்களுக்கான களப் பிரயாணம் ஒன்றை அமீர் அலி மைதானத்துக்கு அருகிலுள்ள வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தது. மாணவர்களின் மனவாற்றலை வளர்த்தெடுத்தல், அவர்களின் சுய திறமைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தல், தலைமைத்துவப் பண்பை வளர்த்தல், தலைமைக்கு கட்டுப்படுதல் போன்ற ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்யும் நோக்கில் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் சுமார் 20 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன. அவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூதை சுமந்த இளைஞனாக...

இஸ்லாம் மனிதர்களுக்கிடையிலான, இனங்களுக்கிடையிலான நல்லுறவுகளை வலுப்படுத்துவதை ஊக்குவிப்பதோடு, இடைவெளிகளற்ற ஒரு சமூகத்தை உருவாக்க வழிகாட்டுகின்றது. இறுதித் தூதரின் உம்மத் என்பதனால் நாடப்படுபவர்கள் இன்று வாழ்கின்ற முஸ்லிம்கள் மட்டுமல்ல, மாற்றமாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்குப் பின்னால் பிறந்த அனைவரும் அவர்களின் உம்மத்தினராவர். ஆனால், இன்று நாம் இந்த உண்மையை மறந்து செயற்படுகின்றோம். எமது அல்லாஹ், எமது நபி, எமது குர்ஆன் என்பன போன்ற சொந்தம் கொண்டாடல்கள் எமது வார்த்தைகளில் மலிந்து காணப்படுகின்றன. இவையனைத்தும் இஸ்லாம் எதிர்பார்க்கின்ற இடைவெளிகளற்ற சமூகமொன்றை உருவாக்குவதற்குத் தடையாக அமைகின்ற காரணிகளாகும்.

நாம் உங்களை குழுக்களாகவும் கோத்திரங்களாகவும் படைத்தது நீங்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அறிமுகமாகிக் கொள்வதற்கே என்று அல்குர்ஆன் சொல்லித் தருகின்றது. ஆனால், அந்த வழிகாட்டலை சுமந்த நாங்கள் இனங்களையும் மதங்களையும் பிரிவினைக்கான காரணிகளாக மாற்றிக் கொண்டிருக்கின்றோமா என்று கேட்கத் தோன்றுகின்றது.

அநீதிகளின்போதும் உரிமை மீறல்களின்போதும் அதற்கெதிராகக் குரல் கொடுப்பதும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கட்டாயம். அநீதியை இல்லாமலாக்குவது இஸ்லாத்தின் அடிப்படை வேலைகளில் ஒன்று. ஆனால், அநீதிக்கெதிராக நடத்தும் போராட்டம் இன்னுமின்னும் எமக்கெதிரான செயற்பாடுகளை தூண்டுமாக இருந்தால், கொஞ்சம் பொறுத்துப் போவதால் ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை.

ஓர் அநீதிக்கெதிரான போராட்டம் பல வகைகளில் அமையலாம்.

*01.* ஆர்ப்பாட்டங்களாக, பேரணிகளாக

*02.* ஊடகப் பிரசாரங்களாக

*03. சட்ட ரீதியான நடவடிக்கைகளாக*

*04. பொருளாதாரப் பகிஷ்கரிப்பாக*

*05. அரசியல் அழுத்தங்களாக*

*06. வன்முறையாக*

என ஆறு வகைகளில் அநீதிக்கெதிரான, உரிமை மீறலுக்கெதிரான போராட்டம் அமையலாம். இவற்றில் ஆறாவது வகையான வன்முறைப் பிரயோகம் இஸ்லாத்தின் பார்வையில் முற்றிலும் தடுக்கப்பட்டதாகும். அது தவிர்ந்த ஏனைய வழிமுறைகளைப் பிரயோகித்து எமக்கான நீதியை, உரிமைகளை வென்றெடுக்க முயற்சிப்பதில் தவறொன்றுமில்லை.

உதாரணமாக, டென்மார்க்கிலும் இன்னும் பல ஐரோப்பிய நாடுகளிலும் நபியவர்களையும் இஸ்லாத்தையும் கொச்சைப்படுத்தும் வகையில் பிரசுரிக்கப்பட்ட கேலிச்சித்திர விவகாரத்தில் உலகளாவிய முஸ்லிம் உம்மத் மேற்சொன்ன முதல் ஐந்து வழிமுறைகளையும் முழுமையாகப் பயன்படுத்தி தனது எதிர்ப்பை வெளிக்காட்டியது. (ஆங்காங்கே வன்முறைகளும் இடம்பெற்றன என்பதை மறுக்க முடியாது) அல்ஹம்துலில்லாஹ், அந்த முயற்சிகளின் விளைவாக சம்பந்தப்பட்ட நாடுகள் முஸ்லிம் உம்மத்திடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானதை நாம் அறிவோம்.

எனவே, இந்த விடயத்தில் முஸ்லிம் இளைஞர்களாகிய நாம், இந்த நாட்டுக்கான முன்மாதிரிகளாக எம்மை அடையாளப்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். வன்முறைக் கலாசாரம் எம்மை சாதிக்க விடாது. அதனை நன்குணர்ந்து எமது மார்க்கத்துக்கு சான்று பகர்ந்த வரலாற்று இளைஞர்களின் சரிதையை மீண்டும் புதுப்பிப்போம். இளைஞர்களே, வாருங்கள் அணிதிரள்வோம்! எமது சொந்த உணர்ச்சிகளுக்கு அடிபணிந்து எமது சமூகத்தைக் காட்டிக் கொடுப்பவர்களாக இல்லாமல் ஓரணியில் நின்று இந்த நாட்டுக்கு இஸ்லாத்தின் தூதை எத்திவைப்போம்!

நீங்கள் ஜம்இய்யாவின் இலவச Twitter சேவையைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறீர்களா? நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். FOLLOW (Space) JAMIYYANEWS என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS அனுப்பவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணலாரின்
## அழகிய பத்து உபதேசங்கள்

*01.* இறைவன் யாருக்கு நலவை நாடுகிறானோ அவனுக்கு மார்க்கத்தில் விளக்கத்தை அளிப்பான்.

*02.* செல்வ வளம் என்பது அதிகமாக செல்வத்தைப் பெறுவதல்ல. போதுமென்ற மனதைப் பெறுவதே உண்மையான செல்வமாகும்.

*03.* தர்மத்தில் சிறந்தது இடது கைக்கு தெரியாமல் வலது கையினால் கொடுப்பதுதான்.

*04.* வணக்க வழிபாடுள்ள ஓர் உலோபியை விட வணக்க வழிபாடு குறைந்த ஒரு கொடையாளி இறைவனிடம் மிகச் சிறந்தவனாவான்.

*05.* கூலியாளின் வியர்வை உலர்வதற்கு முன் அவருடைய கூலியைக் கொடுத்து விடுங்கள்.

*06.* உங்களில் நற்குணம் உடையவரே உங்களில் சிறந்தவர் ஆவார்.

*07.* செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன.

*08.* இறைவன் உங்கள் உருவங்களையோ உங்கள் செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக, உங்கள் உள்ளங்களையும் செயல்களையும் பார்க்கின்றான்.

*09.* குத்துச் சண்டையில் அடுத்தவனை வீழ்த்துபவன் வீரன் அல்ல. மாறாக, கோபம் வரும்போது தன்னைத்தானே அடக்கிக் கொள்பவனே வீரன் ஆவான்.

*10.* நெருப்பு விறகை எரித்துச் சாம்பராக்கி விடுவதைப் போல் பொறாமை நற்செயல்களை எரித்துச் சாம்பராக்கி விடும்.

– ஸுஆத் ஸரூக், காலி –

# பொய்யும் மெய்யும்

மெய்யும் பொய்யும் நம்முடைய வாழ்க்கையோடு கலந்து விட்டன. நமக்கு எது இலாபம் தருகின்றதோ அதைத் தெரிவுசெய்ய நாம் தயங்காதவர்களாகவே இருக்கின்றோம். அது பொய்யாக இருந்தாலும் சரி, மெய்யாக இருந்தாலும் சரி.

உள்ளத்தில் உண்மைகளே பதிவுசெய்து வைக்கப் படுகின்றன. பொய்யை நாம்தான் தூக்கி ஒரு சுமையாக உள்ளத்தில் வைக்கின்றோம். அந்த சுமையை உள்ளம் மெல்ல மெல்ல இறக்கி தூர எறிந்து விடக்கூடும். ஆம்! பொய்ச்சுமைக்கு உள்ளத்தில் நீடித்த இருப்பிடம் கிடையாது என்பதை நாம் புரிந்து கொள்ள வெண்டும். எனவேதான் சொல்லி வைத்தாற்போல் பொய்கள் எல்லாம் விரைவில் மறந்து போய் விடுகின்றன.

மேலும், உண்மைக்கு இயற்கையே சாட்சியாக அமைந்து விடுகின்றது. ஆனால், பொய்யை நிரூபிக்க சாட்சியை ஜோடிக்க வேண்டியதாக இருக்கிறது.

எனவே, பொய் நீர்க்குமிழியைப் போன்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் பொய் சொல்வதிலிருந்து எம்மை நாம் தற்காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

ஒருமுறை பொய் சொல்லி மாட்டிக் கொள்வோமேயானால் அதன் பின் நாம் உண்மை சொன்னால் கூட பொய் சொல்வதாகவே கருதும் இவ்வுலகம். அது மட்டுமல்ல, நமக்கு பொய்யன் என்ற முத்திரையும் குத்தப்பட்டு விடும்.

எனவே, நாம் சொல்லும் உண்மைகள் ஏற்கப்படாத நிலைமை ஏற்படுமேயானால் அது எமது வளர்ச்சிக்கு மிகுந்த பாதகத்தை ஏற்படுத்தும். இதற்குக் காரணம், நாம் முன்பு ஏதோ ஓர் இலாபம் கருதி கூறிய பொய்தான். ஆனால், அப்போது கிடைத்த இலாபத்தைவிட இப்போதும் இனிமேலும் கிடைக்கின்ற இழப்பு மிக மிக அதிகமானதாகவே இருக்கும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

பொய் அற்ப ஆயுள் கொண்டது. அப்படிப்பட்ட பொய்யை நாம் கட்டிக்காக்க முடியுமா என்ன? பொய் வெளிப்படும்போது அது விளைவித்த தீமைக்கேற்ப நமக்கு அழிவைத் தந்துவிடும்.

பொய் சொல்வது என்பதே மிகவும் சிரமமானது. அப்படியெனில் உண்மையைச் சொல்வது மிகவும் சுலபமானதா என்ற கேள்வியும் எழுகிறது.

இதற்கும் சிந்தித்தே விடை காண வேண்டியிருக்கிறது. உண்மையைச் சொல்வதே சுலபம் என்றால் நமக்குப் பொய் கூற வேண்டிய அவசியம் பெரும்பான்மையான சூழ்நிலைகளால் ஏற்படாது என்பதுதான்.

ஆனால், நாம் பல நிலைகளில் உண்மையை மறைப்பதில் குறியாக இருக்கின்றோம். உள்ளதை உள்ளபடி கூறுகின்ற மனத்திண்மை பல நேரங்களில் நம்மிடம் இல்லாமல் போய் விடுகிறது.

இதற்கு என்ன காரணம்?

ஒன்று, அதனால் நாம் பெரிய இழப்பை சந்திக்க வேண்டியிருக்கும். மற்றையது நாம் அவமானத்துக்கு உள்ளாக நேரிட்டு விடக் கூடும் என்ற அச்சம். நாம் ஒரு தவறிழைத்து விட்டோம் என்று வைத்துக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தவறை ஒப்புக் கொள்கின்ற மனோநிலை எமக்கு வந்து விடுகிறதா என்ன?

நாம் எப்பொழுதும் உண்மையே பேசும் மன உறுதியைக் கொண்டவராக இருப்போமேயானால் எந்தச் சூழ்நிலையிலும் தவறான செயலை எமக்கும் பிறருக்கும் தீமை தருகின்றன செயலைச் செய்ய விழையவே மாட்டோம்.

இதிலிருந்து, தீமை செய்வதிலிருந்து உண்மை நம்மை காப்பாற்றுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். முதலில் சிறு இழப்பைத் தருவது போல் தோன்றினாலும் போகப்போக உண்மை நமக்குப் பெருமையாகவும் இலாபத்தையும் அள்ளித் தருகிறது.

ஒரு பொய்யை மறைக்க நாம் பல பொய்களை சொல்லிக் கொண்டு போக வேண்டியதாகி விடுகிறது. அதே போல உண்மைகளைத் தொடர்ந்து சொல்லச் சொல்ல உண்மையைச் சொல்வது இனிதாகிப் போகிறது.

பொய் சொல்வதற்கு நிறைய ஞாபக சக்தி இருக்க வேண்டும். உண்மையை சொல்பவர்களுக்கு நிறைய தைரியம் இருக்க வேண்டும்; பக்குவமும் இறையச்சமும் இருக்க வேண்டும்.

இணையத்திலிருந்து தேடித் தந்தவர்:
பாத்திமா அஸீமா அஸீஸ்

## உன்னத பண்புகளை உருவாக்கிக் கொள்ள விரும்புகின்றீர்களா?

*01.* நம்பத்தகுந்தவர்- நேர்மையின் இருப்பிடம் என்ற முத்திரையைப் பெறுங்கள்.

*02.* திருடாதீர்கள்- பிறரின் பொருட்களை கேட்காமல் ஒருபோதும் எடுக்காதீர்கள். அனுமதி பெறாமல் இரவல் எடுத்துச் செல்வதும் கூட ஒருவகையில் திருட்டுத் தான்.

*03.* நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் எச்சரிக்கையாக இருங்கள். எவரை நண்பராகக் கொண்டிருக்கிறீர்கள் என்பது மட்டுமல்ல, எவருடைய நட்பைத் தவிர்த்திருக்கிறீர்கள் என்பதும் உங்கள் பண்பை வெளிப்படுத்தக் கூடியது.

*04.* கொடுத்த வாக்கை நிறைவேற்றுங்கள்; பிறரை ஒருபோதும் ஏமாற்றத்துக்கு ஆளாக்காதீர்கள்.

*05.* அதிகாரத்தை அல்ல, பொறுப்பைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

*06.* பிறருக்கு உதவி செய்வதில் மகிழுங்கள்.

*07.* இரகசியம் காப்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களிடம் இரகசியமாகக் கூறப்பட்ட எதையும் வெளியிடாதீர்கள்.

*08.* மற்றவர்களைப் பற்றி இழிவாகப் புறம் பேசாதீர்கள். அது இழிந்த பண்பாகும்.

*09.* நீங்கள் நீங்களாகவே இருங்கள். போலியாக் காட்டி நடிக்காதீர்கள். உங்கள் குறைகளைப் பற்றி பெருமைப்படாதீர்கள். முன்னேற முயற்சியுங்கள். ஆனால், உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளாதீர்கள்.

*10.* ஒரு தவறு செய்தால் அதற்கு வருத்தம் தெரிவிக்க தயங்காதீர்கள். மற்றவர் தவறு செய்தால் பொறுமையை வெளிப்படுத்துங்கள்.

*11.* பெற்றோருக்குப் பெருமை தேடிக் கொடுங்கள். அவர்கள் உங்களுக்குச் செய்த அனைத்துக்கும் நன்றியுடையவர்களாக இருங்கள்.

*12.* எப்போதும் இனிய சொற்களையும் குறைந்த விவாதங்களையும் பயன்படுத்துங்கள்.

*13.* மென்மையானவராக இருங்கள். அது வலிமையின் வெளிப்பாடு. உள்ளே பலவீனமாக இருப்பவர்கள்தான் முரட்டுத்தனம் காட்டுவார்கள்.

*14.* வதந்திகள் பரப்புவோர், வம்பளக்கும் நண்பர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்.

*15.* பிறர் பேசக் கேட்பதைப் பழகிக் கொள்ளுங்கள். மற்றவர்கள் பேசும்போது இடைமறிக்காதீர்கள்.

*16.* நியாயமான காரணங்களுக்காக நியாயமனதை மட்டு மே செய்யுங்கள்.

*17.* வாரத்துக்கு ஒரு நல்ல புத்தகம் படியுங்கள். அது உங்கள் ஆன்மாவை செழுமைப்படுத்தும்.

## வினா-விடைப் போட்டி-48

**வினாக்கள்**

01. தூய்மையான உள்ளம் பெற்றிருக்க வேண்டிய இரண்டு தன்மைகளையும் குறிப்பிடுக?
02. எகிப்திய ஜனாதிபதித் தேர்தலில் இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பு சார்பாக போட்டியிட்ட வேட்பாளர் யார்?
03. நிழாமிய்யாப் பல்கலைக்கழகம் எங்கு அமைந்துள்ளது?
04. தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் பலஸ்தீனத்தை எத்தனை வருடங்கள் ஆட்சி செய்தார்கள்?
05. சிங்கப்பூரின் ஸ்தாபகப் பிரதமர் யார்?

**உங்கள் விடைகளை ஜூன் 23ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.**

**கடந்த வினா- விடைப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்** **பக்கம் 59 இல் பார்க்கவும்.**

**சிறுவர் பூங்கா**
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூரின் ஸ்தாபகப் பிரதமர் லீ குவான் யீ, *1960*களில் தனது நாடு சுதந்திரமடைந்த பின்னர் அதனை ஒரு சிலோன் (Ceylon-இலங்கை) ஆக மாற்றியமைப்பதாக சூளுரைத்தார். எந்தளவு ஸ்திரமான இலங்கை அப்போது எம்மிடம் இருந்தது என்பதை இதிலிருந்து இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

சுதந்திர இலங்கை எமக்களித்த பல பொன்னான வாய்ப்புக்களைப் பயன்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்துகொள்வதிலிருந்து குறுகிய மனோநிலை, சந்தர்ப்பவாத அரசியல் முன்னெடுப்புக்கள் என்பன எம்மைத் தடுத்து விட்டன. அவ் அரிய வாய்ப்புகளை கைநழுவ விட்டு விட்டோம். நாடு மூன்று தசாப்த யுத்தமெனும் அதல பாதாளத்தில் சறுக்கி விழுந்தது. அந்தளவு பிரமாண்டமான அழிவுக்கும் விலை மதிக்க முடியாத மனித உயிரிழப்புக்கும் பின்னரே யுத்தம் கொடுமைமிக்கது என்ற பட்டறிவுக்கு இலங்கையர் வந்தனர். இனங்களுக்கிடையில் பகைமூட்டி, ஒருவரை ஒருவர் குத்திக் குதறி தீர்த்துக் கட்டிய பின்பே புத்தி பிறந்துள்ளது.

இனப் பல்வகைமை என்பது இலங்கையின் யாதார்த்த நிலை. அனைத்து இலங்கையரையும் ஒரே இனமாக மாற்ற முயற்சிப்பது ஒருபோதும் சாத்தியமாகாத ஒன்று. இப்படியான முயற்சியில் ஈடுபட்ட பல நாடுகள் இழிவு தரும் தோல்வியையே தழுவிக் கொண்டன.

□ஆஸிம் அலவி□

# அனைத்து இலங்கையரதும் உறைவிடமாக அமையும் பொது சிந்தனையை நோக்கி...

குறுகியவாத சிந்தனைகளும் இனத் துவேசத்தை மையமாகக் கொண்ட சாகசங் களும் எமக்கு துயரத்துக்கு மேல் துயரத்தை யன்றி வேறெதனையும் தரவில்லை. கொள்கை முரண்பாடுகள், தொலை நோக்கற்ற அரசி யல் பார்வை ஆகியவற்றால் மாசடைந்த ஒரு வரலாற்றையே சுதந்திர இலங்கை கொண் டுள்ளது. அத்தோடு முன்சென்ற அரசியல் கட்சியின் பணிகள் அனைத்தையும் மாற்றி யமைத்து புது வித்தைகளை அறிமுகம் செய்யத் திடசங்கற்பம் பூண்ட, அரசியல்வாதிகளை சுதந்திரத்துக்குப் பின்னரான தந்தது.

உணவுப் பழக்கத்தை மாற்றுவது போல் திடீர் திடீரென ஆட்சிக் கொள்கைகளை மாற்றி, எக்கேடு கெட்டேனும் தனது பெயர் பதிய வேண்டும் என்ற எண்ணத்தில் பணியாற்றும் பேராா்வம் இவர்களைத் தொற்றிக் கொண்டது. ஒன்று மட்டும் திண்ணம்; வரலாற்றில் எந்தக் கட்டத்திலாவது இலங்கை கொள்கை ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் ஒருமுகப்பட்டதாக இருக்க வில்லை.

மீண்டும் ஒரு தடவை அரிய வாய்ப்பொன்று பிறந்துள்ளது. இறந்த காலத்தின் மகிமை பாடாது செழிப்பை நோக்கி முன்நகர்ந்து செல்வதற்கான வாய்ப்பே அது. பொன்னான வாய்ப்புக்கள் திரும்பக் கிடைப்பது கடினம்.

எப்படியானதொரு இலங்கையை லீகுவான் முன்மாதிரியாகக் கொள்ள எத்தனித்தார்? சர்வதேச நாணய நிதியத்தின் முரட்டுக் கட்டளைகளுக்கு அடிபணிந்த பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்திய இலங்கையையா? இலங்கையின் இலவசக் கல்வி முறை, சமூகத்தில் புரையோடிப் போயுள்ள இன நல்லிணக்கம், சுதேச பண்பாடுகள், வலுவான மத விழுமியங்கள், சுதந்திர பொருளாதாரக் கொள்கைகள் (அப்படியொன்று இருந்திருந்தால்) ஆகியவற்றை அவர் முன்மாதிரியாகக் கொள்ள எத்தனித்திருந்தால், அதில் ஒரு முக்கிய விடயம் உள்ளது. மேற்கூறியவற்றை முன்மாதிரியாகக் கொள்வதற்கு ஏனையோரை விட அருகதைமிக்கவர்கள் இலங்கையரான நாமே.

எமக்கு சுத்தமானதொரு 'இலங்கைசார் சிந்தனை' தேவைப் படுகிறது. எந்தவொரு தனிநபரினது பெயருடனும் ஒட்டப்படாத சிந்தனையாகவே அது இருக்க வேண்டும்; இனத்துவ சிந்தனை, குலத்துவேசம் ஆகியவற்றைத் தாண்டி மேலே உயர்ந்து நிற்கும் சிந்தனையாகவே அது அமைய வேண்டும். இந்த விசாலமான சிந்தனையை உருவாக்குவதற்காக ஆழமான கருத்துப் பரிமாறல் நடைபெற வேண்டும். அதன் பயனாக ஒரு தொகை 'வழிகாட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்கள்' (Guiding Principles) வகுக்கப்பட வேண்டும். பௌத்த, முஸ்லிம், ஹிந்து, கிறிஸ்தவ சமயத்தவர் அனைவரும் போற்றி கண்ணியப்படுத்தும் மத விழுமியங்களின் அத்திபாரத்திலே இத்தத்துவங்கள் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

அடிப்படையில், இலங்கை மதசார்பான நாடாகும். ஆகையால் அதன் பிரஜைகளை மதமே வழிநடத்த வேண்டும். இந்தத் தத்துவங்கள் சமூகங்களின் படித்த மக்களினதும் முதிர்ச்சியும் பக்குவமுமுள்ள, நடுநிலை பேணக்கூடிய அனுபவசாலிகளினதும் திறந்த கருத்துப் பரிமாற்றத்தினூடாகவே உருவாக வேண்டும். அதற்கு மாற்றமாக, அரசியல்வா திகள் நியமித்த உத்தியோகபூர்வ குழுக்களின் தீர்மானமாக வந்தால், அது தேவையான தாக்கத்தைச் செலுத்தாது. கொள்கைகளை அமுல்படுத் துவதற்கு நிச்சயம் அதிகாரம் தேவை. எனவே, அந்த சிந்தனையானது ஆட்சிக்கு வரும் அனைத்துக் கட்சி களினதும் வழிகாட்டல் தத்துவமாக அமைவது அவசியம். அச்சிந்தனை ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியிலிருந்து உதயமாகியிருந்தால் அல்லது ஒரு தனிநபருடன் இணைக்கப்பட்டிருந்தால், அது நிச்சயமாக சமூகத்தின் அனைத்துத் தரப்பினரதும் அங்கீகாரத்தைப் பெறாது. அந்த குறிப்பிட்ட கட்சியோ அல்லது தனிநபரோ பதவியிழக்கும்போது அவற்றோடு சேர்ந்து அச்சிந் தனையும் மண்ணுக்குள் புதையுண்டுபோய் விடும். சந்தர்ப்பவாத அரசியல் அரங்கில் இது அன்றாட நிகழ்வு.

இலங்கையானது ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம் ஆகிய பண்புகள் பேணப்படும் ஒரு நாடு. மக்களும் அதற்குப் பழக்கப்பட்டுள்ளனர். எனவே, திணிக்கப்படும் சிந்தனைகளை அச்சமூகம் ஏற்றுக் கொள்ளாது. ஒரு தனிநபரின் சிந்தனையை 'திருநிலைப்படுத்துவதை' அம்மக்கள் கேள்விக்குட்படுத்துவார்கள். அதிகம் புகழ்ந் துரைக்கப்பட்ட சோவியத் யூனியனின் கம்யூனிஸ சிந்தனையைப் பாருங்கள். அது சிறுவர், பெண்கள், இளைஞர், ஆண்கள் எனப் பாராது அனைவர் மீதும் திணிக்கப்பட்டது. விரக்தியடைந்த மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது அச்சிந்தனைக்கெதிராக கிளர்ச்சி செய்து அதனைத் தூக்கியெறிந்து விட்டனர்.

ஒரு சிந்தனை எப்போதும் மக்களது உள்ளங்களை வென்று அவர்களது இணக்கப்பாட்டுடன் அமுல்படுத் தப்படுகிறதோ அப்போது அது நிச்சயம் நீண்ட காலம் தாக்குப்பிடிக்கும். ஓர் உண்மையான இலங்கைச் சிந்த னையைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கை முஸ்லிம் சமூகம் பிரமாண்டமான பங்களிப்பை வழங்க முடியும். இஸ்லாத்தின் கோட்பாடுகள் உலகளாவியதும் அனைத்து மக்களுக்கும் பொருந்தக் கூடியவையுமாகும்.

மனித குலம் ஒன்றே என நம்புவது இஸ்லாத்தின் பிரதான அடிப்படையாகும். சட்டத்தின் முன்னால் அனைவரும் சமமே. அவர்களது மத, இன, நிற, கலாசார, மொழி ரீதியான வேறுபாடுகள் அல்லாஹ்வின் மகத்தான ஞானத்தின் வெளிப்பாடுகளே. மனிதர்கள் தம்மை அறிந்து கொள்ளும் பொருட்டே அவை அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், அதிக இறையச்சமுடையவரே அல்லாஹ்விடம் அதிக மதிப்புக்குரியவராவார்.

*"மனிதர்களே! உங்களை நாம் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்து, பல பிரிவையுடையவர் களாவும் கோத்திரங்களாகவும் உங்களை ஆக்கினோம். ஒருவரையொருவர் அறிந்து கொள்ளும் பொருட்டே (அவ்வாறு செய்தோம்)."* *(அல் ஹுஜுராத்: 13)*

இஸ்லாம் கொள்கையளவில் பிரிவினைவாதத்துக் கும் புவியியல் ரீதியாக மக்களைப் பிரிப்பதற்கும் எதிரா னது. முன்னணி இஸ்லாமிய அறிஞர்களுள் ஒருவரான மௌலானா மௌதூதி (ரஹிமஹுல்லாஹ்) இந்த கொள்கையின் அடிப்படையிலேயே பாகிஸ்தான் பிரிவி னையை எதிர்த்தார்கள்.

இனப் பல்வகைமை என்பது இலங்கையின் யாதார்த்த நிலை. அனைத்து இலங்கையரையும் ஒரே இனமாக மாற்ற முயற்சிப்பது ஒருபோதும் சாத்தியமாகாத ஒன்று. இப்படியான முயற்சியில் ஈடுபட்ட பல நாடுகள் இழிவு தரும் தோல்வியையே தழுவிக் கொண்டன.

மற்றோர் அடிப்படைப் பண்பு நடுநிலையான வாழ்க்கை முறையாகும். தற்கால மனிதனை நிலை குலையச் செய்துள்ள நுகர்வோர் கலாசாரத்தின் கோரத் தாக்குதலை எதிர்த்து நிற்பதற்கு இப்பண்பு அவசிய மாகும். தற்கால சடவாத மனிதன் ஒரு வகை எலிப் பந்தயத்தில் ஈடுபட்டுள்ளான். உலக பொருளாதார சச்சரவு எனும் பெயரில் சில வருடங்களுக்கு முன் பாரியதொரு பொருளாதார வீழ்ச்சி முழு உலகையும் பயங்கரமாக உலுக்கிய அதன் தாக்கங்கள் இன்றுவரை மக்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக் கின்றன. குறிப்பாக, நுகர்வோர் கலாசாரத்துக்கு ஆட்பட்ட சமூகங்கள் கடும் அச்சத்தில் ஆழ்ந்தன. தமது உணவுப் பாதுகாப்பு, சொகுசு வாழ்க்கை ஆகியன பேரி ழப்புக்கு உள்ளாகின்றன என்பதை எண்ணி தம்மையே மாய்த்துக் கொண்டன. ஏதோ மாபெரும் அனர்த்த மொன்று நிகழ்ந்தது போன்று நிம்மதியிழந்து படபடத் தன. இதற்கான பிரதான காரணம், நுகர்வோர்வயப் பட்ட சமூகத்தில் காணப்படும் உலகத்தை அனுபவிக்க வேண்டுமென்ற தீவிர வேட்கையும் பேராசையுமே!

*"...அருளாளனின் உண்மையான அடியார்கள் யாரென்றால்... இன்னும் அவர்கள் செலவு செய்தால் வீண்விரயம் செய்ய மாட்டார்கள், (உலோபித்தனமாக) குறைக்கவும் மாட்டார்கள். எனினும், இரண்டுக்கும் மத்திய நிலையில் இருப்பார்கள்..."* *(அல்புர்கான்: 67)*

இந்தக் குர்ஆனியப் பண்பும் இலங்கை சிந்தனையை அலங்கரிக்க வேண்டும்.

அடுத்து, நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் என்பது ஷரீஅத்தின் பிரதான வேண்டுதலாகும். ஒரு முஸ்லிம், சமூக அநீதிகள் அடர்ந்தேறி வரும்போது அமைதியாக இருக்க மாட்டான். ஊழல், சமூகச் சீர்கேடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க வீழ்ச்சி ஆகியவை அவனை தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முன்தள்ளும். எனினும், ஓர் உண்மையான முஸ்லிம் நிதானமிழந்து கண்மூடித்தனமான வன்முறைகளில் ஈடுபட மாட்டான்.

எனவேதான், ஒரு முஸ்லிமும் சமூக அநீதியும் கூடி வாழ முடியாது. அதேவேளை, தீமைப் புயலை தாக்குப் பிடிக்க முடியாது செயல் மந்தமடைந்து அவன் ஒதுங்கிப் போகவும் மாட்டான்.

மேற்சொன்ன இரு நன்னடத்தைகள் காரணமாக முஸ்லிம்களை சங்கைமிகு குர்ஆன் பாராட்டுகிறது.

*''மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள். தீயதை விட்டும் விலக்குகிறீர்கள். இன்னும் அல்லாஹ்வின் மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்.'' (ஆலு இம்ரான்: 110)*

அத்தோடு மற்றோரிடத்தில், நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டுமெனவும் அல்குர்ஆன் கேட்டுக் கொள்கிறது. இந்த ஒத்துழைப்பானது பொதுவானதாகும். மனித குலத்தின் நன்மை கருதி அனைத்து சாதகமான, சமாதானம் விரும்பும் சக்திகளுடனும் ஒன்றிணைந்து செயலாற்றுவதையே குறிக்கும். இந்தக் குர்ஆனிய போதனை மிக விசாலமான அர்த்தம் கொண்டது.

இந்த உணர்வை மேற்படி சிந்தனையில் உட்புகுத்துவதன் மூலம் அதனை ஸ்திரப்படுத்த முடியும். எமது கல்வித் திட்டத்தின் மூலம் தீமைகளை இதய சுத்தியுடன் வெறுக்கும் சந்ததி ஒன்றை உருவாக்க முடியுமெனில் நிச்சயம் நாட்டு மக்களின் உலக வாழ்வு நிம்மதியடையும். ஜப்பானியர்களிடம் இதனைக் காணலாம்.

நிர்ப்பந்தித்தல், கொள்கைத் திணிப்பு ஆகியவற்றில் இஸ்லாம் நம்பிக்கை வைப்பதில்லை. குர்ஆன் இதனைத் தெளிவாகவே உரைத்து விட்டது:

*''மார்க்கத்தில் நிர்பந்தமில்லை. (ஏனெனில்) வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் பிரிந்து தெளிவாகி விட்டது.'' (அல்பகரா: 256)*

ஆரம்பத்திலே கூறியது போன்று, நிர்ப்பந்தத்தின் மூலம் சமூகச் சீர்திருத்தத்தை ஏற்படுத்த முடியாது. சீர்திருத்தங்களின் பால் மக்களை ஆசையூட்டி அவற்றின் பெறுமதியை உணரவைத்து இணங்க வைப்பதன் மூலமே அதனை ஏற்படுத்த முடியும். 1970இல் ஆட்சி பீடமேறிய சோஷலிஸக் கட்சியை படுதோல்வியடையச் செய்து தூக்கியெறிந்த வரலாறு எமக்குப் பழையதல்ல. அந்த அரசு தனது அதிரடி சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்திய சீர்கேடுகளின் விளைவாக பொதுமக்கள் சொல்லொணாத் துயரத்துக்கு உட்பட்டனர். சீர்திருத்தங்களைத் திணிக்க முனைந்த ஆட்சியாளர்களை இழிவுபடுத்தி வீட்டுக்கனுப்பி விட்டனர். இனியொரு போதும் அச்சீர்திருத்தங்களை மீண்டும் திரும்பிப் பார்க்க முடியாதளவு பாடமொன்றை அவர்கள் கற்றுக் கொண்டனர்.

நீதி (அத்ல்)யை நிலைநாட்டுவது ஷரீஅத்தின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும். இஸ்லாமும் அநீதியும் ஒருபோதும் கூடிவாழ முடியாது. சிறுபான்மையினரின் அளவு கடந்த செல்வாக்கின் காரணமாக பொருளாதாரம் மற்றும் அரசியல் போன்ற துறைகளில் தமது செல்வாக்கையும் அதிகாரத்தையும் இழந்து வருவதாக ஒரு தரப்பு பெரும்பான்மை மக்களிடம் அச்சம் நிலவுகிறது. அவர்கள் தமது கலாசாரமும் மொழியும் ஆபத்துக்குள்ளாகியுள்ளதாக அஞ்சுகின்றனர். மறுபக்கம் தமது வணிகத்துறையில் பெரும்பான்மையினர் பல்வேறு தடைகளைப் போடுவதாக முஸ்லிம்கள் முறையிடுகின்றனர். தாங்க முடியாத கஷ்டங்களை ஏற்படுத்துவதாகவும் கூறுகின்றனர். மஸ்ஜித்களை நிர்மாணிக்கவும் முடியாதென்கின்றனர். இங்கு நீதி என்ற பன்பு எமது பிரச்சினைகளுக்கு மத்தியில் நசுங்கி மடிந்து போகிறது. என்பதே உண்மை.

எனவே, இலங்கைச் சிந்தனையொன்றின் அவசியம் உணரப்படவேண்டும். அதன் மூலம் எல்லா மனிதர்களுக்கும் இனங்களுக்கும் அவரவரின் நீதியான பங்கைப் பெற்றுக் கொள்ளும் ஒழுங்கமைப்பொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். அனைத்து சமூகங்களும் ஒருவருக்கொருவர் கூட்டுச் சேர்ந்து நிற்கும் நிலை உருவாக வேண்டும்.

தனது வாழ்க்கைத்தரம் உயர்ந்து, சுபிட்சமான வாழ்க்கை வாழவே ஒவ்வொரு சாதாரண இலங்கைப் பிரஜையும் விரும்புகிறார். அனைத்துக்கும் முதலாக, தனது மத, கலாசார உரிமைகளையும் அடிப்படை மனித உரிமையையும் பேணிப் பாதுகாக்கும் ஒரு சிந்தனையே அவருக்குத் தேவை. அச்சிந்தனையே அனைத்து இலங்கையரதும் உறைவிடமாகும்.

## வீடு விற்பனைக்கு

பஸ்யாலையில் ஹிரா கட்டிடத்துக்கு அருகாமையில் கண்டி வீதியிலிருந்து சுமார் 1.2 km தொலைவில் இஸ்லாமிய சூழலில் சகல வசதிகளும் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:**

**0774422516**

தரகர்கள் மூலம் தொடர்பு கொள்ள வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உமரின் பிரயத்தனம்**

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அபூ லுஃலுஃ என்பவனால் குத்தப்பட்டு மரணத் தறுவாயில் இருக்கும் நிலையில் அன்னாரை ஆட்கொண்ட எண்ணம் தான் நபிகளாருக்கு அருகாமையில் அடக்கப்பட வேண்டுமே என்பதாகும். உடனே ஒருவரை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் தூதனுப்பி அனுமதி வேண்டி னார்கள். ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களும் அனுமதித்து விட்டார்கள் என்ற சுபசெய்தியை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் செவியேற்றபோது "அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் நபிகளாருக்கு அருகாமையில் அடக்கப்பட வேண்டும் என்பதற்குக் கொடுத்த முக்கியத்துவத்தைப் போன்று வேறு எதற்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை" எனக் கூறினார்கள்.

**ஒரு பெண்ணின் நேசம்**

உஹுத் போர்க்களத்தில் நபிகளார் கொலை செய்யப்பட்டு விட்டார் என்ற வதந்தி பரப்பப்படு கின்றது. அதனைச் செவியேற்ற ஓர் அன்சாரிப் பெண் நபிகளாரைப் பார்ப்பதற்கு போர்க்களத்தை நோக்கி விரைகின்றாள். நபிகளாரின் நிலை என்னவோ? என்று அங்கலாய்த்துக் கொண்டு வரும், போகும் மனிதர்களிடம் விசாரிக்கின்றாள். ஒருவர் பதிலளிக்கிறார்: இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன், உனது தந்தை மரணித்து விட்டார்."

அவள் கேட்கிறாள்: "நபிகளாருக்கு என்ன நடந்தது?" ''அவர் நலமாக இருக்கிறார்'' என்று சொல்லப்படு கின்றது. மீண்டும் விரைகிறாள். மீண்டும் இன்னொரு வரிடம் விசாரிக்கிறாள். அங்கே "உனது கணவன் மரணித்து விட்டார்" என்று சொல்லப்படுகின்றது. "இல்லை, நபி களாருக்கு என்ன நடந்தது?'' என்று துருவித் துருவி வினவுகிறாள். ''அவர் நலமாக இருக்கிறார்'' என்று சொல்லப்படுகின்றது. எனினும், இந்தப் பெண் திருப்தி காணவில்லை. மீண்டும் விரைகிறாள். மீண்டும் விசாரிக் கிறாள். "உனது மகனும் மரணித்து விட்டார்'' என்று சொல்லப்படுகின்றது. ''இல்லை, நபிகளாரின் நிலை என்ன?" என்றே அவள் தொடர்ந்தும் கேட்டுக் கொண் டிருந்தாள். "அவர் நலமாக இருக்கிறார்" என்று சொல்லப் படுகின்றது. "இல்லை, நான் அன்னாரைக் கண்ணால் காணும்வரை அமைதி பெற மாட்டேன்" என்று கூறிக் கொண்டு போர்க்களத்தை நோக்கி விரைகின்றாள். அங்கே நபிகளாரைக் காண்கின்றாள். "யா ரஸூலல் லாஹ்! என்னைப் பீடித்துள்ள அனைத்துக் கஷ்டங்களும் உங்களைக் கண்டபின் இலேசாகி விட்டன" எனக் கூறி னாள்.

அவதானியுங்கள்...!

ஒரு பெண் தனது தந்தையின், கணவனின், பிள்ளை யின் மரணச் செய்தியை ஒரே நேரத்தில் எப்படிச் சகித்திருப்பாள்! ஆனால், நபிகளாரின் நிலையை அறிய முன் இத்தகு துயரச் செய்திகளை தூக்கியெறிந்துவிட்டு நபிகளாரைப் பற்றியே விசாரித்த இப்பெண்ணின் அன்பின் ஆழத்தை அவதானியுங்கள். அல்லாஹ் எம்மையும் அன் னார் மீது தூய நேசம் கொண்டவர்களாக ஆக்குவானாக!

**ஒரு நபித்தோழரின் இறுதி ஆசை**

பத்ர் போர்க்களத்தை நோக்கி முஸ்லிம் படை நகர்வதற்கு தயாராகின்றது. நபிகளார் தனது தோழர்களை அணிவகுப்புச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அங்கே ஒருவர் அணிவகுப்பிலிருந்து விலகி சற்று முன்னே தள்ளியிருப்பதை நபியவர்கள் அவதானிக்கிறார்கள். அவர்தான் ஸவாத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். "ஸவாதே! நிமிர்ந்து நில்!" என நபியவர்கள் வேண்டி னார்கள். மீண்டும் நபியவர்கள் படையை சீர்செய்கின் றார்கள். அங்கும் "ஸவாதே! நிமிர்ந்து நில்!" என்று கூறிக் கொண்டு செல்கின்றார்கள். மூன்றாம் முறையும் நபியவர்கள் அந்த ஸஹாபிக்கு அருகாமையில் செல்லும்போது தனது தடியால் அடித்தவராக நிமிர்ந்து நிற்குமாறு வேண்டி னார்கள். அப்போது ஸவாத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்: ''அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் என்னை நோவினைப்படுத்தி விட்டீர்கள்" என முறைப்பட்டார்கள். உடனே நபியவர்கள் தனது வயிற்றுப் பகுதியைக் காண்பித்து ''என்னைப் பழிவாங்குங்கள் ஸவாதே!'' எனக் கூறினார்கள். உடனே ஸவாத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபியவர்களைக் கட்டிப்பிடித்து அன்னாரது வயிற்றுப் பகுதியை முத்தமிட்டார்கள். "ஸவாதே! நீ இப்படிச் செய்வதற்கு காரணம் என்ன?"

நபியவர்களின் பண்புகளினூடாக அன்பு வைப்போம்



அரபு மூலம்: அம்ர் காலித்
தமிழில்: அஷ்கர் அரூஸ் (நளீமி)

# நபிகளாரின் ஸீராவிலிருந்து...

தொடர் – 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நபியவர்கள் வினவினார்கள். "அல்லாஹ்வின் தூதரே! இன்று எனது இறுதி நாளாக இருக்கலாம். எனது உடல் உமது உடலுடன் ஒட்டுவதே இவ்வுலகில் எனது இறுதிச் சந்தர்ப்பமாக இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன். அப்போது அல்லாஹ் எனது உடலை நரகை விட்டும் ஹராமாக்கக் கூடும்" எனக் கூறினார்கள்.

**இப்படியும் ஓர் இளைஞனா, ஸுப்ஹானல்லாஹ்!**

அவர்தான் 17 வயதையும் தாண்டாத இளம் இரத்தம் ரபீஆ பின் கஃப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். அன்னாரது ஆசையைப் பாருங்கள். அன்னாரிடம் உனக்கு வேண்டியதைக் கேள் என்று சொல்லப்பட்டபோது அவர் அளிக்கின்ற பதிலைப் பாருங்கள். இன்றைய ஓர் இளைஞனின் ஆசை என்னவாக இருக்கும்? ஒரு மாடிவீடு... சொகுசு வாகனம்... அழகான மனைவி... ஆனால் நபிகளாரின் பாசறையில் வளர்ந்த இந்த ரபீஆ பின் கஃப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆசையை அவர்களே சொல்கின்றார்கள்:

"நான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு பணிவிடை செய்பவனாக இருந்தேன். இஷாத் தொழுகையின் பின் நபியவர்கள் தனது வீட்டினுள் நுழைந்தாலும் நான் கதவருகாமையில் அமர்ந்து கொண்டிருப்பேன். சிலபோது நபியவர்கள் ஏதேனும் தேவைக்காக வெளியே வருவார்கள். நானும் அவர்களுக்கு உதவி செய்வேன். நபியவர்கள் வீட்டினுள்ளே இறைவனைத் துதிசெய்து கொண்டிருப்பார்கள். எங்களுக்கே சலித்துவிடும். நான் வீடு திரும்பி விடுவேன் அல்லது தூக்கம் என்னை மிகைத்துவிடும். ஒரு முறை நான் நபியவர்களுக்கு செய்யும் பணிவிடையின் நிமித்தம் என்னிடம் 'ரபீஆவே! உனக்கு என்ன வேண்டும் கேள் நான் தருவேன்' எனக் கேட்டார்கள்.

நானும் நபியவர்களிடம் அவகாசம் கேட்டுவிட்டு சிந்திக்கலானேன். பின்னர் நபியவர்கள் 'ரபீஆவே! என்ன வேண்டுமென்று தீர்மானித்து விட்டாயா?' எனக் கேட்டார்கள். 'ஆம், யா ரஸூலல்லாஹ்! நீங்கள் எனக்காக உமது இரட்சகனிடம் மன்றாட வேண்டும். என்னை நரகிலிருந்து காப்பாற்ற வேண்டும்' என வேண்டினேன். அப்போது நபியவர்கள் 'ரபீஆவே! இப்படிக் கேட்குமாறு உனக்கு சொல்லித் தந்தவர் யார்?' எனக் கேட்டார். 'இல்லை, யா ரஸூலல்லாஹ், எனக்கு யாரும் சொல்லித் தரவில்லை. நீங்கள் அல்லாஹ்விடம் உயர் அந்தஸ்தில் இருக்கிறீர்கள். நானும் சிந்தித்துப் பார்த்தேன் இவ்வுலகம் அழியக்கூடியது. அதில் எனது ரிஸ்க் அளக்கப்பட்டு விட்டது. எனவே, மறுமைக்காகவே கேட்க வேண்டும் என முடிவு செய்தேன்' எனக் கூறினேன். நீண்ட நேரம் நபியவர்கள் மௌனித்திருந்தார்கள். பின்னர், 'நிச்சயமாக நான் உனக்கு செய்து தருகிறேன். நீ அல்லாஹ்வை அதிகமதிகம் ஸுஜூத் செய்வதனூடாக எனக்கு உதவுவாயாக!" எனப் பதிலளித்தார்கள்.

*(அஹ்மத்)*

- 17 வயதையுடைய இளம் இரத்தத்தின் ஆசை...

- நபியவர்கள் இவன் யாரேனும் சொல்லிக் கொடுத்து சொல்கின்றானோ என நினைக்கத்தக்க சிறுவனின் வேட்கை...

- கிடைத்த வரப்பிரசாதத்திற்கு முன்னால் அழியும் உலக ஆசைகளை விட்டு விட்டு நிரந்தர மறுமைக்காக இறைஞ்சிய புத்திக்கூர்மையுள்ள ஓர் இளைஞனின் உளத் திருப்தி...

**பிரிவுத்துயர் உலகிலல்ல... சுவனத்திலும் வேண்டாம்!**

ஒரு மனிதன் பிறிதொருவரை நேசித்து விட்டால் அவருடனே தனது நேரத்தைக் கழிக்க விரும்புவான். அவரது பிரிவுத்துயர் இவரை வாட்டி எடுக்கும். இப்படித்தான் நபியவர்களின் பணியாட்களுள் ஒருவரான ஸவ்பான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஒருமுறை காலையில் வெளியேறிச் சென்ற நபியவர்கள் இரவாகியும் இன்னும் திரும்பாததையிட்டு அழுது கொண்டிருந்தார்கள். நபியவர்கள் வீடு திரும்பும்போது அழுது கொண்டிருக்கும் ஸவ்பானைக் கண்டு அழுகைக்கான காரணத்தை வினவினார்கள்.

'யா ரஸூலல்லாஹ்! நீங்கள் என்னைத் தனியே விட்டுச் சென்றீர்கள்' எனக் கூறினார்கள். 'இதற்காகவா அழுகின்றாய்?' என நபியவர்கள் மறுமொழியளித்தார்கள். 'இல்லை, யா ரஸூலல்லாஹ்! நீங்கள் என்னை ஒரு நாள்தான் தனிமையில் ஆழ்த்தினீர்கள். ஆனால், நாளை சுவனத்தில் நான் நுழைந்தால் சாதாரண தரத்திலே நான் இருப்பேன். நீங்கள் மிக உயர்ந்த ஸ்தலத்தில் இருப்பீர்கள். என்னால் உங்களை சந்திக்க முடியாது போய்விடும் அல்லவா? சுவனத்தில் உங்களை விட்டும் பிரிவதே என்னை அழுகையூட்டியது' எனக் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் 'ஸவ்பானே! மறுமையில் ஒரு மனிதன் தான் விரும்புபவருடனே ஒன்றுசேர்க்கப்படுவான் என்பதை நீ அறியமாட்டாயா?' என ஆறுதலளித்தார்கள்.

நாம் யாருடன் ஒன்று சேர்க்கப்படப் போகின்றோம்...?

சினிமா நடிக நடிகைகளுடனா...?

விளையாட்டு வீர வீராங்கனைகளுடனா...?

பாவிகளுடனா...? நல்லோர்களுடனா...?

ஏன், எமது மாநபியோடு நாம் ஒன்றுசேர்ந்திருக்க எமக்கு விருப்பமில்லையா...?

அந்த அன்பு வெறும் உள உணர்வு அல்ல...

இந்த நேசம் வெற்று வார்த்தை அல்ல...

இந்த நேசத்துடன் ஈமான், அமல் மற்றும் அர்ப்பணிப்பு அவசியம். இதற்கு உஹுத் போர்க்களம் சிறந்த எடுத்துக்காட்டு.

உஹுத் யுத்தம் மிக உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மலையடிவாரத்தில் அம்பெறி வீரர்கள் தமது தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படாததன் விளைவாக முஸ்லிம்களுக்கு பெருத்த சேதம் ஏற்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. முஸ்லிம்களில் பலர் பின்வாங்குகின்றார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் தாக்கப்படுகின்றார்கள். நபிகளாரைக் காக்கும் பணியில் பலர் முன்னணியிலிருந்தார்கள். அபூ தல்ஹா (ரழியல் லாஹு அன்ஹு) அவர்கள் எதிரிகள் பலரை அடக்கி னார்கள். அவர்கள் நபிகளாரை நெருங்குவதை விட்டும் கண்ணை இமை காப்பதைப் போன்று காத்தார்கள். நபிகளாருக்காக தனது உயிரையே அர்ப்பணிப்பதாக பிரகடனப்படுத்தினார்கள்.

அதே போர்க்களத்தில் அபூ தஜானா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் எதிரிகளின் அம்புகள் நபிகளாரை நோக்கி விரைவதை அவதானித்தார்கள். நபிகளாரின் மீது கொண்ட அன்பின் காரணமாக ஓடோடிச் சென்று அன்னாரைக் கட்டித் தழுவினார்கள். அவரது முதுகை அம்புகள் ஒவ்வொன்றாகப் பதம் பார்த்தன. அவர் சற் றேனும் விலகவில்லை. பெருமிதத்தோடு வேதனை களை சகித்துக் கொண்டார்கள்.

இவ்வாறு ஆண்கள் மாத்திரமல்ல, பெண்களும் நபிகளாரின் மீது கொண்ட அன்பின் காரணமாக அன் னாரைப் பாதுகாக்க முன்வந்தார்கள். உம்மு அம்மாரா எனும் புனைப் பெயரைக் கொண்ட நுஸைபா பின்த் கஃப் (ரழியல்லாஹு அன்ஹா) எனும் பெண்ணை உஹுத் போர்; களத்தில் கண்டதாக நபியவர்களே குறிப் பிடுகின்றார்கள்:

“நான் வலப்புறமாகவும் இடப்புறமாகவும் திரும் பியபோதெல்லாம் அங்கே என்னைப் பாதுகாத்து நிற் பவராக இப்பெண்ணையே கண்டுகொண்டேன்.”

இவர்கள் நபிகளாரின் மீது கொண்ட நேசம்...

இத்தகு பெண்கள் நபிகளாரின் மீது கொண்ட அன்பு...

இவ்வுலகில் அனைத்துக் கஷ்டங்களையும் தாங்கும் மனவலிமையை வழங்கியது.

**இப்படியும் ஒரு தாயா?!**

அதே உஹுத் போர்க்களத்தில் ‘இப்னு கம்ஆ’ எனும் ஒரு முஷ்ரிக் நபிகளாரைக் கொலைசெய்வதற்கு முன்னோக்கி வருவதை உம்மு அம்மாரா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் காண்கின்றார். உடனே அவனை இடைமறிக்கிறார். நபிகளாருக்கும் அந்த முஷ்ரிக்குக்கும் இடையில் வாளுடன் நின்றுகொண்டு அவனைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கின்றார். ஒரு பெண்ணுடன் போரிடுவது கோழைத்தனம் எனும் அரபிகளின் வழக்கத்தின்படி இந்த முஷ்ரிக்கும் இப்பெண்ணின் வாளுக்கு ஓங்கி ஓர் அடியைக் கொடுக்க அதுவும் தொலைதூரத்தில் சென்று விழுந்து விடுகின்றது. இப்போது நிராயுதபாணியாக நிற்கும் இப்பெண் ஓடிவிடவில்லை. நபிகளாரைக் காப் பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மேலும் மேலோங்கு கிறது. நிராயுதபாணியான இப்பெண் மீண்டும் அவனைக் குறுக்கிடுகின்றார். அவன் தனது வாளை எடுத்து அவரது தோள்புயத்தில் இரத்தம் பாயுமளவு ஓங்கி அடிக்கின்றான். அவ்விடத்திலே அவர் வீழ்ந்து விடுகின்றார். உடனே தனது தாயின் சப்தத்தை செவியேற்ற மகன் ஹபீப் பின் ஸைத் அவரது துயரத்தைத் துடைக்க ஓடோடி வருகின் றார். “என்னை விட்டுவிட்டு முதலில் நபியவர்களைக் காப்பாற்று” என தனது மகனுக்கு இந்நிலையில் ஏவுகின் றார். இதனை அவதானித்த நபியவர்கள் “உம்மு அம்மாராவே! நீ படுகின்ற கஷ்டங்களை யார்தான் சகிப்பார்கள்?” எனக் கூறினார்கள். இரத்தம் தோய்ந்த நிலையிலேயே “அல் லாஹ்வின் தூதரே! நான் இவற்றை சகித்துக் கொள்கின் றேன். எனினும், உங்களிடம் ஒன்று கேட்கின்றேன். உங்களுடன் சுவனத்தில் இருக்க வேண்டும்” உடனே நபிய வர்கள் “நீயும் உனது குடும்பத்தினரும் என்னுடன் சுவனத்திலிருப்பீர்கள்” எனப் பதிலளித்தார்கள்.

இதுவே மாநபியை நேசிப்பவர்களுக்கான வெகுமதி! இவர்கள் அன்னாரின் வழிகாட்டலைப் பின்பற்றி அன்னாரது வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு சுவனத்தை தாமும் தமது குடும்பத்தாரும் பெறுவதோடு நபிகளாரின் சகவாசத்தையும் பெற்றுக் கொள்வார்கள். எவ்வளவு மகத்தான பாக்கியம் இது! அல்லாஹ் எமக்கும் நஸீபாக்குவானாக!

**நபிகளாரின் மீது அன்பு வைப்பது எப்படி?**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பலரால் நேசிக்கப்படுகின்றவர். அன்னாரை நேசிக்காத எந்த ஒரு முஸ்லிமும் இருக்க முடியாது என உறுதியாகவே குறிப்பிட முடியும். எனினும், இது வெறும் வார்த்தைப் பிரயோகமல்ல. இந்த நேசத்துக்கு மாபெரும் வெகுமதி என்றால் இந்த நேசம் உண்மையானது என்பதற்கு நாம் செய்ய வேண்டிய நான்கு கடமைகள் இருக்கின்றன.

*01.* நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது அதிகமதிகம் ஸலவாத்து சொல்லுதல். முடியுமானால் அத்தஹிய்யாத்தில் ஓதும் ஸலவாத்தை அடிக்கடி ஓதுதல்.


*02.* நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வாழ்க்கை வரலாற்றை முழுமையாகக் கற்றல். இன்று நபிகளாரின் வாழ்வை பல கோணங்களில் ஆய்வு செய்து வெளியிடப்பட்டுள்ள நூல் நிறையவே உள்ளன. அவற்றைத் தேடிக் கற்றல். அன்னாரது முன்மாதிரியை விளங்குதல்.

*03.* நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது ஸுன்னாவைப் பின்பற்றுதல். அன்னாரது பண்பாடுகளை, குணநலன்களை எமது வாழ்வில் அச்சொட்டாகப் பின்பற்றுதல். இதுவே ஒரு முஸ்லிம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நேசிப் பதன் இறுதி அடைவும் அடையாளமும் ஆகும்.

*04.* முடியுமானால் அன்னாரது மதீனா பூமியை தரிசித்தல். அல்லாஹ் எம் அனைவருக்கும் இப்பாக் கியத்தை நஸீபாக்குவானாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆன் ஒரு தெய்வீக வேதம் என்பதற்கு ஆதாரம் என்ன?

|| மலையாள மூலம்: ஷெய்க் முஹம்மத் காரகுன்னு தமிழில்: ஜே. இஸ்ஹாக் ||

அல்குர்ஆன் மனிதனின் சிந்தனையை வெளிச்சமாக்கியது. மக்களின் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் முழுமையாக மாற்றி அமைத்து புதியதொரு நாகரிகத்தையும் கலாசாரத்தையும் கொண்ட ஒரு முன்மாதிரியான சமூகத்தை உருவாக்கியது அது. இம்முன்மாதிரி சமூகத்துக்கு வரலாற்றில் முன்பும் அதன் பின்பும் உதாரணங்கள் கிடையாது. அந்த சமூகம் எல்லாக் காலத்துக்கும் முன்மாதிரியாக இருக்கிறது.

அல்குர்ஆனில் 114 அத்தியங்கள் உள்ளன. 6000 இற்கும் சற்று அதிகமான வாக்கியங்கள் உள்ளன. இவ்வசனங்களில் 85000 இற்கும் மேற்பட்ட சொற்கள் உள்ளன. 324 ஆயிரத்துக்குக் கூடிய எழுத்துக்கள் உள்ளன. 30 பாகங்களாகவும் 540 பந்திகளாகவும் அது பிரிக்கப்பட்டுள்ளது.

அல்குர்ஆனின் பிரதானமான நோக்கம் மனித சமூகத்துக்கு வழிகாட்டுவதாகும். அதன் கதாபாத்திரம் மனிதனாகும். அவனுக்கு அறிவையும் சிந்தனையையும் வழங்குவதற்காக வரலாறு, தீர்க்கதரிசனங்கள், விஞ்ஞான உண்மைகள் போன்றவற்றையும் அது ஆங்காங்கே எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய விஞ்ஞான உண்மைகள் அன்றைய அறிவுக்கு எட்டாத விடயங்களாக இருந்தன. சிலவற்றை மாத்திரம் கீழே தருகின்றோம்.

*1. அல்குர்ஆனின் 21: 30 வசனம் இப்படிக் கூறுகிறது:*

*“(நபியின் கூற்றை) நிராகரித்தவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? வானங்கள், பூமி அனைத்தும் ஒன்றோடொன்று சேர்ந்திருந்தன. பிறகு அவற்றை நாம் தனித்தனியாகப் பிளந்தோம்.”*

வானமும் பூமியும் ஒன்றாக இருந்தன என்ற உண்மையை விஞ்ஞானம் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு அண்மையில்தான் கண்டுபிடித்தது.

*2. 21: 30 என்ற வசனத்தில் உயிர்கள் அனைத்தும் நீரில் இருந்து படைக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.*

*“ஒவ்வோர் உயிரினத்தையும் தண்ணீரிலிருந்து நாம் படைத்தோம் (நமது இந்தப் படைப்புத் திறனை) அவர்கள் ஏற்க மாட்டார்களா?” (21: 30)*

*3. அல்குர்ஆன் 41: 11 வசனத்தில் பிரபஞ்சத்தில் நட்சத்திரங்கள் எப்படி உருவாகின்றன என்ற விடயம் கூறப்படுகின்றது.*

*“வானத்தின் பக்கம் கவனம் செலுத்தினான். அப்போது அது வெறும் புகையாக இருந்தது.” (41: 11)*

பிரபஞ்சத்தின் மிகத் தூரத்தில் புகை கொண்ட தூசுப் படலத்தில் நட்சத்திரங்கள் உருவாகுவதை இன்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

*4. சூரியன் தனது ஓய்விடம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று அல்குர்ஆன் கூறுகிறது.*

*“மேலும் சூரியனும் (பிறிதொரு சான்றாகும்) அது தனக்குரிய இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இது பேரறிவு படைத்தவனும் வல்லமைமிக்கவனுமான இறைவனின் நிர்ணயமாகும்.” (36: 38)*

பிரபல்யமான வானியல் விஞ்ஞானி கொப்பர்நிகஸ் சூரியன் நிலையாக இருப்பதாகவே கருதினார். இப்போதுதான் விஞ்ஞானிகள் சூரியனும் நகர்ந்து செல்வதாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

*5. பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் படையைக் குறித்து பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே அல்குர்ஆன் 21: 32 ஆம் வசனத்தில் குறிப்பிடுகிறது.*

*“மேலும், வானத்தைப் பாதுகாக்கப்பட்ட ஒரு கூரையாகவும் அமைத்தோம். ஆயினும், அவர்கள் பேரண்டத்திலுள்ள சான்றுகளைக் கவனிப்பதேயில்லை.” (21: 32)*

அல்குர்ஆனை விமர்சிக்கின்ற எதிரிகள், இந்த வசனத்தைப் பரிகசித்து வந்தனர். ஆயினும் ஓசோன் படை பூமிக்கு முகடாக இருந்து ஆபத்தான விண்வெளிக் கதிர்ப்புக்களைத் தடுக்கின்றது என்ற விடயம் இன்று சர்வ சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்ததாகும். வானத்திலிருந்து விழும் விண்கற்களை எரித்து பூமியைப் பாதுகாக்கின்றது பூமியைச் சூழ்ந்துள்ள வாயு மண்டலம். ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்துள்ளதாக சூழலியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானிகள் எச்சரித்திருப்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது. அல்குர்ஆன் குறிப்பிடும் இந்த முகடுதான் பூமியில் உயிர் வாழ்க்கையைச் சாத்தியமாக்கியுள்ளது. வளி மண்டலத்தில் இருக்கும் சுவாசிப்பதற்கு அவசிய மான ஒட்சிசனின் அளவைப் பாதுகாப்பதும் இதன் பணிகளில் ஒன்றாகும்.

*''அவனே ஏழு வானங்களை அடுக்கடுக்காகப் படைத்தான்.'' (67: 2)*

6. மலைகளின் முக்கியத்துவம் குறித்து அல்குர்ஆன் பேசுகிறது.

*''நாம் பூமியை விரிப்பாக்கவில்லையா? மேலும் மலைகளை முளைகளாக ஊன்றி வைக்கவில்லையா?'' (78: 6-7)*

*''மேலும் பூமியில் நாம் மலைகளை ஊன்றி வைத்தோம்; அவர்களோடு அது சாய்ந்துவிடாமலிருப்பதற்காக!'' (21: 31)*

புவியின் சமநிலைக்கு மலைகள் அவசியம் என்ற பேருண்மையை அல்குர்ஆன் மேல்வரும் வசனங்களில் குறிப்பிடுகிறது. புவியியல் விஞ்ஞானிகள் மிக அண்மைக் காலத்தில்தான் இந்த உண்மையைக் கண்டுபிடித்தார்கள். புவியதிர்வுகளைத் தடுத்து புவியின் அமைப்பைப் பாது காக்கும் விடயத்தை மலைகள் செய்வதை தற்போது விஞ் ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

7. விரிகின்ற விண்வெளி குறித்து இருபதாம் நூற்றாண்டில்தான் ஹப்ல் (Hubble) பேசினார். ஆயி னும் அல்குர்ஆன் இதுபற்றிப் பேசுவதை அவதானியுங்கள்.

*''எமது ஆற்றலினால் நாம் வானத்தைப் படைத்துள்ளோம். நிச்சயமாக அதனை விரிவுபடுத்துவதற்கும் ஆற்றல் பெற்றுள்ளோம்.'' (51: 47)*

(மூலத்தில் 'மூஸிஃ' என்னும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதற்கு வலிமையுடையவன், விரிவுபடுத் துபவன் என்ற இரண்டு பொருள்கள் உள்ளன. பண்டைய விரிவுரைகளில் வலிமையுடையவன் என்று மொழி பெயர்க்கப்பட்டாலும் நவீன தப்ஸீர்களில் பிரபஞ்சம் விரிவடைவதையே இது குறிப்பிடுவதாக விளக்கப் பட்டுள்ளது. தப்ஹீமுல் குர்ஆன், The Noble Quran- By Dr. Muhsin Khan - மொழிபெயர்ப்பாளர்)

விண்வெளி விஞ்ஞானம் குறித்துப் படிக்கின்ற எவரையும் வியப்படையச் செய்யும் வசனம் இது.

8. பெண் தேனீக்களே தேனைச் சேகரிப்பதிலும் தேன் வதையை அமைப்பதிலும் ஈடுபடுகின்றன என்று 1876 இல் நெதர்லாண்ட் நாட்டு விஞ்ஞானி ஸோமடார்ம் (Somerdam) கண்டுபிடித்தார். இந்தப் பேருண்மையை 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே அல்குர்ஆன் குறிப்பிட்டு விட்டது.

*''மேலும் உம் இறைவன் தேனீக்கு இவ்வாறு வஹி அறிவித்தான். ''மலைகளிலும் மரங்களிலும் பந்தல்(களில் படரும் கொடி)களிலும் நீ கூடுகளைக் கட்டிக் கொள்! மேலும் பலதரப்பட்ட பழங்களிலிருந்து சாற்றை உறிஞ்சிக் கொள்! உன் இறைவன் சீராக அமைத்துத் தந்த வழியில் சென்று கொண்டிரு!'' அந்தத் தேனீக்களின் உள்ளே இருந்து பலவிதமான நிறமுடைய ஒரு பானம் வெளிப் படுகிறது. அதில் மக்களுக்கு நிவாரணம் இருக்கிறது. திண்ணமாக சிந்திக்கக்கூடிய மக்களுக்கு இதில் ஒரு சான்று இருக்கிறது.'' (16: 68-69)*

இங்கு தேனீயைப் பார்த்து اتَّخِذِي என்ற பெண்பால் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

9. மனிதர்களின் கைவிரல் அடையாளங்கள். இன்று வாழும் சுமார் 600 கோடி மக்களுக்கும் வெவ்வேறான கைவிரல் அடையாளங்கள் உள்ளன. இது ஓர் அற்புத மாகும். இதனையும் மனிதன் அண்மையிலேயே அறிந்து கொண்டான். அல்குர்ஆன் 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே இதனைக் குறித்து பின்வருமாறு பேசுகிறது:

*''அவனுடைய எலும்புகளை நம்மால் ஒன்று திரட்ட முடியாது என்று மனிதன் கருதிக் கொண்டிருக்கின்றானா? ஏன் முடியாது? நாமோ அவனுடைய விரல்களின் நுனியைக்கூட மிகத் துல்லியமாக அமைப்பதற்கு ஆற்றல் பெற்றுள்ளோம்.'' (75: 34)*

10. சூரியனை ஒளிவிளக்காகவும் சந்திரனை ஒளியைத் தெறிக்கச் செய்யும் பொருளாகவும் அல்குர்ஆன் குறிப்பிடு கிறது. பின்னைய காலங்களிலேயே மனிதன் இதனை அறிந்து கொண்டான். அல்குர்ஆன் 14 நூற்றாண்டு களுக்கு முன்பே இந்த விடயத்தைத் தெட்டத் தெளிவாக முன்வைக்கிறது.

*''பெரும் பாக்கியம் உடயவனாவன்; விண்ணில் உறுதியான மண்டலங்கள் அமைத்து ஒளி விளக்கையும் ஒளிர்கின்ற சந்திரனையும் பிரகாசிக்கச் செய்தான்!'' (25: 61)*

*''அல்லாஹ் எவ்வாறு ஏழு வானங்களை அடுக்கடுக் காகப் படைத்துள்ளான் என்பதையும் அவற்றில் சந்திரனை ஒளியாகவும் சூரியனை விளக்காகவும் அமைத்துள்ளான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா?'' (71: 16)*

11. மனிதப் பிறப்புக்கு ஆணின் விந்து மாத்திரமே அவசியமானது என்ற கருத்து 18ஆம் நூற்றாண்டு வரை நிலவியது. ஆணின் விந்து கருப்பையை அடைந்து அங்கு வளர்கிறது என்றே அதுவரை நம்பப்பட்டது. பின்னரே பெண்ணின் சினை முட்டை அவசியம் என்பது கண்டறியப்பட்டது. ஆயினும், அல்குர்ஆன் 6ஆம் நூற்றாண்டிலேயே ஆண்-பெண் சோடியிலிருந்தே மனிதனைப் படைப்பதாகக் குறிப்பிட்டு விட்டது.

*''மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம்.'' (49: 13)*

(மிகுதி அடுத்த இதழில்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாமிஆ நளீமிய்யா பயணம் நினைவிருக்கும் வரை சுகமான அனுபவம்

ஹிஷாம் ஹுஸைன்

2012 ஏப்ரல் 24. அதிகாலை 5:30 மணி. கொழும்பு செல்லும் பஸ் வண்டி. நானும் எனது மூத்த மகன் அலி இஸ்ஸத்தும்.

பேருவளை ஜாமிஆ நளீமிய்யாவில் நடைபெறும் புதிய மாணவர் அனுமதிக்கான நேர்முகப் பரீட்சையில் தோற்ற வேண்டும், சித்தியடைய வேண்டும், நளீமிய்யா வில் சேர்ந்து ஷரீஆத் துறையில் படிக்க வேண்டும்... இது மகனின் ஆவல். எனது கனவு.


ஏழு மணித்தியாலங்களாக மூன்று பஸ்கள் ஏறி நளீமிய்யாவின் தலைவாசலைக் கண்டோம். பகல் 12:30 அளவில் ஜாமிஆவின் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்த எழுத்துப் பரீட்சையில் 1:00 மணியளவில் இணைந்து கொண்டான். என் மகன் போல இன்னும் 85 மகன்கள். அவர்களின் கைகளில் வினாத்தாள், அழைத்து வந்தவர்களின் மனங்களிலும்... வினாக்கள்தான்.

எழுத்துப் பரீட்சையின் பின்னர் நேர்முகப் பரீட்சைக்கு முகம் கொடுக்க வேண்டும். நளீமிய்யா வெளியீட்டுப் பணியகத்தின் கீழ் வெளியில் தனது பெயர் அழைக்கப் படும் வரை காத்திருக்கும் மாணவர்கள். எல்லோர் கண்களிலும் ஒரே கனவு. அடிக்கடி மகனிடம் அறிவுரைகளை வழங்கிக் கொண்டே இருந்தேன். அவ்வப்போது முகத்தைப் பார்ப்பேன். அதில் எதையும் வாசிக்க முடியாது. ஆனால், உஷார் ஆக இருப்பதை உணர்ந்தேன்.

வர்களுக்கு ஒரு சலாம், ஓரிரு வார்த்தைகளுடன் நிறுத்திக் கொள்கின்றனர். கலாபீடத்தின் நிபந்தனைப் படிவம் எமக்கும் அதே அறிவுறுத்தலை வழங்கியிருந்தது.

ஒரு பகுதி மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நிறைவுற்றிருந்தது. மீதி மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு நளீமிய்யாவின் பணிப்பாளர் கலாநிதி சுக்ரி அவர்களும் பிரதிப் பணிப்பாளர் உஸ்தாத் அகார் முஹம்மது அவர்களும் பகலுணவின் பின்னர் வருகை தருகின்றார்கள். உஸ்தாத் அகார் முஹம்மத் என்னைக் கண்டார்... ''அஸ்ஸலாமு அலைக்கும் ஹுஸைன்.. சுகமா?'' என்றார். சிரித்தேன். முஸாஹபா செய்து கொண்டோம். பிறகு சந்திப்போம் எனக் கூறிக் கொண்டே நேர்முகப் பரீட்சை நடக்கும் மேல் மாடிக்கு சென்று விட்டார். எல்லோரும் என்னைப் பார்ப்பதாக எனக்குள் ஒரு பூரிப்பு.

தோற்றப் புள்ளி இல்லாத வட்ட வடிவமான பள்ளிவாசலைப் பார்க்கின்றேன். நளீமிய்யாவுக்கான தோற்றப் புள்ளியை வைத்தவரின் மன உறுதியை அதில் காண்கின்றேன். இங்கிருப்பவர்களுக்கு அடுத்த தலைமுறை பற்றிய கனவு. அன்று அவர் கண்டது தலைமுறைகளைத் தாண்டிய கனவு. யுக புருஷர்களைக் கண்ட இலங்கை மண்ணில், ஒரு யுகம் கடந்த புருஷர் மர்ஹூம் நளீம் ஹாஜியார். எனக்கு அன்னாரை அதிகமாகத் தெரியாது. புத்தளம் பெரிய பள்ளிவாசலில்




புத்தளத்திலிருந்து பலர் தம் பிள்ளைகளோடு வந்திருந்தனர். தனியாக வாகனம் பிடித்தும் முதல் நாள் கொழும்பில் உறவினர் வீட்டில் அல்லது ஜாமிஆவில் வழங்கப்பட்ட விடுதியில் தங்கியும் அன்றைய தினம் புறப்பட்டும் வந்திருந்தனர். தில்லையடி, திகழி, உளுக்காப்பள்ளம், கல்பிட்டி என பல ஊரவர்கள் இருந்தனர்.

நளீமிய்யாவில் பயிலும் புத்தளத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் எம்மைச் சந்தித்தனர். அறிமுகமான

உரையாற்றியதாக மங்கலான ஒரு நினைவு. அப்போது நான் மாணவன். எனது தந்தை அன்னாரைப் பற்றி நிறையவே கூறுவார். தந்தை கூறக் கேட்டவை, பிற்காலத்தில் அன்னார் பற்றி வாசித்தவை. எனது நினைவுகளிலும் நிறைந்து வாழுகின்றார் நளீம் ஹாஜியார்.

கரு மேகம் மூடிய பேருவளை வான் வெளி. பெரு மரங்கள் மூடிய நளீமிய்யாவின் புல்வெளி. குன்றின் மேல் ஏற்றப்பட்ட நூலகம், வகுப்பறைகள், தேகப் பயிற்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடம். தேசத்தின் வாசத்தை பன்னாட்டடவரும் நுகரச் செய்த நம் நாட்டு அறிஞர்கள், உலகறிந்த பேரறிஞர் களான அல்லாமா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹி மஹுல்லாஹ்), அல்லாமா யூசுப் அல்கர்ழாவி போன் றோர் உலாவிய மண்ணில் நானும் எனது மகனும்.... எங்களைப் போல் பலரும்.

வித்தியாசமான ஒரு வாலிபரை சந்திக்கின்றேன். கட்டுடல். களையான முகம். கலகலப்பானவர். அபிநயத் துடன் பேசுவார். இரண்டு மகன்களாம். பத்து வருடங் களாக உணவுடன் தங்குமிட வசதியும் வழங்கப்பட்டு நளீமிய்யாவில் ஊழியம் செய்வதாகவும் புரிந்து கொள் கின்றேன். அவரது பெயரை நான் கேட்கவில்லை. கேட் டாலும் அவர் கூற மாட்டார். ஆம்! அவரால் பேச முடி யாது. எத்தனையோ பேச்சாளர்களை உருவாக்கிய நளீமிய்யா பேச்சிழந்த ஒருவருக்கும் தொழில் வழங் கியுள்ளதே... ஒரு மனிதரால் இந்தளவுக்கு நன்மைகளை அள்ளிக் கொள்ள முடியுமா? ஒவ்வொரு மாதமும் நளீம் ஹாஜியாருக்கு ரமழான்தான்!

மகனின் நேர்முகப் பரீட்சையும் முடிந்து விட்டது. மாடிப் படியிறங்கி வருகின்றான். எந்த நிலையிலும் எதுவித ஊசலாட்டமும் காட்டாத முகம். இந்த விசயத்தில் மாத்திரம் என்னையும் மனைவியையும் தெரிந்தவர்கள் இது உங்களோட புள்ளதானா? எனக் கேட்பார்கள். அப் படி ஒரு சீரியஸ்னஸ்.

கலாநிதி சுக்ரி, உஸ்தாத் அகார் முஹம்மத் ஆகி யோர் வருகின்றனர். முகம் மலர முகமன் கூறிக் கொண்டு என்னை அழைத்த உஸ்தாத் அவர்கள், கலாநிதி அவர் களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். எனது மொழிபெயர்ப்பு மற்றும் எழுத்துப் பணிகள் குறித்தும் விசாரித்தார்.

எங்கள் இருவருக்கும் நளீமிய்யாவின் ஒவ்வொரு பகுதியையும் ஆவலுடன் காட்டினார், ஆசிரியர் சலீம் மரிக்காரின் மூத்த மகன். அவரோடு இணைந்து கொண்டார் ஜவ்பர் மரிக்காரின் மூத்த மகன். புகாரி நீர்த் தடாகத்தைக் காட்டி சொன்னேன், "இது உங்க அப்பாட ஞபாகமா கட்டுனது." ஒருவரையொருவர் முகம் பார்த்து கலகலவென சிரித்தனர். கிளை விரிந்த நளீமிய்யாவின் விதைப் பருவ விவசாயிகள். மர்ஹூம்களான மௌலவி தாசிம், புத்தளத்தைச் சேர்ந்த மௌலவி புகாரி... நான் அறியாத இன்னும் பலர்... உள்ளங்களை உழுத உத்தமர் கள்!

நளீமிய்யாவின் தலைவாசல் வரை வந்து எங்களை வழியனுப்பி வைத்தார் ஸலீம் மரிக்காரின் மூத்த மகன்.

மீண்டும் பஸ் பயணம். இரவு 7:00 மணி முதல் நள்ளிரவு 12:00 வரை. பகலும் இரவுமாக, பன்னிரெண்டு மணித்தியாலங்கள். பாதி நாள் சில்லுகளின் மேல் பயணித்திருந்தோம்.

"நீண்டு செல்லும்
வாழ்க்கைப் பயணம்

கனவுகள் நகர்த்தும்
நினைவுகள் நிறுத்தும்

நின்று பார்க்கும்
ஒவ்வொரு நொடியிலும்
இந்த நளீமிய்யா பயணம்

நினைவிருக்கும் வரை ஒரு
சுகமான அனுபவம்"

நபி வழியில் உம்ரா



June
Rs. 96,000

June 10th, 28th, July 14th, August 1th
என புனித ரமழான் முடியும் வரை நியாயமான கட்டணங்களுடன் நிறைவான சேவைகளை TGL மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மனத்திருப்தியோடு உங்களது இபாதத்துக்களை செய்திட TGL Travels
தொடர்புகளுக்கு.....

As-sheikh. Riskhan Musteen
0714788311 / 0777660398
Al Haj Rizmy : 0777801262 Bro Hijaz : 0777800388
Registered Hajj & Umrah Operator
Under the Department of Muslim Religious and Cultural Affairs.
(MRCA/Umrah/082/2012)
சவுதி அரேபிய ஹஜ் அமைச்சின் நேரடி அங்கிகாரம் பெற்ற நிறுவனம்
TGL Travels & Tours (Pte) Ltd.
Airline Ticketing Agent & Tour Operators
90, Chatham Street, Colombo 01.
Tel: +94115341134 Fax: +94112439622
E-mail: umrah-haj@tgl.lk
Web page: www.transgulf.lk
Since 1990
IATA Accredited Agent



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மகள் டீயொன்று கொண்டு வாங்க'' என வீட்டிற்குள் குரல் கொடுத்தவாறே தனது சாய்வுநாற் காலியில் மடங்கி உட்கார்ந்தார் ரஊப் ஹாஜியார்.

பாவம் ரவுப் ஹாஜி! இரண்டு மூன்று நாட்களா கவே அவருக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லாத அலைச்சல். களைப்பும் வேதனையும் அவர் முகத்தில் அப்பட்ட மாய் ஒட்டியிருந்தன.

இந்த வருடம் கோட்டா அளவை விட அளவுக்கதி கமானவர்கள் ஹஜ் போவதற்காக பெயர் கொடுத் திருந்ததால் இரண்டாவது தடவையாக, மூன்றாவது தடவையாக ஹஜ் செல்வதற்காக பெயர் கொடுத் திருந்த அநேகருக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. அந்த வரிசையில் ரஊப் ஹாஜியாரும் ஒருவர். இவ்வாறு வாய்ப்புக் கிடைக்காத மற்றவர்கள் அரசாங்கத்தையும் நமது அமைச்சர்களையும் வாயாரத் திட்டிவிட்டு தம்பாட்டில் இருந்து விட்டனர்.

ஆனால், ரஊப் ஹாஜியார் மட்டும் சும்மா இருக்கவில்லை. என்ன பாடுபட்டாவது இந்த முறை ஹஜ்ஜுக்கு போயே ஆகனும் என தீர்மானித்துக் கொண்டு காரியத்தில் இறங்கினார். ஹஜ்ஜுக்குப் போக வாய்ப்புக் கிடைக்காத ஏனையவர்களின் ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கினார்... முஸ்லிம் சமய பண்பாட் டலுவல்கள் திணைக்களப் பணிப்பாரை சந்தித்தார்... இறுதியாக நாளை ஒரு முஸ்லிம் அமைச்சரை சந்திப் பதாக ஏற்பாடாகியிருந்தது. தலைகீழாக நின்றாவது இந்த முறை ஹஜ்ஜுக்கு போயே ஆக வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டு செயற்பட்டார் ரஊப் ஹாஜி.

"ஏண்ட வாப்போவ்...!" சமையலறையில் இருந்து வந்த ரஊப் ஹாஜியாரின் மகள் பர்வினின் அலறல் சிந்தனைக் கடலில் மூழ்கியிருந்த ஹாஜியாரைத் தட்டியெழுப்பியது.

''ஏன்ட அல்லாவே... என்னைக் காப்பாற்றுங் களே..." பர்வினின் அலறலால் வீடே அதிர்ந்தது.

பர்வினின் சல்வாரில் பற்றிய நெருப்பு அவளின் முதுகு வரை ஏறியிருந்தது... அவளது அலறல் கேட்டு பக்கத்து அறையில் இருந்து ஓடிவந்த வேலைக்காரி அவளைக் காப்பற்றி விட்டாலும் முதுகு எரிந்த வேதனை யில் புழுவாகத் துடித்தாள் பர்வின்.

அடுத்த நிமிடம் பர்வினை ஏற்றிக் கொண்ட ரஊப் ஹாஜியின் கார் வைத்தியசாலையை நோக்கிப் பறந்தது. ஆனால், இதைவிடப் பெரிய பேரிடி தனக்கு அங்கே காத்திருக்கின்றது என்று ரஊப் ஹாஜியார் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

காரிலிருந்து இறங்கிய பர்வினை, இரண்டு பேர் வந்து தள்ளுவண்டியில் வைத்து உள்ளே அழைத்துச் சென்றார்கள்... அவளைப் பரிசோதிக்க உள்நுழைந்த டாக்டர் காயத்தை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, நன்றாகப் பரிசோதிப்பதற்காக சல்வாரைக் கழற்றச் சொன்னபோது பர்வினின் தலையில் இடி விழுந்தது.

"என்ன... சல்வாரைக் கழற்றனுமா?" பேயடித்தாற் போல அதிர்ச்சியுடன் கேட்டாள் பர்வின்.

'ம்.. அவசரமாக கழற்றுங்க...! அதை கழற்றாம எப்படி காயத்தைப் பார்ப்பது..." டாக்டர் அவசரப்படுத் தினார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஹஸனாத்

பாவம் பர்வின்! தந்தையின் துணையில்லாமல் பக்கத்துக் கடைத்தெருவுக்கு கூட அவள் போனது கிடையாது. போதாக்குறைக்கு பத்தாம் வகுப்பிலிருந்து முகம் மூடித்தான் ஹிஜாப் அணிவாள். அப்படிப்பட்டவளிடம் ஆடையைக் கழற்று என்றால்... உண்மையில் பர்வினுக்கு எரிந்துபோன முதுகைவிட உடையைக் கழற்றினால்தான் காயத்தைப் பார்க்க முடியும் என்ற விஷயம்தான் அதிகமாய் வலித்தது. இறுதியாக டாக்டரைப் பார்த்து அழாக்குறையாகக் கேட்டாள்.

"லேடி டொக்டர் யாருமில்லையா..!!"

"இருந்தது ஒரேயொரு லேடி டொக்டர் சுமனா... அவ லீவில் போய்விட்டா... அவசரமாக சல்வாரை கழற்றுங்க... காயத்துல துணி ஒட்டினால் அதைக் குணப்படுத்துவது ரொம்பக் கஷ்டம்..." அலட்சியமாய் சொன்னார் டாக்டர்.

"பாருங்க முதலாளி உங்கட மகள்ட கூத்த. உடுப்பைக் கழற்றினால்தான் காயத்தைப் பார்த்து மருந்து போடலாம். ஆனா, அவ உடுப்ப கழற்ற ஏலா துண்டு நிற்குறா... உங்கட மதத்துல காயத்திற்கு மருந்து போட கூட ஓர் ஆண் ஒரு பெண்ணைப் பார்ப்பதற்கு அனுமதியில்லையா? இப்படியென்றால் ஒவ்வோர் ஊருக்கும் ஒவ்வொரு லேடி ஹொஸ்பிடல் கட்டத்தான் வேணும்"

டாக்டரின் கதையைக் கேட்டு உண்மையிலேயே ரஊப் ஹாஜியார் உடைந்து விட்டார். தன் மகளை நினைக்கையில் ஒருபக்கம் பெருமையாக இருந்தாலும் இந்த ஆபத்தான நிலையில் அவளின் பிடிவாதத்தை நினைக்கையில் அவருக்கு சங்கடமாக இருந்தது. இந்தப் பெரிய ஊரில் ஒரு முஸ்லிம் பெண் டாக்டர் இல்லையே என்பதை நினைத்து அவரது மனம் வெட்கித் தலை குனிந்தது.

பாதையில் ஒரு பெண் நடந்து போகும்போது எவனாவது ஒருவன் அவளை சற்று வித்தியாசமாகப் பார்த்தால்... "பொம்புளப் பொறுக்கி" என மனதிற்குள் திட்டியவாறே விரைந்து நடக்கின்றாள். ஆனால், அவளே நோய்நொடி என வரும்போது தானாகச் சென்று தன் உடலை ஆண் வைத்தியர்களிடம் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம். எவ்வளவு பெரிய அவமானம் இது? ஒரு சில நேரங்களில் பெண்களின் முழு உடலையும் பார்க்கும் நிலைகூட டாக்டருக்கு வருகின்றதே!

இறுதியாக வலி குறைப்பு மருந்து எனக் கூறி மயக்க மருந்தைக் கொடுத்துவிட்டு சிகிச்சையை ஆரம்பிக்குமாறு டாக்டரிடம் கூறிவிட்டு வைத்தியசாலையை விட்டு வெளியேறினார் ரஊப் ஹாஜி. அவரின் மனதில் ஆயிரம் எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன... "அப்படியென்றால் ஒவ்வோர் ஊருக்கும் ஒவ்வொரு லேடி ஹொஸ்பிடல் கட்டத்தான் வேணும்" என்ற டாக்டரின் கூற்று திரும்பத் திரும்ப எதிரொலித்துக் கொண்டிருந்தது. எமது பெண்கள் இவ்வளவு பெரிய அவமானத்தினுள் அகப்பட்டு திண்டாடிக் கொண்டிருக்கையில் தான் இரண்டாவது தடவையாக ஹஜ் செய்ய புறப்பட்டதை நினைக்கையில் அவரின் விழியோரம் வியர்த்தது.

✦ ✦ ✦

மறுபடியும் ரஊப் ஹாஜியார் ஹஜ்ஜுக்குப் போக சான்ஸ் கிடைக்காத முதலாளிமாரின் வீடுகளில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தார். நமது பெண்களின் மானத்தைக் காப்பாற்றுவதற்காக ஒரு பெண்கள் வைத்தியசாலையைக் கட்டுவதற்கான நிதி சேகரிப்புக்காகவே இந்த முறை அவர் அலைந்து கொண்டிருந்தார். ஆனாலும், போதியளவு பணம் சேராததால் இரண்டாவது தடவை, மூன்றாவது தடவை உம்ரா செல்வோரின் வீட்டுக் கதவுகளைத் தட்டத் தொடங்கினார். இறுதியாக சேகரித்த பணத்தோடு தான் இதுவரை மகளின் திருமணத்திற்காக சேகரித்த பணத்தில் பாதியையும் சேர்த்து கூட்டிப் பார்த்ததில்... சந்தோஷப்படும் அளவுக்கு ஒரு கணிசமான அளவு பணம் சேர்ந்திருந்தது..

இனி...

இரண்டவாது கட்ட நடவடிக்கையில் இறங்கினார் ரஊப் ஹாஜி...

(O/L) பரீட்சையில் பாஸாகிய திறமையான பத்து மாணவிகள் தெரிவு செய்யப்பட்டு மருத்துவம் கற்க அனுப்பப்பட்டனர்... உயர்தர கற்றலின் பின் அரைகுறையுடன் படிப்பை நிறுத்திவிட்டு வீட்டிற்குள் முடங்கியிருந்த 30-40 யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு Nursing கற்க அனுப்பப்பட்டனர்... இவை எல்லாமே வைத்தியசாலைக்காக சேர்க்கப்பட்ட நிதியில்தான் நடந்தன... அதே கையோடு பெண்கள் வைத்தியசாலை கட்டுவதற்கான ஒரு நிலத்தை வாங்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டார் ரஊப் ஹாஜி.

காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்ட காலம் யாருக்காகவும் காத்து நிற்பதில்லையே...!

✦ ✦ ✦

10 வருடங்களின் பின்...

'ஷிபா பெண்கள் வைத்தியசாலை' இந்த நகரிலேயே பிரபலமான வைத்தியசாலை. வைத்தியர்கள், தாதிகள் என அனைவருமே முழுமையாக இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிந்து புன்முறுவல் என்ற பூங்கொத்துடன் நோயாளிகளை இருகரம் நீட்டி வரவேற்கையில் நோயாளியின் பாதி நோய் சொல்லிக் கொள்ளாமலேயே பறந்தோடிவிடும்.

இந்த வைத்தியசாலையின் தூய்மையை என்னவென்று சொல்வது? எங்கும் நறுமணம் கமழ்கிறது. காற்றில் கரைந்தவாறு உலாவந்து கொண்டிருந்த அழகிய கிராஅத் அந்த நறுமணத்துடன் கைகுலுக்கிக் கொண்டிருந்தது... ஒரு நந்தவனம் போல அந்த வைத்தியசாலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அழகிய பூந்தோட்டம் சூழ்ந்திருந்தது. இன, மத பேதமில்லாமல் இங்கு பெண்கள் வந்துபோய்க் கொண்டிருக்கின்றனர்.

அதோ வைத்தியசாலையின் பின்னால் நந்தவனத்தின் நடுவே உள்ள கட்டிடம் பெண்களுக்கான உளநலப் பிரிவு. நமது பெண்கள் ஆயிரம் பிரச்சினைகளை மனதில் புதைத்துக் கொண்டு பாதிப் பைத்தியங்களாய்த்தான் அலைந்து கொண்டிருக்கிறார்கள்... அவர்களை ஆற்றுப்படுத்தி அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லி, மற்றவர்களின் உளப்பிரச்சினைகளைத் தீர்க்கும் அளவுக்கு அவர்களை வளர்த்து அனுப்புவதுதான் இந்நிலையத்தின் குறிக்கோள்.

இதுமட்டுமன்றி, வெள்ளிக்கிழமைகளில் நேர காலத்தோடு பாடசாலைகள் விடுவதால் மாணவிகளுக்கு ஏற்பட்டுவந்த நேர இழப்பைக் கருத்திற் கொண்டு அந்த நேரத்தில் அவர்களுக்கு மருத்துவ ஆலோசனை வகுப்புக்களையும் இவ்வைத்தியசாலை நடத்துகின்றது. ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒவ்வொரு பகுதியிலும் இலவச மருத்துவ முகாம்களையும் இவ்வைத்தியசாலை நடத்தி வருகின்றது. இந்த மருத்துவ முகாம்களை நடத்துவதற்கு ஏதுவாக இந்நகரம் பல மருத்துவப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அந்தந்தப் பிரிவில் வாழும் குடும்பங்கள், அந்தக் குடும்பங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவர்களின் உடல் நிலை பற்றிய விபரங்கள் என அனைத்துத் தகவல்களும் அதற்குப் பொறுப்பான வைத்திய அதிகாரியிடம் உள்ளன.

வருடா வருடம் எந்தக் குடும்பம் தன் வீட்டையும் வீட்டுச் சூழலையும் அழகாகவும் நேர்த்தியாகவும் தூய்மையாகவும் பேணியுள்ளது என அவதானித்து அவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படுகின்றன. சுற்றுச் சூழலின் சுகாதாரத்தைப் பேணும் வகையில் பள்ளிவாசல் நிர்வாக சபை முதலாம் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளை சிரமதான தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

அதோ! சில கர்ப்பிணிப் பெண்கள் வைத்தியசாலையிலிருந்து குறிப்புக் கொப்பிகளுடன் இறங்கி வருகின்றார்களே... அவர்களுக்கு இந்த வைத்தியசாலையில் குழந்தை வளர்ப்பு பயிற்சிநெறி நடக்கின்றது. இந்த பயிற்சிநெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

சரி... இவ்வளவு நேரம் அஷ்ஷிபா வைத்தியசாலையின் புராணம் பாடியது போதும்... அதோ தாத்தா பயிற்சி நெறி முடித்து வருகிறாள். அவளை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும், நான் வருகிறேன்.

ஆ...

நம்மட ரஊப் ஹாஜியார் எங்கே என்றா கேட்டீர்கள்? அவர் மத்திய மாகாண ஊரொன்றில் இரண்டாவது தடவையாக ஹஜ் போக பெயர் கொடுத்தவர்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்கிறாராம் இன்னொரு பெண்கள் வைத்தியசாலை கட்டுவதற்காக... ஒருவேளை நீங்கள் அவரை சந்தித்தால் நான் ஸலாம் சொன்னதாகச் சொல்லுங்கள்.

நீங்கள் சிறந்த பெற்றார்! | நீங்கள் சிறந்த ஆசிரியர்! | நீங்கள் சிறந்த உளவியலாளர், உளவியல் ஆலோசகர்!
Together with IPI & HRD City College Introduces
PSYCHOLOGY TRAINING PROGRAMME
Higher Advance Certificate in Teaching Psychology and Psychosocial Activities
கல்வி அமைச்சின் உள சமூக தலையீடு மற்றும் ஆலோசனை சேவை தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்ப வடிவமைத்துள்ள பயிற்சி நெறி.

LECTURES
HYDER ALI - HRM
Rescource Development & Training Consultant
M.J. M SANEER (M.A)
B.A(Hons) PGDE, Dip. In Psychology
Programe Officer Psychosocial Intervention Unit Ministry of Education
Mrs. SHAMEELA YOUSUFALI
M.T. MOHAMED ASIM B.A-PGDE
Principal
M.J.M. MANSOOR
Primary Education Specialist
A.R.M. JIFFRY

பாடப்பரப்பு
Introducing Psychology
Child Psychology
Art, Music and Techniques of Creative activities
Class Room Psychology and Class Room Management
Psychosocial Activities
Psychometric Testing and Mapping
DURATION
03 MONTHS

TO WHOM யாருக்கு?
- க.பொ.த. சா/த, உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியோர்
- புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள்
- ஆசிரியர் தொழில் ஏற்கனவே ஈடுபடுபவர்கள்.
- ஆசிரியர் தொழிலை எதிர்பார்த்துக் காத்திருப்போர்
- முன்பள்ளி மற்றும் சமூக நிறுவனங்களில் சேவை செய்வோர்
- அஹதியா பாடசாலை ஆசிரியர்கள்

SECOND BATCH
ஆரம்ப திகதி : 2012 ஜூன் 16 திகதி
(பிரதி சனி 9.00 am - 3.00 pm)
பயிற்சிக் கட்டணம் : 12,000/- (3 தவணைகளில் செலுத்த முடியும்)
பயிற்சி நெறி இறுதியில் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற தரம் வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும்.

City College
Y.A. Complex (Top Floor) New Kandy Road, Mawanella. Tel : 035 2248099/ 0777 066 099



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே மாத அல்ஹஸனாத்தின் உள்ளடக்கம் கனதியானது

- ஏ.எச். றகீப் -

இலங்கை முஸ்லிம்களின் அச்சு ஊடக வலையமைப்பில் அல்ஹஸனாத் கடந்த 40 வருடங்களாக செய்து வரும் பங்களிப்பு காத்திரமானது. ஓர் இஸ்லாமிய இதழ் கொண்டிருக்க வேண்டிய அனைத்து அம்சங்களையும் அணிகோர்த்து துல்லியமாக வெளியிடும் அதன் சிறப்பு போற்றத்தக்கது.

தஃவாக் களம் தொடக்கம் பல தடங்களைத் தாண்டி தேசம் கடந்ததான அதன் விரிந்த பார்வை அதற்கே உரித்தான அதன் தனி ஆளுமையை வெளிக்கொணர்கின்றது.

கடந்த மே மாதம் வெளிவந்த அல்ஹஸனாத்தின் உள்ளடக்கம் கனதியாக அமைந்தது. தம்புள்ளை விழிப்போடு தொடங்கும் ஆசிரியர் பக்கம் இன உறவின் தீய சக்திகளுக்கு சாட்டையடி கொடுத்திருக்கிறது.

ஹதீஸ் விளக்கமும் தஃவா களமும் இன்றைய இஸ்லாமியப் பிரசார இயக்கங்கள், பிரசாரகர்கள் மீதான மறு வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

பின்த் யாஸீனின் சின்னத்திரை மீதான பார்வை, யதார்த்த நிகழ்வுகளையும் சின்னத்திரையின் மோசமான அவலங்களையும் தோலுரித்துக்காட்டும் அதேவேளை, இஸ்லாமிய அமைப்புக்கள் இது விடயத்தில் கூடிய கரிசனை செலுத்துவது குறித்தும் பேசுகிறது.

மேலும் வைர வரிகளைக் கொண்ட கவிதைகளோடும் உனதும் எனதும் ஆன முன்மாதிரிச் சமூக அமைப்பை கதையினூடு பின்னும் ஷாறாவின் சிறுகதை மற்றும் நம் தேசம் கடந்த பலஸ்தீன் மீதான கவனக் குவிப்புகளோடு பல்வேறு சுவையான அம்சங்களைச் சுமந்து வந்திருக்கும் மே மாத இதழ், கட்டாயமாக எமது பார்வைக்குரியது.

இன்றைய இஸ்லாமிய ஊடகங்கள் மறந்து போன முக்கிய அறிவுத் துறைகளான சமூகவியல், மானுடவியல், ஒழுக்கவியல், உளவியல் போன்ற சமூக விஞ்ஞானத் துறைகளை இஸ்லாத்தினூடு ஒப்புவிக்கும் செயற்பாட்டை கல்விப் பகுதியினூடாக அல்ஹஸனாத் சொல்லுமாக இருந்தால் அதன் பதிவுகள் இன்னும் கனதியாகும்.

மேலும் அல்ஹஸனாத் இடைநடுவில் மறந்துபோன புகைப்பட கவிதைப் பகுதியைத் (கவிதை நெய்தல்) தொடர்வது சிறப்பாக அமையும். ஏனெனில், இக்கவிதைப் பகுதியில் வரும் இருவரிக் கவிதைகளும் ஹைகூ கவிதையும் சொல்லும் அர்த்தம் அற்புதமானது.

# பெண்கள் ஆரோக்கியம்

- சாரணா கையூம்-

மே மாத அல்ஹஸனாத் இதழில், 'பெண்கள் ஆரோக்கியம்' பற்றி சிறந்த பல கருத்துக்களை சகோதரி டாக்டர் பிர்தௌஸியா நியாஸ் குறிப்பிட்டிருந்தார்.

மகப்பேற்று மருத்துவத்துறையில் பெண் வைத்தியர்கள் அபூர்வமாகவே காணப்படுகின்றார்கள். இந்நிலை மாற வேண்டியது இன்றைய தேவையாகும். அதற்கு டாக்டர் பிர்தௌஸியா நியாஸ் ஒரு விடிவெள்ளியாக அமையட்டும்.

குழந்தைகளைப் பெற்றெடுப்பதிலும் பேணுதல் இருக்க வேண்டுமென்ற நிலையைச் சில தம்பதிகள் மறந்து விடுகின்றனர். திருமணமாகி பத்து மாதத்தில் குழந்தை பிறக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கின்றனர். சிலர் குழந்தைக்காக நேர்ச்சை வைத்துக் கொண்டு அலைந்து திரிகின்றனர். ஆனால், குழந்தை பெற்றெடுப்பதற்கு முன் தாயின் ஆரோக்கியம் பற்றி கவலைப்படுவதே இல்லை.

சில தாய்மார் தலைப் பிரசவம் நடந்து மூன்று நான்கு மாதங்களில் அடுத்த குழந்தையைச் சுமக்கின்றனர். இது குழந்தை வளர்ப்புக்குப் பிரச்சினையாக அமைந்து விடுகிறது. ஒரு குழந்தைக்கும் அடுத்த குழந்தைக்குமிடையே குறைந்தது இரண்டு வருடங்களாவது இடைவெளி இருக்க வேண்டும்.

கருவுற்ற தாய்மார் கடைபிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்கள் பற்றி சிறந்ததொரு படிப்பினையை டாக்டர் பிர்தௌஸியா நியாஸ் முன்வைத்துள்ளார். இவ் ஆலோசனைகளுக்கேற்ப கர்ப்பிணிப் பெண்கள் நடந்து கொண்டால் சுகப் பிரசவம் ஏற்படுவதோடு, 'சீசர்' செய்து கொள்ளும் நிலை ஏற்படாமலும் தவிர்த்துக் கொள்ளலாம், இன்ஷா அல்லாஹ்.

அடிக்கடி அல்ஹஸனாத் இதழில் பிரசுரமாகும் மருத்துவக் குறிப்புக்கள் மிகவும் பயனுள்ளதாகவும் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் அமைந்துள்ளன, அல்ஹம்துலில்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகாஹ் சேவை

## மணமகன் தேவை

பதுளையைச் சேர்ந்த அரசாங்கப் பாடசாலை ஒன்றில் ஆசிரியையாகக் கடமையாற்றும் திருமணமாகாத மணமகளுக்கு 45 வயதுக்குட்பட்ட நல்லொழுக்கமும் நற்பண்புகளுமுடைய மணமகனை அவரின் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். பதுளையை நிரந்தர வதிவிடமாகக் கொண்டோர் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு: 0722507590**
**0723326634**

மொரட்டுவையைச் சேர்ந்த திருமணம் முடித்து தகுந்த காரணத்துக்காக விவாகரத்துப் பெற்ற 32 வயதுடைய மணமகளுக்கு 37 வயதுக்குட்பட்ட நல்லொழுக்கமுள்ள மணமகனை அவரது குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர். நியாயமான காரணங்களுக்காக விவாகரத்துப் பெற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம். மணமகளுக்கு சொந்த வீடு உள்ளது.

**தொடர்புகளுக்கு: 0777996829**

வத்தளையைச் சேர்ந்த திருமணம் முடித்து தகுந்த காரணங்களுக்காக மிகவும் குறுகிய காலத்தில் விவாகரத்துப் பெற்ற சிறந்த குடும்பப் பின்னணியையுடைய மணப்பெண்ணுக்கு (40 வயது, 11 வயதில் ஓர் ஆண் குழந்தை உள்ளது) பொருத்தமான துணையை அவரது குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர். மணமகளுக்கு வீட்டு வசதி உண்டு.

**தொடர்புகளுக்கு: 0775383942**

## மணமகள் தேவை

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்கப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றும் 26 வயதுடைய மார்க்கப்பற்றுள்ள மணமகனுக்கு நல்லொழுக்கமும் மார்க்கப்பற்றுமுள்ள மணமகளை அவரது பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகள் ஆசிரியையாகவோ அல்லது கல்வியியற் கல்லூரியில் பயிற்சி பெற்றவராகவோ இருப்பது விரும்பத்தக்கது.


**தொடர்புகளுக்கு: 0711698998**

மாவனல்லைப் பிரதேசத்தைச் சேர்ந்த கணக்கியல் துறையில் பகுதித் தராதரம் பெற்று சொந்தத் தொழில் புரியும் 32 வயதுடைய மணமகனுக்கு மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள 26 வயதுக்குக் குறைவான மணமகளை அவரது பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0714879292**
**இரவு 7.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்.**
Email: musthafai@hotmail.com

அல்ஹஸனாத் நிகாஹ் சேவைப் பகுதியில் விளம்பரம் செய்வோர் எமது அல்ஹஸனாத் இணைய தளத்திலும் (www.alhasanath.lk) நிகாஹ் விளம்பரத்தைப் பதிவு செய்து கொள்ள முடியும். அல்ஹஸனாத்தில் மாத்திரம் விளம்பரம் செய்ய 700.00 ரூபாவும் அல்ஹஸனாத் சஞ்சிகை, அல்ஹஸனாத் இணையதளம் ஆகிய இரண்டிலும் விளம்பரம் செய்ய 1000.00 ரூபாவும் அறவிடப்படும்.

**மேலதிக தொடர்புகளுக்கு: 0777874984**
**0713280568**



## இந்தச் சிறுமியின் சத்திர சிகிச்சைக்கு உதவுங்கள்

இல 56G, கஹட்டோவிட்ட, நிட்டம்புவவில் வசிக்கும் பெருந்தெருக்கள் திணைக்கள அதிகாரியான எம்.எஸ்.எம். ரஜப் அவர்களின் 1 வருடம் 8 மாத சிறுமியான ரபாஹாவுக்கு Cochlear Implant சத்திர சிகிச்சை செய்யப்படவுள்ளது. இச்சிறுமியின் செவிப்புலன் சீராகவும் பேசும் தன்மையைப் பெறவும் இச்சத்திர சிகிச்சை அவசியம் செய்யப்பட வேண்டுமெனவும் இதற்காக முப்பது இலட்சத்துக்கும் மேல் செலவாகும் எனவும் ENT வைத்திய நிபுணர் யசவர்தன தெரிவித்துள்ளார்.

எனவே, இச்சிறுமிக்காக பிரார்த்திப்பதோடு சிகிச்சைக்கு செலவாகும் பணத் தொகையைத் திரட்டிக் கொள்ள உதவுமாறும் குடும்பத்தினர் அன்பாய் வேண்டிக் கொள்கின்றனர்.

தொடர்புகளுக்கு: அஷ்ஷெய்க் எம்.எஸ். அப்துல் முஜீப் (கபூரி) 0773833816

**வங்கிக் கணக்கு: M.S.M. Rajab, B.O.C, BATTARAMULLA, A/C No: 8119441**

**WWW.SRILANKANNIKAH.COM**

இஸ்லாமிய இணையவழி துணை தேடல்...

பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்து, திருமண வாழ்வை சிறப்புற அமைத்து, ஈமானை பூரணமாக்க மிக நம்பிக்கையான சேவை

**108, Dematagoda Place, Colombo- 09 Tel: 0775-830172**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.என்.எம். இப்ஹாம்



எம்.எப்.எம். ரஸ்வின்

# மரணம் அது எப்போதும் வரும்!

வாழ்வின் மறக்க முடியாத நினைவுகள் எம்மில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். எம்.எப்.எம். ரஸ்வின், எம்.என்.எம். இப்ஹாம் ஆகிய இருவரும் கடந்த 2012.05.18ஆம் திகதி கண்டியில் நடைபெற்ற கார் விபத்தில் மரணமடைந்த மாவனல்லையைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள்.

வாழ்க்கையில் எத்தனையோ இலட்சியங்களை அடைந்து கொள்ள ஆசைப்பட்ட முகங்கள், பதினாறு வயது மட்டுமே நிரம்பிய பதினொராம் ஆண்டில் கற்றுக் கொண்டிருந்த மாணவச் செல்வங்கள்.

பெற்றோரின் எதிர்காலக் கனவுகள், ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஒரு கணப்பொழுதில் அவர்களின் உயிர் விடைபெற்றுச் சென்று விட்டது. இதுதான் வாழ்க்கையின் யதார்த்தம். மரணம் நேரம், இடம், வயது எதையுமே பார்ப்பதில்லை. நிச்சயிக்கப்பட்ட நேரத்தில் நிச்சயிக்கப்பட்ட விதத்தில் அது வந்தடையும்.

எம்மோடு அன்பாகப் பழகி உறவுகளோடு வாழ்ந்து விட்டுப் பிரிகின்றபோது அந்த துயரத்தை இலகுவில் மறந்துவிட முடியாது. இங்குதான் வாழ்கின்ற எம்மை அல்லாஹ் சோதித்துப் பார்க்கிறான். இக்கட்டத்தில் நாம் நிதானமிழந்துவிடக் கூடாது. மீண்டும் ஒரு நாள் சுவனத்தில் சந்திப்போம் என்ற நம்பிக்கை எம்மைப் பலப்படுத்த வேண்டும்.

மாணவர் சமூகத்துக்கும் ஒரு செய்தியை சொல்ல விரும்புகிறோம். மாணவர் பருவம் மரணத்துக்கு விதி விலக்கு இல்லை. வாழ்க்கையின் யதார்த்தங்களை உணர்ந்து கடமைகளின்பால் விரைய வேண்டும். மறுமையின் இலட்சியத்தை அடைந்து கொள்ள வேண்டும். இன்று அவர்கள் நாளை நாம். மரணம் எம்மை எப்போதும் எந்த இடத்திலும் என்ற எதிர்பார்ப்போடு வாழுங்கள்.

கண்கள் குளமாகிய நிலையில் என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து பிரார்த்திக்கின்றோம். "யா அல்லாஹ் அந்த மாணவர்களின் குற்றம் குறைகளை மன்னித்து அவர்கள் செய்த நற்கருமங்களுக்கு நிறைவான கூலி வழங்கி அவர்களை சுவனத்தின் சொந்தங்களாக ஆக்கி வைப்பாயாக!"

அவர்களுடைய பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் அல்லாஹ் அழகிய பொறுமையை வழங்குவானாக!

ஏ.எச்.ரியாஸ் முஹம்மத்

## சிறுவர் பூங்கா

*முதல் பரிசுக்குரியவர்:*

**ஐ. பர்ஹானா ஸீனத்,**
கணேவல்பொல - கெகிராவை

ஜூன் மாத அல்ஹஸனாத் இதழைப் பரிசாகப் பெறுவோர்

1. **எம்.எஸ்.என். ஹாதியா** - கடுகஸ்தோட்டை
2. **எம். ஷானாஸ்** - புத்தளம்
3. **பாத்திமா பர்வின்** - மாத்தளை
4. **பாத்திமா பஸ்ஹா** - களுத்துறை
5. **ரஹ்மதுந் நஜ்லா** - பாணதுரை
6. **எம்.டி. ஸப்ரினா** - கொழும்பு
7. **பாத்திமா அகீலா** - ஏறாவூர்
8. **ஏ.ஏ.எம். உமைர்** - இஸ்லாமிய்யா அ.க. வாழைச்சேனை
9. **பாத்திமா ஷப்னா** - கம்பளை
10. **ஹஸ்னா இனாமுல் ஹஸன்** - பேருவளை

**குறிப்பு:**

விடைகளை தபால் அட்டையில் (Post Card) மாத்திரம் எழுதி அனுப்பவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்மா ட்ரவல்ஸ்

SAUDI ARABIAN

## உம்றா சேவை (ஹஜ், உம்றா சேவைகள்)

இன்ஷா அல்லாஹ் 2012 பெப்ரவரி முதல் ரமழான் வரை




- சிறந்த அனுபவமிக்க உலமாக்களின் வழிகாட்டல்.
- மக்காவிலும் மதீனாவிலும் ஜமுஆத் தொழுகையை நிறைவேற்றும் வகையில் 12 நாட்கள் கொண்ட பயணம்.
- மக்கா, மதீனாவில் சிறந்த ஹோட்டல்களில் தங்குமிட வசதி.
- தரமான உணவு ஏற்பாடு.
- மிகச் சரியான விளக்கங்களுடன் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தரிசித்தல்.
- இன்னும் பல சலுகைகளை நம்பமுடியாத கட்டணத்தில் பெற அஸ்மா ட்ரவல்ஸ்
- சவூதி அரேபியா எயார்லைன்ஸ் நேரடி விமான சேவையில் மாத்திரம் சொகுசுப் பயணம்.

தொடர்புகளுக்கு:

உங்கள் பதிவுகளை முன் கூட்டியே செய்து கொள்ளுங்கள்.

- மௌலவி ஏ.ஜே.எம். றியாஸ் (திருகோணமலை மாவட்டம்) - 0777 41 21 68
- அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் (திருகோணமலை மாவட்டம்) - 0777 41 20 31
- மௌலவி. அப்துர் ரஊப் - (கொழும்பு) - 0773465345
- அப்துல் அஸீஸ் (அதிபர், அநுராதபுர மாவட்டம்) - 0776390374, 0255671894

# STUDYING IN BELARUSSIAN UNIVERSITIES

p.v83387



- INTERNATIONAL RELATIONS
- MEDICINE
- ENGINEERING



FOR MORE DETAILS CONTACT:



## BELARUS STUDY CENTERE

26/4, CIRCULAR ROAD, CHINA-FORT, BERUWELA

E-mail: fazli7@sltnet.lk MOB: 0777-687-212, 034-2276903




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கையில் **BCAS CAMPUS** மட்டுமே வழங்கும்

# CAD & BS

## Computer Aided Designing & Building Studies

**ரூபா. 75,000/- (குறைந்த பட்சம்) மாத வருமானம் தரும் தொழில் வாய்ப்புக்களை உத்தரவாதப்படுத்தும் 6 மாத தீவிர பாடநெறி**

அண்மையில் CAD & BS பாடநெறியைப் பூர்த்தி செய்த மற்றும் உடனடித் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்ட எமது மாணவர்களில் சிலர்



Weekend Part-Time Course Available In Kandy

மிக வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கட்டட நிர்மாணத் துறையில் கணணி படவரைஞர்களுக்கும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலை வாய்ப்புகள் நிறைந்து காணப்படுகின்றன. கணணி முறைப்படம் வரைதலில் சிறப்புத் தேர்ச்சியும் (Expert Knowledge in CAD) கட்டட நிர்மாணத் தொழில் நுட்பங்கள் தொடர்பான அடிப்படை அறிவும் கொண்டோர்களுக்கான ஏராளமான தொழில் வாய்ப்புக்களும் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்ற அதே வேளை கூடுதல் வருமானமும் உறுதிப்படுத்தப்படுகின்றது. இலங்கையில் கடந்த 10 வருடங்களாக உயர்கல்வி வாய்ப்புகளையும் தொழில் பயிற்சிப் பாட நெறிகளையும் வழங்கி வரும் முன்னணி நிறுவனமான BCAS மாத்திரமே வழங்கும் CAD & BS பாடநெறி உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் மேற் குறிக்கப்பட்ட திறன்களைப் பெற்றுத் தருவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட இரட்டைத் தகைமைகளையும் பெற்றுத் தருகின்றது. CAD & BS பாடநெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்கள் அனைவருமே உடனடித் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ள அதேவேளை பெரும்பான்மையானவர்கள் BCAS இன் உதவியுடன் மத்திய கிழக்கில் CAD Draftsman, Construction Supervisor, Technical Officers, Junior Quantity Surveyors, Land Survoyor Assistant ஆகிய தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

**BCAS இன் CAD & BS பாடநெறியைப் பூர்த்தி செய்த நாங்கள் இப்போது Qatar இல் பிரபல கட்டட நிர்மாண நிறுவனத்தில் பெறுமதியான தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளோம். ரூபா.100,000 இற்கும் அதிகமான சம்பளத்துடன் இப்பெறுமதியான வாய்ப்பினைப் பெற்றுத்தந்த BCAS இற்கு நாங்கள் எப்போதும் கடமைப்பட்டுள்ளோம்.**

M.றிஸ்வான் - கொழும்பு
K.தேவேந்திரன் - மட்டக்களப்பு
A.H.A.ஹசன் - புத்தளம்
சியாம் - புல்மோட்டை
M.அசாட் - காத்தான்குடி
றிகாஸ் ஜிப்ரி - தெஹிவளை

**British College of Applied Studies**

COLOMBO | DEHIWELA | KANDY | BATTICALOA | DOHA-QATAR

32, Dharmarama Road, Colombo 06.
Tel: 0112 501145, 0777 286676
344, Peradeniya Road, Kandy.
Tel: 0812 224731, 0777 888199
294 ¼, Trinco Road, Batticaloa
Tel: 065 2228451, 065 2228857

**Hotline 2 55 92 55**

www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in GPO/QD/27/NEWS/2012

Printed by AJ Prints (Pvt) Ltd 44, Station Road, Dehiwala




## Video Productions
High Definition **Video**



## Audio Productions
High Quality **Audio**



## Event Management
Well coordinate **Events**




## Web Solution
More Creative **Web Sites**

KNOWLEDGE
BOX

*Value Based Media Network*

**No 17, Council Lane, Dehiwela, Sri Lanka**
**Tel | Fax +94 11 271 5988**
info@Knowledgebox.com | www.Knowledgebox.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org